மங்கையர் மலர்

ஜூன் '90
விலை ரூ. 5/-



எங்க ஸ்கூலுக்கு டொனேஷனா? மூச்! — பேட்டி

''வியப்பாக இல்லையா? சிறந்தது தான் வேண்டும்; குறைந்தது வேண்டாம் என்று மறுத்து விட்டால், பெரும்பாலும் கேட்டதே கிடைத்துவிடுகிறது!''

— சாமர்செட் மாம்.

''நினைத்தது நடக்கும் என்கின்றீர்களே இன்று இரண்டாயிரம் ரூபாய் கிடைக்கட்டும் என்று நினைக்கின்றேன். கிடைத்து விடுமா?''

அவசரப்படாதீர்கள் அதற்குள்.

''எனக்குத் தெரியும். யாரும் என்னைப் புரிந்து கொள்ள மாட்டார்கள்'' என்று 15 ஆம் வயதிலும் லதா சொல்லியிருப்பாள். போன வாரம் தன் 27 ஆம் பிறந்த நாள் விழாவிலும் லதா அதைத்தான் சொல்லியிருப்பாள்.

— அப்படி ஒரு தொடர்ந்த எதிர்பார்ப்பைத்தான் நான் சொல்கிறேன். இந்நாள் வரையுமல்ல. இனியும் லதா நினைத்தது தான் நடக்கும்.

''நான் உழைப்பேன். கடைசி நிமிடத்தில் வேறொருவர் அதன் பலனைத் தட்டிக் கொண்டு போவார்.''

''எனக்கும் பணத்துக்கும் ராசி இல்லை.''

''நான் என்னதான் செய்தாலும் கெட்ட பெயர்தான் கிடைக்கும்.''

— இப்படியெல்லாம் ஒருமுறை அல்ல, பல முறை சொல்லியிருப்பார்களே சிலர்; அந்தச் சிலர்க்கு (அல்லது பலர்க்கு) அப்படித்தான் நடக்கும். அதுதான் அவர்கள் கேட்டவை.

சில நினைவுகளை — சில வேண்டாத பயங்களை — தொடர்ந்து விடாப்பிடியாக வைத்திருப்பானேன்? அப்படி வைத்திருப்பதாலே அவை உருவாகுவதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொள்வானேன்?

நாம் நினைப்பதைத்தான் பிறரும் நினைக்கிறார்கள்..

'வேலை கிட்டத்தட்ட முடிந்து விட்டது. வெற்றியை வேறு யாராவது தட்டிக் கொண்டு போய் விடக் கூடாதே' என்று நீங்கள் எண்ணும் போது. அந்த எண்ணம் ஒரு சைகையாக, ஒரு சிறு சொல்லாக, ஒரு செயலாக வெளிப்படுகின்றது. எதிரில் உள்ளவரும் உங்களைப் போலவே போட்டி மனப்பான்மையோடு சிந்திக்கின்றார். 'ஓ, இதை விடக் கூடாது' என்று உந்தப்படுகின்றார். நீங்கள் பயந்தது நடந்தே விட்டது.

வெற்றியை அப்படியே விட்டு விட்டிருப்பீர்களானால், தேடுவாரற்று அது கிடந்திருக்கும். அதனை எடுத்து, சொந்தக்காரர் யார் என்று தேடி உங்கள் கையில் கொடுத்திடுவார்கள்! இதுதான் உலகம்!

'நீ சிரித்தால், நான் சிரிப்பேன், சிங்காரக் கண்ணே' என்ற பாடலை மாற்றி, 'நான் சிரித்தால் நீ சிரிப்பாய், சிங்காரக் கண்ணே' என்றும் பாடலாம். ஏனென்றால், நாம் சிரித்துக் கொண்டிருக்கும் போது நம் முன்னால் உள்ளவர் மனத்திலும் — அதை ஒரு கண்ணாடி என்று சொல்லலாம் — சிரிக்கும் உணர்வே மேலோங்குகின்றது; பிரதிபலிக்கின்றது. அவரும் முகமலர்ந்து பேசத் தொடங்குகின்றார்.

இவர் திறமைசாலி என்னும் எண்ணத்தோடு ஒருவரை அணுகுவீர்களானால், உங்கள் கண்ணால், சொல்லால், நடையால் அவரைப் பாராட்டி விடுகிறீர்கள். அடுத்தவர்களைப் பாராட்ட வேண்டும் என்னும் ஆர்வம் அவர்க்கும் (யார்க்குத்தான் காப்பியடிக்கும் குணம் இல்லை?) பிறந்து விடும். அவர் உங்களைப் பாராட்டுவார், உங்களிடம் அவர் காணும் திறமைகளுக்காக. இந்த மகிழ்ச்சியில் நீங்கள் இன்னொருவரையும் பாராட்டுவீர்கள். அப்படியே அது பெருகிக் கொண்டிருக்கும்.

இங்கு கேட்கும் ஒலியே அங்கும் கேட்கின்றது (எதிரொலிக்கின்றது) என்றாலும் சரி —

நினைத்தது நடக்கும்



ஒரு நினைவு அதற்கொத்த நினைவையே பிறரிடம் தூண்டுகின்றது என்றாலும் சரி —

நம் எண்ணம் நம்மிடமே வந்து சேர்கின்றது என்றாலும் சரி —

ரகசியம் இதுதான்: நல்லதை எதிர்பார்க்கும் போது நல்லதுதான் நடக்கின்றது.

ஒத்துழைப்பு தருவார் என்ற நம்பிக்கையோடு தீபா நூலக நிர்வாகியை அணுகுகின்றாள். அவர் எல்லோரிடமும் முதலில் சொல்லும் 'எனக்கு இப்போது நேரமில்லை' என்ற வாக்கியம் அவளுக்கு மறுப்பாகத் தெரியாது. நம்பிக்கை இருந்ததனால் ஒரிரு நிமிடம் பொறுமையோடு இருக்கின்றாள். 'அவருக்கு என்ன அவசரமோ' என நிதானமாக நிற்கின்றாள். இறுதியில் ஒத்துழைப்பு கிடைக்கும் சூழ்நிலை ஏற்பட்டு விடுகின்றது.

ஏனென்றால் நம் எண்ணத்திற்கு மாறானதை எதையுமே நாம் கணக்கில் எடுப்பதில்லை. ஒத்துழைப்பார் என்ற எண்ணமே தீபா மனத்தில் ஆழமாக இருந்ததால், நிர்வாகியின் கோபதாபங்கள் அவளைப் பாதிக்கவில்லை. அவரையும் மீறி மனிதாபிமானத்தோடு வெளிப்பட்ட சில நல்ல சைகைகளைப் பெரிதாக எடுத்துக் கொண்டு, தன் எண்ணத்தைத்தான் உறுதிப்படுத்திக் கொண்டாள். வெற்றி கண்டாள்.

நான் தோல்வியையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் போது, என் வீட்டு வாசலில் வந்து நிற்கும் வாய்ப்பைக் கூட கண்டு கொள்ள மாட்டேன். எண்ணியதைத்தான் எண்ணம் எங்கும் தேடுகின்றது. மற்றதைப் பார்க்க அதற்கு நேரமில்லை போலும்!

''சரி. நினைத்தது நடக்கும் என்று சொன்னபோதே, நிலையான எண்ணமாக இருந்தால்தான் பலிக்கும் என்றீர்களே. நிலையான எண்ணத்திற்கு எங்கு போவது?'' என்று நீங்கள் யோசிக்கலாம். அதற்கும் ஒரு வழி இருக்கின்றது.

''என் குழந்தைகள் என் சொல் கேட்பார்கள்.''

''எனக்கு நல்ல நண்பர்கள் கிடைப்பார்கள்.''

''படிப்படியாக என்னால் இந்தத் திறமையை வளர்த்துக் கொள்ள முடியும்''

— இத்தகைய நல்ல எண்ணங்களை முதலில் சிறிதளவுதான் நினைக்க முடியும். உடனே பலன் கிடைக்காத போதும், இதற்கு மாறான எண்ணங்கள் வரும்போது அவற்றைப் பெரிதுபடுத்தக் கூடாது. பொருட்படுத்தக் கூடாது. அவற்றில் நம்பிக்கையைச் சேர்க்கக் கூடாது. மனத்தில் வேரூன்ற — ஒட்டிக் கொள்ள — அனுமதிக்கலாகாது (அனுமதித்தால் அவை வலுப்பட்டு விடுமல்லவா) அவற்றை அலட்சியப்படுத்த வேண்டும்.

வேண்டாத எண்ணங்கள் வந்து போகட்டும். ஆனால் நம் எண்ணங்களாக அவை மாறலாகாது.

எல்லாமே பழக்கத்தைப் பொறுத்தது. அலட்சியப்படுத்துவது நமக்குத் தெரியாத விஷயம் இல்லை. வேண்டாத எண்ணங்களைத் தொடர்ந்து அலட்சியப்படுத்திக் கொண்டிருந்தால், 'பாச்சா பலிக்காது' என்று தாமாகவே நாளடைவில் விலகிப் போய் விடும்.

இதற்குள் நல்ல எண்ணங்கள் நிலைத்த எண்ணங்களாகி விடும். நினைப்பது நடக்கும்.

— பத்மாவதி செல்வராஜ்.


ஃபாரெக்ஸ்-எக்
பாலைப் போன்றே
ஜீரணிக்க எளிது!
ஆறு மாதம் முதற்கொண்டு
உங்கள் குழந்தைக்கு முட்டை,
பால் இரண்டிலுமே உள்ள புரதச்
செழுமையை ஒரே ஆகாரத்தின்
மூலம் அளியுங்கள்.
உங்கள் குழந்தையின்
மென்மையான செரிக்கும்
நிலைக்கேற்றவாறு முன்கூட்டியே
பக்குவப்படுத்தப்பட்டுள்ள
ஃபாரெக்ஸ்-எக் அவன்
எளிதில் ஜீரணிக்கக்
கூடியதாகும்.
farex-egg
புரதம் செறிந்தது
ஃபாரெக்ஸ்:
சுவையுடன் வளரும் வழி.
Gx/188.90 Tml.



நாம் கடைகளில் வாங்கும் சாமான்களில் எண்ணெய், டால்டா போன்றவற்றை பிளாஸ்டிக் கவர்களில் வாங்குகிறோம். அவைகளை வீணாக்காமல் அழகிய பூக்களை நீங்களே எளிதில் தயாரித்து உங்கள் வரவேற்பறையை அலங்கரிக்கலாம். எல்லோருக்கும் எளிதில் கிடைப்பது பாமாயில் கவர். அது மஞ்சள் நிறமாக இருப்பதால் சூரிய காந்திப் பூ செய்து பூச் சாடியில் வைத்தால் பார்க்க அழகாக இருக்கும்.

சூரிய காந்தி பூக்கள்

தேவையான பொருட்கள்:


பாமாயில் கவர் — 3 (6 பூக்கள் செய்ய)
கருப்பு உல்லன் — 2 சிறிய கண்டுகள்
பச்சை நிற ட்யூப் ஒயர் — 2 மீட்டர்.
கருப்பு நிறத் துணி — சிறிதளவு.
பச்சை நிற பிளாஸ்டிக் கிளாத — ¼ மீட்டர்.
பூக்கள் செய்ய உபயோகிக்கும் கம்பி — 5 மீட்டர்.
மஞ்சள், பச்சை நிற ஆயில் பெயிண்ட் அல்லது ஃபேப்ரிக் பெயிண்ட் அட்டை, ஃபெவிகால் முதலியன.


செய்முறை:


முதலில் பாமாயில் கவர்களை சுத்தம் செய்யவும். சிறிதளவு மண்ணெண்ணெய் கொண்டு தடவினால் எழுத்துக்களும் மறைந்து விடும். காய்ந்ததும் கனமான புத்தகத்தின் அடியில் மடிக்காமல் வைத்து விட்டால் சுருட்டிக் கொள்ளாமல் இருக்கும்.


முதலில் சுமாராக 4'' விட்டமுள்ள வட்டமாக இரண்டு வட்டங்களை கத்தரித்துக் கொள்ளவும். அதை நான்காக மடித்து மறுபடியும் இரண்டாக மடித்தால் எட்டு சம பாகங்கள் கிடைக்கும். அதில் படம் 1ல் காட்டியுள்ளபடி வரைந்து வெட்டிக் கொள்ளவும். இதே போல் இரண்டையும் செய்து கொள்ளவும். பிறகு பிரித்தால் பதினாறு இதழ்களாக அமைந்திருக்கும். இவை இரண்டின் நடுவிலும் ஃபெவிகால் தடவி ஒட்டி விடவும். (படம் 2ல் காட்டியுள்ளபடி)

பிறகு 2'' விட்டமுள்ள வட்டத்தை ஒரு




படம் : 1


படம் : 2



படம் : 3

அட்டையில் கத்தரித்துக் கொண்டு நடுவில் சிறிய துவாரம் செய்யவும். பிறகு தண்டு பாகம் அமைக்க சுமாராக ஒரு அடி நீளம் இருக்கும்படியாக கம்பியை வெட்டிக் கொண்டு பச்சை நிற ட்யூப் ஒயரில் நுழைத்துக் கொள்ளவும். இதை அட்டையில் செய்து வைத்துள்ள சிறிய துவாரத்தில் நுழைத்து மடித்து விடவும் (படம் 3). பிறகு ஒட்டி வைத்துள்ள பூவின் இதழை அட்டையில் ஒட்டி விடவும். கருப்பு உல்லனை எடுத்து மூன்று விரல் அகலத்தில் விரலைச் சுற்றி 35, 40 முறை சுற்றவும். பிறகு வெளியே எடுத்து நடுவில் நன்றாக இறுக்கமாகக் கட்டி விடவும். பின்மேலுமிரு முன்னமடிப்புகளை




கத்தரித்து நன்றாக வட்டமாக பரவலாக இருக்கும்படி செய்து பூவின் நடுவில் ஒட்டி விடவும். பிறகு கருப்புத் துணியில் 1'' அகலத்தில் வட்டத்தை கத்தரித்துக் கொண்டு உல்லனின் நடுவில் பொருந்துமாறு வெட்டி விடவும். நன்றாகக் காய்ந்த பிறகு மஞ்சள் வர்ணத்தில் புள்ளிகள் அமைக்கவும். நன்றாக 4, 5 மணி நேரம் காய்ந்த பிறகு கனமான புத்தகத்தின் அடியில் ஒரு நாள் முழுவதும் வைத்து விடவும். இதற்கு இலைகள் செய்ய வேண்டுமல்லவா? பச்சை நிற பிளாஸ்டிக் க்ளாத்தில் இலை வடிவத்தை வரைந்து கத்தரித்துக் கொண்டு பச்சை நிறத்தில் இலையில் நரம்புகளை வரையவும். இதுவும் நன்றாகக் காய்ந்த பிறகு ட்யூப் ஒயரை 2'' நீளத்தில் வெட்டிக் கொள்ளவும். இவைதான் இலைகளுக்குக் காம்பாக அமையும். ஒவ்வொரு இலையையும் காம்பின் நுனி பாகத்தில் அதாவது ட்யூப் ஒயரின் மேல் வைத்துத் தைத்து விடவும். இதே மாதிரி எல்லா இலைகளையும் செய்து கொள்ளவும். பிறகு கம்பியை 3'' நீளத்தில் வெட்டிக் கொண்டு ஒவ்வொரு காம்பிலும் இலையின் அடிப்புறமாக செருகவும். மீதியுள்ள 1'' நீளத்தை செடியின் தண்டு பாகத்தில் தேவையான இடத்தில் நுழைத்து விடவும். செடியில் பூவுடன் அழகிய இலைகளும் காட்சியளிக்கும். பூக்களின் இதழ்களில் மஞ்சள் நிறத்தில் ஷேட் கொடுத்தால் மேலும் பார்க்க அழகாக இருக்கும்.

இதே போல் கவர்களின் நிறத்திற்கேற்ப உங்கள் கற்பனைத் திறத்தால் ரோஜா, இருவாட்சிப் பூக்கள், ஷண்பகப் பூக்கள் போன்ற நமக்குப் பிடித்த விதவிதமான பூக்களைச் செய்து பூச்சாடியில் வைத்து அலங்கரிக்கலாம்.

— பத்மினி இராகவேந்திரன்.



Jyoti
சமையலறை ராணி
"இது ஒரு மிக்ஸர் மட்டுமல்ல ... இது சமையலறைக்கு ஏற்ற ஓர் சிறந்த யந்திரம்!"
• மூன்று ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஜாடிகள். மற்றும் ஐந்து பிளேடுகள்.
• உடையாத மேல் மூடிகள்.
• மிகச் சக்திவாய்ந்த மோட்டார்-600 வாட் 60 நிமிடங்கள் தொடர்ந்து ஓடக்கூடியது.
• ஒரே தகட்டாலான ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஜாடிகள்.
உத்திரவாதம்
24
மாதங்கள்
Jyoti MARKETING
124, Mint Street Madras – 600 079
Ph: 529240
Life long Free Service!
madhu3291ad



மலரம்மா வளருகிறார்!

* 'விருந்தோம்பல்' கட்டுரையைப் படித்து விட்டு விழுந்து விழுந்து சிரித்ததில்... விருந்து சாப்பிடாமலேயே எங்களுக்கு வயிற்றுவலி வந்து விட்டது.

வேலூர் — 6. ரமா சந்திரசேகர்.

* அன்றாட வாழ்வில் அதிகரித்துக் கொண்டே வரும் நமது ஆடம்பரச் செலவுகளைக் கட்டுப்படுத்தப்பட வேண்டிய அவசியத்தினையும், அதைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு ஆண்களைக் காட்டிலும் பெண்களுக்கு அதிகம் உள்ளது என்ற அனுபவப்பூர்வமான உண்மையையும் தெளிவாக்கியிருந்தார் கமலநாதன் தனது 'எங்கே போகிறது பணம்? என்ற கட்டுரையில்.

தோட்டக்குறிச்சி. இரா. வளையாபதி.

* ஆளியக்காரர்களின் உலகத் தலைவியைப் பற்றிய கட்டுரை (எந்தப் பத்திரிகையிலும் இதுவரை படிக்காத புதிய தகவல்களுடன்) எங்களை பிரமிப்பிலாழ்த்தி விட்டது...!

அயன்புரம். த. சத்தியநாராயணன்.

* 'கோவில்கள் மூலமாக அழகு' கட்டுரை அற்புதமாக இருந்தது. இந்தக் காலத்து பெண்கள் எதையும், ஏன் எதற்கு என்று தெரியாமல் செய்ய மாட்டார்கள். இதைப் படித்த பின்பாவது.. இதன்படி செய்தால் அவர்களுக்கும் நல்லது.

விருத்தாசலம், ஜி. சாந்தா ராஜ்.

* அனுராதா ரமணன் எழுதிய ரவிக்கை மகாத்மியம் படித்துச் சிரித்துச் சிரித்து வயிறே வலித்து விட்டது. அம்மா, பெண்கள் இருக்கும் என்னைப் போன்ற நடுத்தர வர்க்கத்துக் குடும்பத்தினருக்குச் சரியான டைலர் அமையாத போது ஏற்படும் பிரச்னைகளை அழகான முறையில் விவரித்து அருமையான படைப்பு ஒன்றை அளித்த அவரைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை.

திருப்பரங்குன்றம், டி. எஸ். லலிதா.

* ராஜியின், நம் வீடு எத்தனை பாதுகாப்பானது என்ற கட்டுரை குழந்தைக்குப் பாலூட்டி வளர்த்தால் மட்டும் போதாது; அது ஆரோக்கியமாக வளர வீட்டின் சுற்றுப்புறங்கள் எப்படியிருக்க வேண்டும், குழந்தை வளர்ப்பின் போது தாய்மார்கள் அவசியம் கவனிக்க வேண்டிய பாதுகாப்பு முறைகளையும் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

சென்னை — 78. மேகலா மாணிக்கம்.

* ''ஊருக்கே செய்றாங்க'' சிறுகதை பணியைப் பங்கு போட்டுச் செய்வதில் பரிமளிக்கும் பாச உணர்வையும் உடல்நலத்தையும் படம்பிடித்துக் காட்டியது. உழைப்புக்கு வயது தடையல்ல என்பதையும் உரைத்தது.

ஈரோடு. டி. சந்திரன்.

* 'பிகா' நோய் என்றால் என்ன என்பதையும், இந்த நோயிலிருந்து குழந்தைகளை காப்பது எப்படி என்பதையும் தெளிவாக மங்கையர் (கள்) மலர் மூலம் அறிந்து கொண்டோம்!

சீர்காழி. ஜெயலக்ஷ்மி ஷண்முகம்.

* குழந்தை வீட்டில் தவழப் போவதை எண்ணி மகிழும் ஒவ்வொரு அன்னைக்கும் வீட்டில் உபயோகப்படுத்தும் பொருட்கள் குழந்தைகளுக்கு ஆபத்தை ஏற்படாதவாறு பாதுகாக்க முன்னெச்சரிக்கை முறையைக் கற்றுத் தந்த ராஜியின் கட்டுரை பயனுள்ளவை. படித்தறிய வேண்டியவை.

திருநெல்வேலி. சுந்தர்.

* மலரம்மா இருக்க இருக்க வளருகிறார் (பக்கம்) வாழ்த்துக்களை கூறுகின்றோம்.

திருச்சி — 2. ஆற்காடு எழிலன்.



DDA/LM/TAM/002/MM



மலரம்மா பேசறேன், குழந்தைகளுக்கு லீவு முடியப் போகுது இல்லையா? நிறைய விளையாடி இருப்பீங்க. பலபேர் வெளியூர் போயிருப்பீங்க. ரொம்ப உபயோகமா லீவு முடிஞ்சுதா? நிறைய பேர் ஏதாவது வகுப்புக்களுக்குப் போய்ப் புதிதாகக் கற்றுக் கொண்டீர் களா? உங்களுக்கு ஒரு போட்டி வைக்கட்டுமா...?

'நான் வெளியூர் போன போது...!'

இந்தத் தலைப்பில் கட்டுரை எழுதுங்க. நீங்க வெளியூர் போயிருக்கிறப்ப பல சம்பவங்கள் நடந்திருக்கும். சில சந்தோஷமா இருந்திருக்கும். பிறர் துன்பத்தைப் பார்த்து இருப்பீங்க. நீங்களே சிக்கலில் மாட்டியிருக்கலாம். சிறந்த மூன்று கட்டுரைகளைத் தேர்ந்தெடுப்போம்!


'விடுமுறையில் நான்...!'

நீங்க வெளியூர் போகாட்டாலும் இந்த விடுமுறையைச் கலைபடக் கழிச்சிருக்கலாம். சிலர் பொம்மை செய்தல், கம்ப்யூட்டர் வகுப்புக்கள் இப்படிக் கூட கத்துக்கிட்டு இருப்பீங்க. இப்படி இந்த விடுமுறை உங்களுக்கு நல்ல விஷயங்களைத் தந்திருக்கும். எழுதுங்கள். சிறந்த மூன்று கட்டுரைகளைத் தேர்ந்தெடுப்போம்.

ஒவ்வொரு தலைப்பிற்கும் —

முதற் பரிசு — ரூ. 50/—
இரண்டாம் பரிசு — ரூ. 25/—
மூன்றாம் பரிசு — ரூ. 20/—

சரி, இப்போ நீங்க எழுதறதுக்கு முன்னாடி ஆர்த்தி என்ன செஞ் சான்னு பார்க்கலாமா?



— விடுமுறையில்... —

வீட்டில், படிப்பதற்காக என் தாய், தந்தை வாங்கும் வார, மாத இதழ் களை வைத்து நான் 'கவர்' கள் செய் கிறேன். அதில் இருக்கும் பக்கங்களைத் தனியாக எடுத்து இரண்டு மூன்று அளவுகளில் கவர்கள் செய்து கொள் வேன்.

இப்படிச் செய்த கவர்களை வீட் டிற்கு அருகே இருக்கும் மருந்துக்

கடை, பிஸ்கெட் கடை இவற்றிற்குக் கொடுப்பேன். ஒரு கவருக்கு இரண்டு பைசா விதம் ஒரு நாள் ஒன்றிற்கு நான் செய்யும் நூறு கவர்களுக்கு ரூபாய் இரண்டு கிடைக்கும்.

இந்த ரூபாயை நான் சேர்த்து வருகிறேன். பள்ளி திறந்தவுடன் எனக்குத் தேவைப்படும் பேனா, பென்சில் ஆகியவற்றை என் சிறு சேமிப்பின் மூலம் வாங்கிக் கொள்வேன்.

— எம். சி. ஆர்த்தி.

வெளிநாடுகளில் மாணவர்கள் எல்லாம் இப்படித்தான் ஏதாவது ஒரு தொழில் செய்வார்களாம். செய்து அவர்கள் படிப்புக்கான செலவை அவர்களே சம்பாதிப்பார்களாம். நாம அப்படி இருக்க முயற்சிக்கணும். இல்லைன்னாலும் படிப்பு போக மீதி இருக்கற நேரத்தை வீணடிக்காம உபயோகமா செய்யலாமே! இது போல சிறு சிறு வேலைகளைச் செய்து சம்பாதிக்கலாம். அப்பா, அம்மாவை நமக்குன்னு ஒரு வங்கிக் கணக்கை ஆரம்பிக்கச் சொல்லணும். அதில் இப்படி வர்ற பணத்தைப் போட்டு வைக்கலாமே! அதே போல பண்டிகை இந்த மாதிரி சமயங்களில் பெரியவங்க நமக்குப் பணம் கொடுப்பாங்க. அதையும் வங்கியில் போட்டு வச்சுக்கலாம். அப்புறம் ஏதாவது உபயோகமா செலவழிக்கலாமே!

சரி, இம்மாத இளவரசி யார் தெரியுமா?

இம்மாத இளவரசி



ஒரு சமயம் ஊருக்கு ஒதுக்குப்புறமாய் இருந்த எங்கள் வீட்டிற்கு, என் தங்கை கைக் குழந்தையுடன் வந்தாள். என் கணவர் டூர் போயிருந்தார். என் குழந்தைகள் சித்தியின் குழந்தையோடு விளையாடிக் கொண்டிருந்தன.

இரவு படுக்கும் போதுதான் கவனித்தோம், தங்கைக் குழந்தை தினேஷுக்கு மெல்லிய ஜுரம். அதைப் பெரிதுபடுத்தாமல், மெட்டாசின் கொடுத்து தூங்கப் பண்ணி விட்டோம். ஆனால் அர்த்தஜாமத்தில் குழந்தை, திடீர் என்று விழித்துக் கொண்டு அழ ஆரம்பித்து விட்டான்.

காய்ச்சல் ஏறிக்கொண்டே போக, மீண்டும் மீண்டும் வாந்தியும், வயிற்றுப்போக்கும் ஏற்பட்டது. மணியோ பதினொன்று. பஸ் வசதியும் இல்லை. குழந்தை கண்ணைச் செருக ஆரம்பிக்க, தங்கை கதற எனக்கு ஒன்றும் ஓடவில்லை.

இந்த அமளியில் கண் விழித்த என் பெண் காயத்ரி, மிக தன்னம்பிக்கையுடன், தன் அப்பாவின் கைநெடிக் ஹோண்டாவில் எங்களை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்வதாகக் கூறினாள். வெளியே ஒரே இருட்டு. வேறு வழியின்றி சைக்கிளைத் தவிர வேறு வாகனம் ஓட்டி அறியாத காயத்ரியுடன் கைநெடிக் ஹோண்டாவில் பயணமானோம். ஒவ்வொருவராக ஏற்றிக் கொண்டு இரண்டு தடவை ஓட்டினாள்.

பதற்ற நிலை தாண்டிக் குழந்தை நார்மலுக்கு வந்தவுடன், ''காயத்ரி எப்ப, எப்படி ஸ்கூட்டர் ஓட்டப் பழகினாய்?'' என்று கேட்டேன். ''பழகலை மம்மி. டாடி ஓட்டும் போது நல்லா கவனிப்பேன்'' என்றாள்.

அந்தக் குழந்தை சமயமறிந்து, பதறாமல் செயல்பட்டாள். இல்லையென்றால் எங்கள் வீட்டிற்கு விருந்தாக வந்த தங்கையின் நிலைமை என்னவாகியிருக்கும்? அன்று, மகளைப் பெற்ற இன்பத்தை மனநிறைவுடன் அனுபவித்தேன்.

— சி. வி. பத்மாகுமார்.

பானை நிறைய நல்லறிவு!

சித்திரம்:-

குழந்தைகளே! பீர்பாலைப் போல நாமும் புத்திசாலியாக இருக்க வேண்டும். சோதனைகள் வந்தால் புத்திசாலித்தனத்தால் வெல்ல வேண்டும். அவரைப் பற்றிய இன்னொரு கதை:-





பல்லு தேய்க்காத பையன்!

ஒரு பையன் இருந்தானாம். குமார்ன்னு பேராம். அவன் பல்லே தேய்க்க மாட்டானாம். கேட்டா,

''ஏன் மம்மி, நம்ப ஜிம்மி பல்லா தேய்க்குது!'' என்பான். அவங்க அம்மா அவனுக்குப் பல் தேய்ப்பதற்குள் படாதபாடுபடுவாள். ஆனால் சாக்லேட், பிஸ்கெட்னா அவனுக்கு ரொம்ப கொண்டாட்டம். சும்மா சாப்பிடுவானாம்.

இவன் பண்றதையெல்லாம் பக்கத்திலேயே இருந்து ஒன்று பார்த்துக்கிட்டே இருந்ததாம். அது பேர் என்ன தெரியுமா? பாக்டீரியா! குமாரோட வாய்க்குள்ளேயே இருப்பது அது. இவன் பல்லு தேய்க்காம இருந்தால் அதுக்கு ரொம்பக் கொண்டாட்டம். வாயெல்லாம் அழுக்குப் பண்ணி வச்சது. பல்லுக்குள்ளும் ஜம்முன்னு ஏறி உக்காந்தது. 'குறுகுறு'ன்னு பல்லைக் குடைந்து உள்ளே போயிடுச்சு.



குமார் வாயைத் திறந்தாலே நாத்தம்.

அவன் ஸ்கூல்ல அவனைப் பார்த் தாலே எல்லாரும் ஓட ஆரம்பிச் சாங்க.

''ஐயே, பல்லு தேய்க்காத பையன்!
நாத்தம் அடிக்கிற பையன்''

எல்லோரும் தூர இருந்துக்கிட்டு பாடுவாங்க. பல்லைக் குடைஞ்சு உள்ளே போன பாக்டீரியா கடிக்க ஆரம்பிச்சுது. குமாருக்கு ஒரே பல் வலி. ஸ்கூல் நண்பர்கள் கேலி வேறு. அவன் அம்மாகிட்டே போய் 'ஓ'ன்னு அழுதான்.

''பாத்தியா, அம்மா பேச்சைக் கேட்டிருந்தா இப்படி ஆகுமா?'' என்ற அம்மா பல் டாக்டர்கிட்டே கூட்டிண்டு போனாள். டாக்டர் சொத்தையை எடுத்துட்டு சரிபண்ணினார்.

இப்பல்லாம் குமார் தினமும் இரண்டு வேளை பல் தேய்க்கிறான். ஏதாவது சாப்பிட்டால், நன்றாக வாயைக் கொப்பளித்துத் துப்பு கிறான். அப்புறம்...

'பளீர்'ன்னு சிரிக்கிறான்!

இந்தத் தடவை கோட்டை அழகான ஓவியமாக்கிப் பரிசு பெற்றவர்கள் யார்?




முதல் பரிசு — அருண்குமார், உடுமலைப்பேட்டை,
இரண்டாம் பரிசு — இரா. ஜெயசங்கரி, திருச்சி — 21,
மூன்றாம் பரிசு — ஆர். இரமேஷ், மதுரை — 6.

அடுத்த மாதம் என்ன கோடு வைத்து வரையணும் தெரியுமா?

பரிசுகளைத் திரும்பவும் நினைவுபடுத்துகிறேன்.

முதல் பரிசு — பேனாவோடு கூடிய பென்சில் பாக்ஸ்,
இரண்டாம் பரிசு — பேனா,
மூன்றாம் பரிசு — கலர்ப் பென்சில்.

டாக்டர் பதில்கள்



பதில்கள்: டாக்டர் கமலா செல்வராஜ்.

எனக்கு வயது 28. நான் ஐந்து மாதக் கர்ப்பம். இது எனக்கு இரண்டாவது குழந்தை. எனக்கு நீர்ப்பை இறங்கி இருப்பதாக டாக்டர் கூறினார். அதனால் பிரசவத்திலோ, பிரசவத்திற்குப் பின்னோ, ஏதாவது கோளாறு ஏற்படுமா? நான் குடும்ப உறவு வைத்துக் கொள்ளலாமா? எனக்கு இது பெரிய கவலையாக இருக்கிறது.

உங்களுக்கு நீர்ப்பை இறங்கியிருப்பதாகக் கூறியிருக்கிறீர்கள். ஒன்று அல்லது இரண்டு குழந்தை பிறந்தவர்களுக்கு நீர்ப்பை இறங்கியிருப்பது சகஜம். இதனால் பிரசவம் கடினமாக இருக்கும் என பயப்படத் தேவையில்லை. கருவுற்ற பெண்கள் பொதுவாக கருவுற்ற முதல் மூன்று மாதங்களிலும், பிரசவத்திற்கு முன் இரண்டு மாதங்களிலும் உடலுறவு கொள்ளாமல் இருப்பது சுகாதார ரீதியாக நல்லது.

எனது குழந்தைகள் மூவருக்கும் தொண்டை இன்ஃபெக்ஷன் ஆகி, அதனால் ரத்தப் பரிசோதனை பண்ணிப் பார்த்தோம். அதில் பெரியவளுக்கு (16 வயது) ஏஎஸ்வோ டைட்டிர் 800 இருக்கிறது. மற்ற இருவருக்கும் (14 வயது, 13 வயது) 400 இருக்கிறது. டாக்டர் மூவரையும் முட்டி வலி இருக்கிறதா? என்று கேட்டார். குழந்தைகள் மூவருமே ஆமாம், எங்களுக்கு எப்பொழுதாவது விட்டு, விட்டு வலிக்கும் என்று கூறினார்கள். அவர்களுக்கு முட்டி வலி இருப்பதே, அவர்கள் டாக்டரிடம் கூறிய பிறகு தான் தெரிந்தது. 1½ வருஷத்திற்கு முன்பு தான் தொண்டைப் புண் இருப்பதே தெரிந்தது. ஏஎஸ்வோ டைட்டிர் அதிகமாக இருப்பதாலும் எப்பொழுதாவது முட்டி வலி இருப்பதாலும் ஆயுள் பூராவும் மாத்திரை சாப்பிட வேண்டும் என்று டாக்டர் கூறி, அதன்படி மூவரும் சாப்பிட்டு வருகிறார்கள். இதற்கு, இவர்களுக்கு வேறு ஏதேனும் வழியுண்டா?

உங்கள் மருத்துவர் ASO titre check பண்ணி மாத்திரை கொடுத்ததும், டான்ஸில் ஆபரேஷன் செய்ததும் சரியேயாகும். குறிப்பிட்ட மாத்திரை சாப்பிடுவதாலும் பசியில்லாமல் இருக்கலாம். ஏதாவது ஒரு நல்ல டானிக் வாங்கிக் கொடுக்கலாம். ஏ எஸ் வோ டைட்டிர் அதிகமாக இருப்பதால் இதயம் பாதிக்கப் பட்டுள்ளதா என்று இருதய டாக்டரிடம் பரிசோதிக்க வேண்டும். பென்டிட்ஸ், மாத்திரை கொடுப்பது பற்றி மருத்துவர்களிடையே இருவிதக் கருத்துக்கள் உள்ளன. இதயம் பாதிக்கப்பட்டிருந்தால் பென்டிட்ஸ் மாத்திரைகளை தவறாமல் 20 — 25 வயது வரை சாப்பிட வேண்டும். இதய பாதிப்பு இல்லையென்றால் பென்டிட்ஸ் சாப்பிடாமல் ஈ என் டி டாக்டரிடம் காது வலி, சைனஸிடிஸ் உள்ளதா, என்று சோதித்து காது, மூக்கு, பல் தொண்டையில் இன்ஃபெக்ஷன் வரும்போது தீவிரமாக எதிர்ப்பு மருந்துகளை எடுத்துக் கொள்ளலாம். சொத்தைப் பல் இருந்தால் பல் வைத்தியர் உதவியுடன் எடுத்துவிட வேண்டும். ஏ எஸ் வோ டைட்டிர் மறுபடியும் பரிசோதனை செய்யவும்.

எனது மகளுக்கு இருபது வயது ஆகியும் இன்னும் வயதுக்கு வரவில்லை. நாங்கள் மிகவும் வறுமையில் உள்ளதால் எனது மகளுக்கு உடல் நிலை கவனிக்க முடியவில்லை. எனது மகள் வயது வருவதற்கு உரிய எல்லா உடல் வாகையும் பெற்றிருக்கிறாள். இருந்தும் அவள் வயது வராமல் இருப்பதால் நான் மிகவும் மனநிலை பாதிக்கப்பட்டு இருக்கிறேன். எனவே தயவு செய்து எனது இந்த லட்டரை நான் நேரடியாக வந்திருப்பதாக நினைத்து பதில் எழுதுமாறு வேண்டுகிறேன்.

உங்கள் வறுமையைக் காரணம் காட்டி இதுநாள் வரை உங்கள் மகளுக்கு சிகிச்சை அளிக்காமல் இருந்தது சரியல்ல. அரசு மருத்துவ மனைகளில் இலவச சிகிச்சை அளித்திருக்கலாமே? இப்போதும் நீங்கள் உங்கள் மகளை சென்னையிலுள்ள கஸ்தூரிபா காந்தி மருத்துவ மனையில் சென்று காண்பித்து உங்கள் மகளின் கருவகம், கரு இணைப்புக் குழாய்கள், யோனிக்குழாய்

ஆகியவை சரியாக உள்ளனவா என்பதை ஸ்கேன் மூலம் பார்த்து அதற்குப் பின் சிகிச்சை அளிக்கலாம். அதே மருத்துவ மனையில் Karyo typing என்ற சோதனையும் செய்து விடுவார்கள். இச்சோதனை சிகிச்சைக்கு உதவும்.

டாக்டர், எனக்குத் திருமணமாகி ஓராண்டு நிறைவு ஆகிவிட்டது. இந்த ஓராண்டாக நான், டாக்டரின் ஆலோசனைப் படி கருத்தடை மாத்திரையைச் சாப்பிட்டு வருகிறேன். இதனால் இதுவரை எனக்கு எந்தத் தீங்கும் ஏற்படவில்லை. ஆனால் சில டாக்டர்கள் இது பின்விளைவைக் கொடுக்கும் என்று கூறுகிறார்கள். எனவே எனக்குத் தங்கள் கருத்தைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இதனால் எனது உடம்பு குண்டாகுமா?

நீங்கள் சாப்பிடும் மாத்திரையில் கர்ப்பத் தடை செய்யும் எல்லா சத்துக்களும் குறைந்த அளவில் இருப்பதால் பின் விளைவுகளைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். மாத்திரை சாப்பிடுவதால் உடல் பருமனாகும் என்றால் மாத்திரை சாப்பிடத் துவங்கிய மூன்று மாதங்களுக்குள் பருமனாக ஆரம்பிக்கும். அப்படி ஆகவில்லை என்றால் பிறகு உடல் பருக்க வாய்ப்பு இல்லை. ஆயினும் நீங்கள் மாத்திரையை 1½ வருடங்கள் சாப்பிட்ட பின் நிறுத்தி விடுவது நல்லது. அப்போது தான் மாத்திரையை நிறுத்திய பின் கர்ப்ப மாவதில் ஏதாவது பிரச்னை உள்ளதா என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்.

எனக்குத் திருமணமாகி பதினாறு வருடங்கள் ஆகிறது. குழந்தையில்லை. எனக்கு எல்லாம் நார்மலாக இருக்கிறது. என்னுடைய பிரச்னை இதுதான். எனக்கு முப்பது வயதுக்குள் தலை முடி நரைக்கத் தொடங்கி விட்டது. கொஞ்ச நாட்களுக்கு முன் பார்த்த போது உடலிலும் முடி நரைக்கத் தொடங்கி உள்ளது. வீட்டில் மற்றவர்களுக்கும், வயதானவர்களுக்கும் கூட இப்படி இருந்து பார்க்கவில்லை.

மேலும் புருவம், கண் இரப்பை போன்ற முடிகளும் நரைத்து விடுமோ என்று பயமாக இருக்கிறது.

உங்களுக்குத் திருமணமாகி 16 வருடங்களாகியும் குழந்தையில்லை என்று எழுதியிருக்கிறீர்கள். இதுவும் ஒரு பெரிய பிரச்னை அல்லவா? உங்களுக்கு 34 வயதில் முடி நரைத்துவிட்டதாக எழுதியுள்ளீர்கள். இதற்கு உங்கள் உடல் வாகும், பரம்பரையும் காரணங்களாக இருக்கலாம். மருதாணி, மடிகாஷன் போட்டு முடியைக் கண்டிஷன் செய்து கொள்ளலாம். இதை வீட்டிலோ பியூட்டி பார்லரிலோ செய்து கொள்ளலாம். உடலில் உள்ள முடியைத் தகுந்த முறையில் நீக்கிவிடவும்.

எனக்கு வயது பதினைந்து. கோவையில் ஒரு பெரியப் பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்து வருகிறேன். நான் சிறு வயது முதல் கொண்டே புத்தகங்கள் (கதை) படிப்பது வழக்கம். அப்படி ஒரு நாள் படித்த பொழுது மார்பகப் புற்று நோய் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியாகியிருந்தது. கட்டுரையில் மார்பகப்புற்று நோய் உள்ளவர்க்கு ஒரு பக்க மார்பகம் பெரியதாகவும் மறு பக்கம் சிறியதாகவும் இருக்குமென்று இருந்தது. பிறகு நான் வளர்ந்த பிறகு என்னுடைய மார்பகம் (இடது) பெரியதாகவும் வலது சிறியதாகவும் இருப்பதைக்கண்டேன். பிறகு ஒரு நாள் மிகப் பயங்கரமாக மார்பகத்தில் வலி ஏற்பட்டது. மேலும், மாதவிடாயும் சரிவர வருவதில்லை. நான்கு மாதங்களுக்கு ஒருமுறை வருகிறது. சில சமயங்களில் ஆறு மாதம் கழித்து வருகிறது. பிறகு வருவதில் தாமதம் ஏற்பட்டது. சில சமயங்களில் அடி வயிறு மிகப் பயங்கரமாக இறுகி (கல் போல்) விடுகிறது. சிறுநீரும் கழிக்க முடிவதில்லை. எனக்கு மார்பகப் புற்று நோய் இருக்குமோ என்ற பயம் அடிக்கடி வருவதால் என்னால் சரிவரப் பாடத்தை படிக்க முடிவதில்லை. நான் நன்றாகப் படித்து அதிக மதிப்பெண் வாங்குவது, நீங்கள் தரும் பதிலில் உள்ளது.

15 வயதான உங்களுக்கு மார்பகம் பற்றி இவ்வளவு சந்தேகம் வரவேண்டிய அவசியமே இல்லை. இந்த வயதில் ஒரு மார்பகம் பெரியதாகவும், மற்றது சிறியதாகவும் இருப்பது இயல்பு. இப்படி இருப்பதால் புற்று நோய் வரும் என்று பயப்படவும் வேண்டாம். மார்பகத்தில் கருங்கல் போன்ற கட்டி இருப்பின் அது புற்று நோயின் அறிகுறியாக இருக்கலாம். தனிமையில் இவ்வாறு பயப்படுவதைவிட நீங்கள் ஒரு பெண் மருத்துவரை அணுகி உங்கள் ஐயங்களைப் போக்கிக் கொள்ளலாமே? மேலும் வயதுக்கு வந்த சில மாதங்கள் மாதவிலக்கு சரியாக வரவில்லையென்றால் அஞ்சத் தேவையில்லை. 2 — 3 மாதங்களுக்கு ஒரு முறை மாதவிலக்கு வந்து உதிரப் போக்கு 5—6 நாட்கள் இருந்தால் பயப்படத் தேவையில்லை. ஆனால் உதிரப்போக்கு 10—15 நாட்கள் இருந்தால் பெண் மருத்துவரை அணுகுவது நல்லது. உங்கள் அடிவயிற்று வலியைப் பார்க்கும் போது சிறுநீரில் இன்ஃபெக்ஷன் இருக்கலாம் எனத் தோன்றுகிறது. நீங்கள் ஆல்கலைன் சிட்ரேட் என்ற மருந்தை வேளைக்கு 2 டீஸ்பூன் விதம் ¼ டம்ளர் நீரில் கலந்து மூன்று வேளை 10 நாட்களுக்குச் சாப்பிடுங்கள். அப்படியும் வலி, குறையவில்லை என்றால் உங்கள் சிறுநீரை 'கல்ச்சர்' செய்து சிகிச்சை மேற்கொள்ளவும். தொகுப்பு:—சுபாபாரதி.

ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மே மாதங்கள் குழந்தைகளுக்கு லீவு என்றால் பெரியவர்களாகிய எங்களுக்குப் பரீட்சை தான். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு யுகம். லீவு விட்ட பத்து நாட்களுக்குள் எல்லா சினிமாக்களையும் பார்த்து முடித்து, எல்லா காமிக்ஸ்களையும் படித்துத் தள்ளி 'போர் அடிக்கிறது, போர் அடிக்கிறது' என்று எங்களை ஜிம்பி விடுவார்கள்.

இத்தனை வால்களுக்கும் கட்சித் தலைவி என் பெரிய மகள்தான். சிறிய வயதிலிருந்தே அவள் தரையில் நடந்து யாரும் பார்த்த தில்லை. சோபா, சேர், ஜன்னல் இதன் உச்சியிலிருந்துதான் குரல் கேட்கும். போதாதகுறைக்கு பெரியவன் சட்டைகள் வீணாகப் போகின்றதே, சின்னப் பெண் தானே என்று ஆண்பிள்ளை சட்டைகளைப் போட்டு, முடி அடர்த்தியாய் வளரட்டும் என்று அடிக்கடி முடியை வெட்டி வளர்த் தது தப்பாகி விட்டது. மாங்காய் அடிப்பதில் இருந்து, சினிமாவிற்கு மொத்தத்தையும் கூட்டமாக இழுத்துச் சென்று பாப்கார்ன் வாங்கி சமமாக விநியோகம் செய்து, சின்ன வர்கள் சண்டைக்கு நடுவராக நின்று தீர்ப்புச் சொல்லி, அனைத்தையும் தன் கட்சியி லேயே வைத்துக் கொண்டு திறம்பட விஷமம் செய்யும் மன்னி. (மன்னரின் பெண்பால்).



இவளது எதிர்க்கட்சித் தலைவன் என் பெரிய மகன். ஐந்து நிமிடங்களில் ஒரு ஐஸ்க்ரீமை காட்டி அத்தனை பேரையும் தன் கட்சிக்கு மாற்றி விடும் சமர்த்தன். வருடங் களும், வயதும் கூடினாலும் குணங்கள் மாற வில்லை.

இவர்களின் விடுமுறை அமர்க்களத்தை அடக்க நான் ஒரு நல்ல யோசனை செய் தேன். லீவை வீணடிக்காமல் நல்ல வகுப்பு களில் சேர்த்து விடுவது. நேரமும் உபயோக மாகச் செல்லும். அமர்க்களமும் குறையும் என்று தீர்மானித்தேன்.

'இந்தி படியுங்கள்' என்று அனுபவம் மிக்க ஒரு வயதான இந்தி வாத்தியாரை வீட்டிற்கு அழைத்து வந்தேன். மிகவும் சாந்த சுபாவமுடையவர். தினமும் 'டாண்' என்று மூன்று மணிக்கெல்லாம் வந்து விடுவார். பழி போல் ஹாலில் அமர்ந்திருப்பார். ஒவ் வொரு தலையாக கதவு வழியாக அவரை எட்டி எட்டிப் பார்த்து விட்டு ஓடும். கூட்டத் தலைவியான எனது மகளுக்கு ஹிந்தி வாத்தியார் வந்து விட்டதைப் பற்றி உளவு கூறப்படும். உடனே ஒரு அவசர கூட்டம் நடைபெறும். இரண்டு பேர் 'வயிற்று வலி, வயிற்று வலி' என்று திடீரென்று துடிக்க ஆரம்பிக்க, நான்கு பேர் அவர்களுக்கு சிசுருஷை செய்யத் தொடங்கி விடுவார்கள். மற்றும் இரண்டு பேர் 'நாங்கள் மட்டும் படிக்க வேண்டுமா' என்று முறைப்பார்கள். இப்படித் தினமும் ஒரு நாடகமாக காலம் தள்ளினாலும் நான் கண்டிப்பாகக் இருந் தேன் ஹிந்தி படிக்க வேண்டும் என்று.

வாத்தியாருக்கு என் வீட்டிற்கு வருவது தண்டனை பெறுவதைப் போல் இருந்தது. வந்தாலும் 'ஒன்றும் ஒழுங்காய் படிப்ப இல்லை. 'ஏன் ஹோம்வொர்க் செய்ய வில்லை' என்று அவர் கேட்டால் ஒன்றை ஒன்று பார்த்து 'ஹிஹி' என்று இளிக்கும். தவறிப் போய் அவர் தண்ணீர் வேண்டும் என்று கேட்டால் மொத்தமும் 'நான் கொண்டு வருகிறேன், நான் கொண்டு வரு கிறேன்' என்று ஓடி அரை மணி நேரம் பொறுத்து வரும்.

அக்கா வந்துட்டா!

ஜேபெல்ஸ்

''கணேஷ் உன் புத்தகம் எங்கே?''

''இதோ கொண்டு வரேன் சார்'' சென்றவன் புத்தக அச்சாபீஸிற்கே போய் விட்டான். ஆளே காணவில்லை.

''பாப்பா, நீ ஏன் ஹோம்வொர்க் செய்யவில்லை?''

''பென்சில் ஹாக் உடைந்து விட்டது சார்.''

''சார்...''

''என்ன?''

''உங்களுக்கு எத்தனை பசங்க சார்?''

''மூன்று. அதற்கென்ன இப்பொழுது?''

''அவங்க எல்லாம் ஹிந்தி படிக்கிறார்களா சார்?''



இப்படித் தேவையற்ற கேள்விகளும் செயல்களும் அவரை எரிச்சல்படுத்தின. என்னைக் கையெடுத்து கும்பிட்டுச் சென்றவர் வெகு நாட்கள் வரவில்லை. பீஸும் இந் நாள் வரை வாங்கவில்லை. ஓர் நாள் தற்செயலாய் அவரை ஓர் பஸ் ஸ்டாப்பில் கண்டேன். என்னை அடையாளம் கண்டு கொண்ட அவர் வந்த பஸ்ஸையும் விட்டு விட்டு எதிரே ஒரு சந்தில் என்னை திரும்பித் திரும்பிப் பார்த்தவாறு தலைதெறிக்க ஓடினார்.

பகைவரை புறமுதுகிட்டோடச் செய்த பெருமிதம் என் பிள்ளைகளுக்கு. எனக்குப் பற்றிக் கொண்டு வந்தது. மதிய வேளையில் வீட்டில் சப்தம் காதைப் பிளக்கும். டீவி, ரேடியோ, டெக் இவற்றிற்கு வாய் இருந்தால் கதறி அழும். எந் நேரமும் அழுகிறானா, கத்துகிறானா என்று தெரியாத ஓர் இங்கிலீஷ் பாட்டு. இது என் பையன் கட்சி. மற்றொரு பக்கம் எட்டிக்குப் போட்டியாக இரைந்து கத்தும் தமிழ்ப் பாடல்கள். இது என் பெண் கட்சி. அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் சண்டைக்கு வராத குறை.

இதுவாவது போகட்டும். மற்றொரு அமர்க்களத்தைக் கேளுங்கள். உறவினர் பெண் ஒருவரை 'வா பக்கத்து வீட்டு கொய்யாக்கா பறிக்கலாம்' என்று கூட்டிப் போய் ஏணி வைத்துத் தண்ணீர் தொட்டியின் மேல் ஏற்றி ஏணியையும் எடுத்து வந்து விட்டனர்.

வீடு அமைதியாய் இருக்கவே எனக்குச் சந்தேகம் வலுக்க வீட்டைச் சுற்றி ஆராய்ந்தேன். வெயிலில் சிவசிவத்த அந்தப் பெண் உட்கார முடியாமல், நிற்க முடியாமல் காலை நீட்டி மடக்கிக் குதித்துக் கொண்டிருந்தாள்.



வீட்டில் அடைத்துப் போட்டாற் போல் இருக்கிறதே என்று நான் நினைத்தாலும், ஸ்கூல் போல் இருக்கும். இத்தனையையும் எங்கு கூட்டிச் செல்வது. கையில் ஒரு அட்டென்டென்ஸ் ரிஜிஸ்தருடன்தான் செல்ல வேண்டும். இவர்களுக்குப் பிடிக்காத யாரேனும் வீட்டிற்கு வந்தால் அவர்கள் செல்லும் வரை என்னை 'வெடுக், வெடுக்'கென்று கிள்ளி அவர்கள் பின்னால் நின்று அங்க சேஷ்டைகள் செய்து, நிலைமையைச் சமாளிக்க நான் தத்துபித்தென்று சிரித்து வைத்து அசடு வழிவேன்.

சினிமா சென்றால் தியேட்டரே இரண்டு படும். பாப்கார்ன், பால், ஐஸ்கிரீம் என்று ஒவ்வொன்றும் கையில் அள்ள கடைக்காரர் குழம்பி கொடுத்த காசு போதும் என்று என்னை அனுப்பி விடுவார்.

'ஹைட் அண்ட் சீக்' என்று ஒளிந்து விளையாடும் விளையாட்டு என் தெருவிற்கே பிரசித்தம். யார் வீட்டிற்குள் வேண்டுமானாலும் ஓடி ஒளிவார்கள். இப்படி ஓடி ஒளிந்ததின் விளைவு பக்கத்து வீட்டுக்காரர் என்னை அழைத்து "குழந்தைகள் எல்லாம் ஊரிலிருந்து வந்திருக்கானா? அதான் ஒரே சப்தம். இங்கெல்லாம் கூட குதித்து ஓடிக் கொண்டிருந்தார்கள். கனகாம்பரம் செடியெல்லாம் நசுங்கி விட்டது" என்று வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் கூறினார்.

வைத்த சாமான் வைத்த இடத்தில் இருக்காது. ஸ்பூன், டபரா, வாழைப்பழத் தோல், டிராயரெல்லாம் ஈஷிக் கொண்ட சிக்லெட், ஸ்க்ரூ டிரைவர், பிரஷ், பிதுங்கிக் காய்ந்த பேஸ்ட் இவை எல்லாம் படிக்கும் மேஜை டிராயரில். சுவர் முழுவதும் ப்ரூஸ்லீ, ப்ருக்ஷீல்ஸ் இன்னும் ஏதேதோ ஷ், புஷ்ஷின் படங்கள். ஒரு மூலையில் சின்ன சாமி




எண்ணத்தை ஈர்க்கும் வண்ணக்களஞ்சியம் லயமும் நயமும்
இணைந்த பரிணாமங்களின் சங்கமம். இதயத்தை மீட்டும்.
சேலைகளின் சோலை. மனதை மயக்கும்.
நவ நாகரீக நங்கையர்க்கு
லயமும் நயமும் சேர்க்கும்.
LAKSHMI
Raaga
தேர்ந்தெடுத்த நகரங்களிலும்
கடைகளிலும் மட்டுமே கிடைக்கின்றன.
லக்ஷ்மி மில்ஸ்
பாலியெஸ்டர் பாலியெஸ்டர் – காட்டன் காட்டன் சேலைகள்

படம். அதன் தலையில் வாடி உதிர்ந்த பூ நார். இந்த சாமி வருடா வருடம் பரீட்சை சமயத்தில் மட்டுமே நன்கு கவனிக்கப்படுவார். பீரோவைத் திறந்தால் தலை மேல் விழும் துணிப்போர். ரூமில் நொண்டி அடித்துச் செல்ல வேண்டும். என்ன பிள்ளைகள்! அரை நாள் செலவழித்து அத்தனையையும் சரிவர எடுத்து வைத்து விட்டு வெளியே சென்றேன்.

வீட்டில் திரும்ப நுழைந்ததும் என் பையன் பாய்ந்தான்.

''அம்மா! என்னுடைய ஜீன்ஸை எங்கே வைத்தாய்?''

ஏதோ அந்த ஜீன்ஸ் இல்லாததால் துணியே இல்லாதது போல் ஒரு கத்தல்.

''அம்மா! உன்னை யார் என் ரூமை சரிசெய்யச் சொன்னது. என்னுடைய ஹாலிடே ஹோம்வொர்க் நோட்டைக் காணோம். எனக்கு எதையும் நான் வைத்தது போல் வைத்தால்தான் அடையாளம் தெரியும்.''


ஹாலிடே ஹோம்வொர்க் என்பது ஸ்கூல் திறக்கும் கடைசி நாள் வரை திரும்பிக் கூடப் பார்க்கப்படாத ஒரு வேலை. எல்லாவற்றையும் நானே அவசரம் அவசரமாக செய்து தர வேண்டும்.

இவற்றிற்கு நடுவில் சாப்பாடு சரியில்லை என்ற குறை வேறு. ஓர் நாள் ஜம்பமாக அவர்களே சமைத்துக் கொள்வதாகச் சொன்னார்கள். பெண் பிள்ளை பழகட்டும் என்று நானும் சமைத்தேன். கல்யாண வீடு போல் சமையலறை அல்லோகல்லோலப்பட்டது. தட்டு எங்கே, கரண்டி கொண்டா என்று சப்தம். சிண்டு நண்டுகள் குறுக்கும் நெடுக்கும் ஓடின. வெகு நேரம் கழித்து ஒரு தட்டில் எலி போல் கரேர் என்ற ஒரு வஸ்துவை எனக்கு மட்டும் கொடுத்தார்கள். ஸ்பூனால் அதைப்பிய்க்கமுடியவில்லை. வாயில் போட்டதும் தொண்டையில் அடைத்துக் கொண்டது. நான்கு டம்ளர் தண்ணீர் குடித்தேன். ஸ்வீட்டா, காரமா என்று தெரியவில்லை. பிறகு சொன்னார்கள். அது குலோப்ஜாமூன் என்று.

பின்னர் சமையலறையில் கால் வைத்த நான் வழுக்கி கபால மோட்சம் போகாத குறை. எங்கும் பிசுபிசுவென்று இருந்தது. பாத்திரங்கள் அடியில் தீய்ந்து எவ்வளவு கரண்டியும் விடவில்லை.

இரவில் இவைகள் தூங்கப் போகும் முன் யார் ஃபானுக்கு அடியில் படுப்பது? யார் ஜன்னலுக்கு அருகில் படுப்பது என்ற இடப் பிரச்னை காஷ்மீர் பிரச்னையைக் காட்டிலும் அதிகம்.

ஒவ்வொரு ஜூன் மாத இரண்டாவது வாரத்தில் என் உயிர் பிழைக்கும். உடைந்த டீவி, ரேடியோ, நாற்காலி இவற்றை ரிப்பேர் செய்து வீட்டை நிமிர்த்த ஒரு மாதம் ஆகும். இதோ! லீவும் வந்து விட்டது! என் செல்வங்களும் கட்சித் தலைவி அக்காவுடன் வந்து விட்டன!



நுகரச் சில செய்திகள்

கலப்பட உணவை உண்டதால் உத்திரப்பிரதேச மாவட்டத்தில் இருநூறு பேர் மாண்டனர். சமையல் எண்ணெய் அல்லது ரொட்டி செய்ய உபயோகிக்கும் மாவு எதிலாவது கலப்படம் செய்யப்பட்டதால் இந்த மரணம் சம்பவித்திருக்கிறது என்று கூறப்பட்டது. அதைப் போல் அதே தினத்தில் மதுரையில் மின்விசிறிக் கோளாறால் பெண்மணி ஒருவர் இறந்தாள் என்ற செய்தியும் வந்தது.

இந்தச் செய்திகள் புதிதல்ல. நாள் தோறும் நாளேட்டைப் புரட்டினால் கலப்பட உணவால் மரணம். கலப்பட வியாபாரிக்கு அபராதம். காஸ் அடுப்பு வெடித்துச் சாவு. குக்கர் வெடித்து நாசம். மின் இணைப்புச் சரியில்லாததால் மரணம். மின்சாரத்தட்டுப்பாடு. காளான்களாக முளைத்து வரும் சீட்டுக் கம்பெனிகளில் குருவி சேர்ப்பது போல் சேர்த்த பணத்தைக் கட்டி விட்டு இரந்து நிற்கும் நிலை. நிற்க ஒரு நிழல் வேண்டும் என்று விரும்பி வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி, கடன் வாங்கி, தேனியாகச் சேர்த்த பணத்தையெல்லாம் மலிவு விலையில் கிடைக்கிறது என்ற காரணத்தால் வீட்டு மனை வாங்கிப் போட்டு ஏமாந்து அலைகின்ற நிலை இவையெல்லாம் இன்று நாம் காணும் யதார்த்தங்கள்.

கொலைகாரனுக்குச் சட்டம் தண்டனை அளிக்கிறது. ஆனால் கொலையிலும் கொடிய செயலான கலப்படம் செய்யும் வியாபாரிகள், முதலாளிகள் சட்டத்தின் பிடியிலிருந்து எப்படியோ அபராதம் என்ற ஒன்றைக் கட்டி விட்டுத் திரும்பி வந்து தொடர்ந்து அந்தப் பாதகச் செயலைச் செய்யும் நிலை இன்றுள்ளது. சட்டத்தின் கண்ணில் மண் தூவ அவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது.

பாம்பே அல்வா செய்ய வேண்டுமென்ற ஆசையில் திமர் பொடி வாங்கி நீரில் கரைத்தால் அதில் மிதக்கும் வண்டுகள் நம்மைப் பார்த்துச் சிரிக்கும். நான் அனுபவித்த ஒன்று. வாங்குகின்ற ரொட்டித் துண்டுகளில் பூஞ்சக் காளான் பூத்து நிற்கும் நிகழ்ச்சியும் உண்டு. தள்ளுபடியில் தருகிறானே என்று மகிழ்ந்து (400 ரூபாய் புடைவை 180க்குக் கிடைத்தது) வாங்கித் தண்ணீரில் போட்டு எடுத்ததும் அது கண்



இறந்து சிரிக்க எல்லோரும் என்னைப் பரிதாபமாகப் பார்க்க நான் அவஸ்தையில் நெளிந்த நெளிகள் உண்டு.

காரணம் நம்மை ஏமாற்றும் விளம்பரங்கள். ஒரு பொருள் வாங்கினால் அதனுடன் இனாமாகத் தரும் பொருள் பற்றி நம் மனத்தில் எழும் ஆசை. பில் போட்டால் விற்பனை வரி கட்ட வேண்டும். இது இல்லாவிடில் கொஞ்சம் பணம் குறையுமே என்ற எண்ணம். இவை நம்மை மயக்கிக் குழியில் தள்ளுகின்றன. ஏதாவது பொருள் கேடு வந்திருப்பின் அதைத் திருப்பிக் கடையில் கொடுக்கத் தயக்கம். எல்லாவற்றிற்கும் பயம். நியாயம் நேர்மை இரண்டிற்கும் சேர்த்துக் குரல் எழுப்பக் கூட நாம் தயங்குகிறோம்.

நமது பொருளாதார நிலை கூட இதற்குக் காரணம். ஏழை, நடுத்தர வர்க்கத்தினர் ஏதாவதொரு கடையில் பற்று வரவு வைத்திருப்பார்கள். அவன் தருவது தன் சாமான். மாத முடிவில் பணம் வாங்கிக் கொள்கிறானே. தரம், எடை விலை பற்றி யார் கேட்கிறார்கள்?

குழந்தைகளுக்குக் கொடுக்கும் பால் மாவு, மருந்து, சமையல் எண்ணெய், மசாலாக்கள் எல்லாவற்றிலும் ஏதாவதொரு வகையில் கலப்படம். சமையல் எண்ணெய்க் கலப்படத்தால் இன்று குடல் அயர்ச்சி, பாரிச வாயுவினால் அவதிப்படுவோர் கோடானு கோடி.

புத்தாண்டிற்குத் தள்ளுபடி விலையில் விற்கிறார்கள் என்று எனக்குத் தெரிந்த தோழி. இசையில் மிகவும் விருப்பம் உள்ளவள் மாதம் இருபத்தைந்து ரூபாயாகச் சேமித்த பணத்தில் ஒரு டூ-இன் ஒன் வாங்கி வந்தாள். ஆசையாக கேஸெட்டைச் செருக அது இயங்கவே மறுத்தது. வாங்கிய கடையில் சென்று கேட்டால் பில் எங்கேம்மா என்று கேட்க, கையில் பில் இல்லாததால் பேந்தப் பேந்த விழித்தபடி கடையை விட்டு வெளியேறும் நிலை. ஏனென்றால் வியாபாரிகள் தங்களுக்கு ஒரு தார்மீக சமூகப் பொறுப்பு இருக்கிறது என்பதை மறந்து விட்ட நிலை. அதை உணர்த்த வேண்டியது நமது கடமை அல்லவா?

அக்மார்க்கும் ஐ எஸ் ஐ யும்:

அரசு ஆய்வுக் கூடங்களில் பரிசோதனை செய்யப்பட்டு உணவுப் பொருட்கள் அக்மார்க் முத்திரையுடன் விலைக்கு வருகின்றன. மசாலா, ஐஸ் கிரீம் பவுடர்கள் ஐ.எஸ்.ஐ. முத்திரையுடன் வருகின்றன. ஆனால் இவைகள் மொத்தமாகக் கடையில் கிடைப்பதால் அன்றாடம் ஒரு ரூபாய்க்கும் எட்டணாவுக்கும் பொருள் வாங்கி உபயோகிக்கும் ஏழை மக்களால் வாங்க முடியாத நிலை.

குழந்தைகள் விரும்பிச் சாப்பிடும் ஐஸ்



கிரீமில் பிளாட்டிங் பேப்பரும் உருளைக் கிழங்கும் கலர் அப்பப்படுகின்றன. டீத் தூளில் கலர் அப்பப்படுவது, முந்திரிக் கொட்டையின் மேல் தோலும், கருப்பு மண்ணே. கலப்படம் செய்யப்படாத தரமான உணவுப் பொருள் அரிதாகி விட்ட நிலை.

நமக்குதவ அரசால் நடத்தப்படும் ஆய்வுக்கூடங்கள் பல இருந்தும், நுகர்வோர் நலன் பாதுகாக்க அமைப்புக்கள் இருந்தும், அது பற்றிய செய்திகள் இன்றும் பல மக்களை எட்டவில்லை. இந்தியா முழுவதும் 600 சோதனைக் கூடங்கள் உணவின் தரத்தை ஆராய உள்ளன. தமிழகத்தில் மட்டும் 50 ஆய்வுக்கூடங்கள் உள்ளன. இதில் 36 ஆய்வுக்கூடங்கள் அரசால் நடத்தப்படுபவை. இந்த வசதி இருக்கிறது என்று நுகர்வோர் எத்தனை பேருக்குத் தெரியும்?

நுகர்வோருக்குச் சில உரிமைகளும் உண்டு. சில கடமைகளும் உண்டு. உரிமையும் கடமையும் கைகோர்த்துச் செல்லும் போதுதான் அது அழகு பெறுகிறது. முழுமையடைகிறது.

நுகர்வோரின் உரிமைகள்:

1. வாங்கும் பொருளைப் பற்றிய எல்லா செய்திகளையும் அறிந்து கொள்ள உரிமை.

உதாரணமாக ஒரு மருந்தினை வாங்கும் போது அதில் அடங்கியுள்ள பொருட்கள், அதன் வீரியம், அதன் பலன், பின்விளைவுகள், பக்க விளைவுகள் எல்லாம் தெரிந்து கொள்ளல் அவசியம். அவற்றை அறிந்து


லைம்
ஸின்த்தால்
Godrej
CINTHOL
THE LIME FRESH DEODORANT SOAP
LIME
அனைத்திலும் புத்துணர்ச்சிமிக்க லைம் சோப்
அனைத்திலும் உன்னதமான லைம் சோப்
துர்நாற்றம் அகற்றும் ஒரே லைம் சோப்


RADEUS/PE/L/8-90-TAM
எந்நேரமும் லிம்கா நேரம்
விருந்தினர் வரும் நேரம்
லிம்காவின் இனிப்பும் உப்பும் கலந்த இணையற்ற சுவை விருந்தினர் மனதை கொள்ளை கொள்ளும்.
தாகம் தணிக்கும் நேரம்
லிம்காவில் அடங்கியுள்ள ஐஸோடானிக் உப்பு உங்கள் தாகத்தை தணிக்கிறது.
கொட்டமடிக்கும் நேரம்
உல்லாசமாய் கொட்டமடிக்கும் நேரங்களில் லிம்கா. வாழ்விற்கு மேலும் சுவை கூட்டுகிறது.
பயணம் செய்யும் நேரம்
லிம்கா, கிருமிநீக்கம் செய்யப்பட்ட பானமாகையால், பயணிகளுக்கு முற்றிலும் பாதுகாப்பானது.
Limca ®
CONTAINS ADDED FLAVOUR. CONTAINS NO FRUIT JUICE / PULP
® THE REGISTERED TRADEMARK OF PARLE (EXPORTS) LTD. BOMBAY.

கொள்ள வாங்குபவருக்கு உரிமை உண்டு. அதைப் பின்பற்ற மருந்தை உற்பத்தி செய்பவருக்கும், கடையில் விற்பவருக்கும் கடமை உண்டு.

2. உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் பொருள்களுக்கு எதிராகப் பாதுகாப்பு.

உதாரணம்: காஸ் ஸ்டவ், பிரஷர் குக்கர், மின் சாதனங்கள் (இவைகளால் ஏற்படும் ஆபத்தைத் தினம் தினம் நாளேட்டில் பார்க்கலாம்.)

3. ஏமாற்றுதல், தவறுகள், மோசமான சேவை இவைகளுக்கு எதிராகப் போராடுதல்.

4. ஏமாற்றுதல், தவறுகள், மோசமான சேவை இவைகளிலிருந்து தப்பிக்கப் பாதுகாப்பு. இவை உங்கள் உரிமை.

இவை காத்து உங்களுக்குத் தர நுகர்வோர் குறை நீக்கும் அமைப்பு, நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம், தமிழ்நாடு இவை உங்களுக்கு உதவக் காத்திருக்கின்றன.

நுகர்வோரின் கடமைகள்:

1. எப்பொழுதும் பொருளை வாங்கும் போது விழிப்பாக இருங்கள். பொருளைப் பற்றிய எல்லா விஷயங்களும் உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும். உற்பத்தி நாள், காலாவதியாகும் நாள், விலை இவற்றைப் பாருங்கள். எடை, தரம் இவற்றைச் சோதியுங்கள். அதிகம் படிப்பறிவில்லாத விஷய ஞானமில்லாதவர்களுக்கும் உதவுங்கள்.

2. பதுக்கலையும், கள்ள மார்க்கெட்டையும் நீங்கள் நினைத்தால் தவிர்க்கலாம். தற்காலிகமாகப் பொருள் தட்டுப்பாடு ஏற்படும் பொழுது பீதியடைந்து அதிக விலை கொடுத்து அதிகமாக வாங்காதீர்கள்.

விளம்பரங்களைக் கண்டு ஏமாறாதீர்கள். விளம்பரங்கள் உங்களைப் பாதிக்க விடாதீர்கள்.

உங்கள் பணத்தை ஒரே ஆண்டில் இரட்டிப்பாக்கித் தருகிறோம் போன்ற விளம்பரங்கள், அதிக வட்டி தரும் நிறுவனங்கள், சிட்டுக் கம்பெனிகள், உஷார்.

3. குறைந்த விலைக்கு வருகிறதென்று நிலம் வாங்க நினைத்தால் சற்று யோசியுங்கள். சட்ட ஆலோசனைக்குப் பிறகு எல்லாம் சரியாக இருந்தால் மட்டுமே வாங்குங்கள்.

4. தவறுகளை எதிர்க்கக்கூடிய தைரியத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.

5. இந்த நாட்டுக் குடிமகனான உங்களுக்கு இந்த நாட்டின் பொருளாதாரத்தில் பங்கு உண்டு. எனவே வீணாக, ஆடம்பரமாக உற்பத்தியோ, இலாபமோ இல்லாத வீண் செலவுகளைப் பெருக்கி பண வீக்கத்திற்குத் துணை போகாதீர்கள்.

6. இணைந்து தவறான செய்கைகளுக்கு எதிராகப் போராடக்கூடிய ஒரு தார்மீகப் பொறுப்பை வளர்த்துக் கொள்ளுங்கள்.

நுகர்வோருக்குத் தேவை விழிப்புணர்வு. கலப்படம் ஒரு சமூகக் குற்றம். வியாபாரிகளுக்கும் நுகர்வோருக்கும் இடையே இருக்கும் நல்லுறவே இதைத் தவிர்க்க உதவும். நுகர்வோர் இயக்கங்கள் நுகர்வோருக்குத் துணை நிற்கும்.

நுகர்வோர் ஒரு பொருளை வாங்கும் போது கீழ்க்கண்ட ஏழு கருத்துக்களை மனத்தில் கொள்ள வேண்டும்.

1. சரியான தகவல். பொருளைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டும்.

2. தரம் — சரியான நல்ல தரமான பொருட்கள்.

3. சரியான அளவு. (கடையில் ஒரு மீட்டர் துணி வாங்கி வந்தால் வீட்டில் வந்து அளந்தால் 70 செ.மீ.தான் இருக்கும்).

4. பாதுகாப்பு

5. நியாய விலை.

6. தேர்வு செய்யக்கூடிய நிலை (சாய்ஸ்)

7. வாங்கிய பொருள் தரமற்றதாக இருந்தால் அதைத் திருப்பக் கூடிய நிலை. விற்ற பொருள் மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்றுள்ள நிலை மாற வேண்டும்.

இவை எதிலாவது நுகர்வோர் இருப்தியடையா விட்டால் வழக்கு மன்றம் சென்று தனது உரிமையை நிலைநாட்ட முடியும்.

நமக்குப் பாதுகாப்பாகத் துணையாக இருப்பது நமக்குக் கடைக்காரர் கொடுக்கும் ரசீதுதான். அதை என்றும் மறக்க வேண்டாம். நுகர்வோரிடம் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டால் நிச்சயமாகத் தரமான பொருட்களே சந்தைக்கு வரும். அதில் சந்தேகமில்லை.

— எஸ். பானுமதி.

வெள்ளிக் கிழமை விளக்கு அதிக நேரம் எரிய வேண்டுமானால், ஒரு ஸ்பூன் விளக்கெண்ணையும், நல்லெண்ணையும் கலந்து ஏற்ற வேண்டும்.

— பார்வதி.




இயற்கையின் தூய்மையைப்
பகிர்ந்து கொள்வீர்
டெர்மரிக்
க்ரீம்
தேன் அடங்கியது
Shingar
TURMERIC
ANTISEPTIC
CREAM
WITH HONEY

கனவேயே
என் வாழ்க்கையின்
திசை மாற்றினாய்...!

உண்மையைச் சொல்லவேண்டும்; இதமாகச் சொல்லவேண்டும்!

பிரபல பெண் சோதிடர் கடலங்குடி சரஸ்வதிக்கு சோதிடத் திறமை பரம்பரை சொத்தாக வந்தது என்று ஒருவிதத்தில் கூற லாம்.

தன் தந்தை கடலூர் நடேச சாஸ்திரி களைப் பற்றிக் கூறும்போதே குரலில் பெருமை பொங்கி வழிகிறது திருமதி. சரஸ் வதிக்கு.

''என் அப்பா அந்தக் காலத்திலேயே சில புரட்சிகள் செய்தவர். வேதத்தை மொழி பெயர்க்கவே கூடாது என்ற கருத்து நிலவிய காலமது. ஆனால் என் அப்பா, ''பிரம்ம சூத்திர சங்கர பாஷ்யம்'' (வேதத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு) என்ற நூலை எழுதி வெளியிட்டார். நாராயணீயத்தையும் மொழிபெயர்த்தார். 'ஆரிய மாத சம்வர்த்தனி' என்ற பெயரில் ஒரு பத்திரிகை யையும் நடத்தி வந்தார்.

ஜோதிடத் துறையில் பெரும் புகழ்பெற்று விளங்கிய அப்பாவின் பெயரில்தான் நாங் கள் இருக்கும் தெருவிற்கு 'நடேசய்யர் தெரு' என்று பெயர் சூட்டப்பட்டது.''

ஜோதிடத் துறையை திருமதி. சரஸ்வதி விரும்பித் தேர்ந்தெடுத்துக் கொண்டாரா? புன்னகையுடன் அவர் பதிலளித்தார்.

''அப்படியென்று சொல்ல முடியாது. ஒருவிதத்தில் சொல்லப் போனால் ஜோதி டம் என் மீது திணிக்கப்பட்டது என்று கூட சொல்லலாம். என் பெற்றோருக்கு ஒன்பது குழந்தைகள். அத்தனையும் பெண்கள். ஜோதிடத் துறையில் தனக்கு ஒரு வாரிசு இல்லாமல் போய் விடுமோ என்று அப்பா மிகவும் கவலைப்படுவாராம். ஒன்பதாவது பெண்ணாக பிறந்த என் ஜாதகத்தை அவர் கணித்த போது ஜோதிடத் துறையில் என் னால் பிரகாசிக்க முடியும் என்று தீர்மானித் திருக்கிறார். விரைவில் அதற்கான முயற்சி களிலும் ஈடுபட்டார்.

நான் மிகவும் கட்டுப்பாடான சூழ்நிலை யில் வளர்க்கப்பட்டேன். பெற்றோர் பேச்சை மீறக் கூடாது என்ற பயமும் உண்டு. என்னுடைய ஏழாவது வயதில் சமஸ்கிருத மும், பத்தாவது வயதில் ஜோதிடமும் கற்றுத் தர ஆரம்பித்தார் என் அப்பா. சுமார் எழுபது வயதில் அவரது கண் பார்வை மங்கி விடவே நானும் (அப்போது எனக்கு வயது பதினாலுதான்) ஜோதிடத் துறையில் அப்பாவுக்கு உதவ ஆரம்பித்தேன்.''

இவரது கல்விப் பாதையில் ஆரம்ப கட்டங்கள் கூட ஜோதிடத் துறைக்கு உதவி யாக இருக்க வேண்டும் என்றே இவரது தந்தை தீர்மானித்தாராம்.

''என் வீட்டில் யாரும் கல்லூரி சென்று படித்ததில்லை. ஆனால் நான் கல்லூரிக்குச் செல்ல ஆசைப்பட்டேன். இதிகாசத்தில் வரும் லீலாவதி என்ற பாத்திரத்தைப் போல் நான் கணிதத்திலும் புகழ்பெற வேண்டும் என்று ஆசைப்பட்டார் என் அப்பா. மகளிர் கிருத்தவக் கல்லூரியில் சேர்ந்து கணிதம்,



வானியல் ஆகிய பாடங்களைப் பயின்றேன். எம்.ஏ.வில் சமஸ்கிருதமும், எம்.எட்.டில் உளவியலும், 'கௌன்சிலிங்கில்' டாக்டரேட்டும் பெற்றேன். நான் படித்த அத்தனை கல்வியுமே ஜோதிடத் துறையில் எனக்கு வெவ்வேறு வழிகளில் உதவியாக இருக்கின்றன.''

''1971ல் என் அப்பா இறந்து விட்டார். நான் தனியாகவே ஜோதிடம் பார்க்க ஆரம்பித்தேன். ஒரு பெண் ஜோதிடர் என்பதால் எனக்குச் சில தனி பொறுப்புகள் உண்டு. நெற்றியில் சரியாகப் பொட்டு வைத்துக் கொள்ளாமலோ, தலையைப் பரட்டையாக வைத்துக் கொண்டோ நான் வந்தவர்களுக்கு ஜோதிடம் சொல்ல முடியாது. அந்தத் தோற்றமே சகுனத்தடை என்று போய் விடுவார்கள். வெள்ளிக் கிழமை அன்று வீட்டு வாசலில் கட்டாயம் கோலம் போடப்பட்டிருக்கும்.''

இவர் சிலருக்குக் கூறிய ஜோதிடங்களையும் அவை பலித்தனவா என்பது பற்றியும் கேட்ட போது, ''என் தொழிலில் நான் நம்பகமானவளாக இருக்க வேண்டும். அதனால் பெயர்களை மட்டும் குறிப்பிட மாட்டேன்'' என்ற கண்டிஷனுடன் பதில் கூற ஆரம்பித்தார்.

''ஒரு பெண்மணி தன் ஜாதகத்தை என்னிடம் கொண்டு வந்தார். அப்போது தான் வாங்கிய வைர அட்டிகையையும் என்னிடம்காண்பித்தார். அவர் ஜாதகத்தைப் பார்த்த எனக்கு, தன் மாங்கல்யத்தை அவர் விரைவில் இழந்து விடுவார் என்று தோன்றியது. இந்த விஷயத்தை அவரிடம் சொல்ல என் மனம் கடைசிவரை இடம் தரவில்லை. ஒரு பெண்ணுக்கு ஏற்படக்கூடிய மிகப் பெரிய அவலம் தன் கணவனின் வாழ்நாட்கள் எண்ணப்படுகின்றன என்பது தான்.

ஒருமுறை ஒரு தம்பதியர் தங்கள் பிள்ளை வீட்டை விட்டு ஓடி விட்டதாக சொன்னார்கள். அந்தப் பையனின் ஜாதகத்தை ஆராய்ந்த போது மீண்டும் அவன் வீட்டுக்கு வர மாட்டான் என்பது தெரிந்தது. ஆனால் அந்தத் தாய் இருந்த இருப்பில் அதை உடனே எப்படிச் சொல்வது? ஒரு வாரத்துக்குப் பரிகாரம் என்ற பெயரில் கடவுளுக்கு அர்ச்சனை செய்யச் சொன்னேன். பிறகு அவரது மனமும் உடலும் ஓரளவு தாங்கும் சக்தியைப் பெற்று விட்டதெனத் தெரிந்ததும் விஷயத்தைச் சொன்னேன். 'சத்தியம் ப்ருயாத்; ஹிதம் ப்ருயாத்' என்பார்கள். ஜோதிடத்தில் உண்மையையும் சொல்ல வேண்டும், அதை இதமாகவும் சொல்ல வேண்டும்.

ஒருமுறை நான் ஜோதிட மாநாட்டுக்காக வெளிநாடு சென்று திரும்பி வந்த போது என மகன் ஒரு காரை வாங்கி வைத்திருந்தான். எனக்கென்னவோ விரைவில் நான் ஒரு விபத்தில் மாட்டிக்கொள்வேன் என்று தோன்றியது. அதனால் அதை விற்கச் சொல்லி விட்டேன். கொஞ்ச நாளில் நான் ஆட்டோவில் வரும் போது ஒரு விபத்து ஏற்பட்டு என் கை, கால்களில் அடிபட்டது. நான் காரில் வந்திருந்து, அதை என் மகனும் ஓட்டியிருந்து இந்த விபத்தும் நடந்திருந்தால்....? தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று என்று எண்ணிக் கொண்டேன்.''

ஜோதிடம் என்பது ஓர் ஏமாற்று வேலை என்று சிலர் கருதுவதுண்டு. ''பத்துப் பொருத்தம் பார்த்து விவாகம் செய்யும் தம்பதிகள் எல்லோருக்கும் சந்தோஷமான

வெல்லக் கொழுக்கட்டை பூரணம் செய்து இறக்கியவுடன் பொட்டுக்கடலை மாவைத் தூவி உருட்டவும். ஆவியில் வேக விடும் போது, நீர்க்காது. கொழுக்கட்டை 'ஒன்' என்றும், ருசியாகவும் இருக்கவும்.

— பார்வதி




மால்ட்டோவா அன்னையர் வெற்றிக்
குழந்தைகள் வளர்ந்திட உதவுகின்றனர்.
MALTOVA
MALTOVA
Rs. 3/- LESS
MALTOVA
வேலையிலோ விளையாட்டிலோ,
எல்லாவற்றிலுமே வெல்ல
உதவுவது உங்கள் உதவி.
உங்கள் அன்பு. உங்கள்
அரவணைப்பு. அக்குழந்தைக்கு
நீங்கள் கப்பில் தரும்
மால்ட்டோவா. மால்ட்,
புத்தம்புது பால் திரட்டு,
கோகோ, சர்க்கரை ஆகியன
நிறைந்த நலச்செழுமை.
உங்கள் குழந்தைக்குத்
தேவையான நலம், வலு,
ஆற்றல் அனைத்தையும்
தாருங்கள்.
MALTOVA®
ஆரோக்கியம், ஆற்றல் மற்றும் சக்திக்காக.
everest/D90/JIL/180TAM



மணவாழ்க்கை அமைந்து விடுகிறதா என்ன?'' ''ஒரே நேரத்தில் பிறக்கும் இரட்டைக் குழந்தைகள் வெவ்வேறு குணநலன்கள் கொண்டிருப்பதே ஜோதிடத்திற்குத் தோல்விதானே'' என்ற வாதங்களுக்கும் அவர் பதிலளித்தார்.

''பத்துப் பொருத்தங்கள் இருப்பதனாலேயே சிறப்பான மணவாழ்க்கை அமையும் என்று உத்திரவாதம் கிடையாது. மேலே தொடரலாம் என்பதற்கான பச்சை விளக்கு தான் அது. அதற்குப் பிறகு செவ்வாய் தோஷம், பெண்ணுக்கும் பையனுக்கும் ஒருவரையொருவர் பிடித்துப் போதல் போன்ற பல விஷயங்களை கவனிக்க வேண்டும்.

தேங்காய்ச் சாதம், எலுமிச்சை சாதம் செய்யும் போது, கடலைப் பருப்புக்குப் பதில் பொட்டுக்கடலை போடலாம். சத்தும் அதிகம், வறுக்க வேண்டாம். கடினமாக இருக்காது.

— பார்வதி.



இரட்டையர்கள் பற்றிய கேள்விக்கு என் பதில் இதுதான். ''நவாம்ச லக்னம், நட்சத்திர பாதம் போன்றவை மாறினால் இரட்டையர்களின் வாழ்க்கைப் பாதையும் வேறுபட நேரிடலாம்.''

தன் குடும்ப வாழ்க்கையைத் தன் தொழில் ஒருபோதும் பாதிக்க விட்டதில்லை என்கிறார் இவர். தன் சுய பிரதாபத்தை கணவரிடம் வெளிகாண்பிக்க மாட்டாராம். ''ஏனென்றால் ஈகோக்களின் மோதல் வந்து விடக்கூடாது பாருங்கள்'' என்று தன் ஜாக்கிரதை உணர்வை வெளிக்காட்டுகிறார்.

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, சிங்கப்பூர் போன்ற பல நாடுகளுக்கு அழைப்புக்களின் பேரில் போய் வந்திருக்கிறார் இவர். உலகின் 'ஹூ ஈஸ் ஹூ' என்ற புத்தகத்தில் தனிச் சிறப்புப் பெற்ற பெண் ஜோதிடர் என்று இவரைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறது.

இன்றைய தலைமுறையினர் பெரும்பாலும் ஜோதிடத்தில் நாட்டமோ நம்பிக்கையோ இல்லாமல் இருக்கிறார்கள் என்ற நம் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை இவர்.

''அப்படி இல்லை. சொல்கிற விதத்தில் சொன்னால் அவர்கள் புரிந்து கொள்வார்கள். 'பிரசன்டேஷன்' மிக முக்கியம். உவமைக்கதைகள் தற்காலச் செய்திகள் ஆகியவற்றையும் கலந்து தாய்மொழியிலோ ஆங்கிலத்திலோ விளக்கினால் அவர்கள் ஜோதிடத்தைத் தானாக நம்புவர்.''

— அருண் சரண்யா.


கனமான சூட்கேஸ்?
நோ ப்ராப்ளம்!
பாலின் சக்தி நிறைந்தது
பாலின் இயற்கை சக்தி. பெறுவீர், சுவையான, கரகர மொறுமொறு பிஸ்கட்டில்: பேக்மேன் மில்கோபிக்ஸ்.
உங்கள் குழந்தையின் வளரும் பருவத்திற்கு ஏற்ற, புதிய சத்துமிக்க பால் பிஸ்கட்.. உங்கள் சின்னப் 'பயில்வானு'க்கு இன்றே ஒரு பேக் மில்கோபிக்ஸ் வாங்குவீர்.
Bakeman's
MilkoBix
BISCUITS
பயில்வான்களின் முதல் விருப்பம்!
ரூ.3/ மட்டுமே
O&M/042/Tam

கல்யாணக் கனவுகள்

உமாகுமார்

"கௌரீ! கௌரீ!" — பத்மா கூப்பிட்டபடியே புது கொலுசு கிலுக்! கிலுக்!கென்ற படி ஓடி வருகிறாள். முழங்காலில் ஊன்றியிருந்த தாவாங்கட்டையைத் தூக்கி, நிமிர்கிறேன்.

"ம்! அம்மா அங்கே மண்டபத்துக்கு கிளம்பறதுக்கு ரெடியாச்சான்னு ஆயிரம் தடவைக் கேட்டு பறக்கடிக்கிறா எங்களை. நீ என்னடான்னா தோய்க்கற கல்லுல உட்கார்ந்து பவழ மல்லியைப் பார்த்துண்டிருக்கே. கிளம்பு"

முடித்தவள் சடக்கென்று இடது காலைத் தூக்கிக் கல்லில் வைக்கிறாள்.

"ஏ! கௌரி இந்த டிஸைன் எப்படியிருக்கு என் காலுக்கு?" மெள்ள சிரிக்கிறேன்.

"நல்லாயிருக்கு!"

"பளபளப்பப் பாரேன்!"

குழியில் சப்தம் நன்றாக வரட்டும் என்று 'நங்'கென்று ஒரு குதி குதிக்கிறாள். கொஞ்சமாவா குதித்தாள் இதை வாங்கிக் கொள்வதற்கு.

"அம்மா! எனக்குக் கொலுசு வாங்கித் தந்தா தா. இல்லைன்னா கல்யாண மண்டபத்து பக்கமே வர மாட்டேன் ஆமா...!"

"ஏண்டி வீட்டு நிலைமைப் புரியறதா? முன்னூறு ரூபா ஆகிறது உன் காலுக்கு அன்னைக்கே கேட்டேன்."

"பேசா கேட்டுட்டு வந்துட்டியா. அக்கா கல்யாணம்னு பேரு. ஒரு டிரஸ் உண்டா? அது தான் கிடையாதுண்ட்டே. இப்ப இந்த சான்ஸை விட்டா அப்புறம் எப்ப கிடைக்கப் போறது எனக்கு?" ஒருவேளை உண்ணா விரதமும் இரண்டு நாள் மௌனவிரதமும் அம்மாவின் மனசை மாற்ற இதோ வீட்டில் சலக்! சலக்கென்று கொலுசு சப்தம்.

ஆனால் அந்த பத்தர் கடையில் கணக்கு?— நிச்சயம் நிறைய இருக்கும். இரண்டு வளையல் இரண்டு பவுனில் அதைத் தவிர நெக்லஸ் இரண்டரை பவுன் அது இது என்று ஐந்து ஐந்தரை பவுன் வாங்கியிருக்கிறதே. அன்று அப்பா எத்தனை எடுத்துக் கொண்டு போனார். மூவாயிரம்? ஹா! மீதி தலை சுற்றியது. எப்படி இந்தக் கடனை அடைக்கப் போகிறார் அப்பா! மாசக் கடைசியில் பால் பாட்டில் வாங்கக் காசின்றி "நாலஞ்சு நாளைக்குப் பாட்டில் வச்சுட்டு போப்பா! சேத்து வாங்கிக்கோ சித்த!" — என்று அட்ஜஸ்ட் பண்ணும் அம்மா இதை எப்படி சமாளிக்கப் போகிறாள்?

தலையில் ஒரு கை முடியெடுத்துப் பூ வைக்க திரும்புகிறேன், அம்மா!

"நல்லாயிருக்கு போ! கல்யாணப் பொண்ணா லட்சணமா அலங்காரத்தைப் பண்ணிண்டு மண்டபத்துக்குக் கிளம்பறதை விட்டுட்டு இது என்ன தோய்க்கற கல்லுல வந்து உட்கார்ந்துண்டு. முகமெல்லாம் சோர்ந்து கிடக்கு நாலு நாள் பட்டினி மாதிரி. போ! அரிசி உப்புமா பண்றா சித்தி. எடுத்துக்கோ போ! பளிச்சுன்னு இன்னொரு தடவை சோப் போட்டு மூஞ்சி அலம்பிண்டு அந்த "நெட்லெட்" புடைவையை எடுத்துக் கட்டிக்கோ! அதுக்கு மேட்சா மஞ்ச உள் பாவாடை இருக்கோல்லியோ? ம்! எழுந்திரு."

கையைப் பிடித்து எழுப்புகிறாள் அம்மா. என் அம்மாதான். ஆனால் இன்று அவளை நிமிர்ந்து அவள் கண்ணோடு கண் சேர்த்துப் பார்க்கும் தைரியம் துளி கூட இல்லை. பயம்! எங்கே அப்படிப் பார்த்தால் என்னையறியாமல் கதறி அழுது விடுவேனோ என்று பயம்.

"இந்தா! இந்தப் பூவையும் சுத்து கல்யா

ணப பெண் தலையிலே!'' — சித்தி வரு கிறாள். கையில் கனகாம்பரத்தோடு.

''நீயே வை! மனசுல எதையோ வச்சுண்டு மருகறதைப் பாரேன் இந்தப் பெண். பொண்ணாப் பொறந்துட்டா இதுதான். ஒரு தொட்டில்ல தவழ்ந்துட்டு இன்னொரு கூட்டிலுக்குத்தான் போகணும். அன்ன சத்திரம் கட்டிண்டு அம்மா வீட்டிலேயே கிடக்க முடியுமா என்ன!''

அம்மா பழமொழிப் புலம்பல் புலம்ப சித்தி கையமர்த்தி அவளை சமாதானப் படுத்துகிறாள்.

''சும்மா இரும் பாரு. குழந்தை கல்யாணம்னா என்னென்ன சொப்பனம் பாப்பாளோ! நம்மகிட்டே சொல்லிண்டா இருப்பா எல்லாம். போ! போ! பட்சணம் பண்ண ஆரம்பிச்சிருப்பான் மண்டபத்துல. ரிக்ஷா வந்து பெட்டியெல்லாம் அனுப்பியாச்சு. நம்ம இளம்பற வழியப் பாரு போ!''

அவர்கள் மாப்பிள்ளை அழைப்பு முடிந்து சாப்பாட்டில் என்ன போளி போடுவது என்று சர்ச்சித்துக் கொண்டே போக நானும் பின்னால் போகிறேன்.

மதியம் மணி இரண்டு.

அந்தக் காலத்து முற்றம். இரண்டாங் கட்டு. ரேழி கொண்ட பழைய காலத்து வீடு! மண்டபமாக மாறியிருக்கிறது. வெளியில்தான் பெரிய போர்ட் ''மஹாலட்சுமி திருமண மண்டபம்'' என்று தொங்குகிறது. உள்ளே அதே வீடு! அதே ரேழி இருட்டு.

''பெட்ரோமாக்ஸ் சொல்லியாச்சோ! ஏண்டா கோபாலா...!''

அங்கே இத்தனை நேரம் உட்கார்ந்திருந்ததால் மறந்துப் போன காலை ஒரு உதறு உதறி நீவி விட்டபடியே எழுந்து அப்பாவைத் தேடிக் கொண்டு போகிறாள்.

''எல்லாம் சொல்லியாச்சும்மா! நீ உள்ள ஆக வேண்டியதைப் பாரு. 'டாண்'னு ராகுகாலம் முடிஞ்சதோ இல்லையோ மூணு மணிக்கெல்லாம் சம்மந்தி பேர் வந்து இறங்கிடுவா! கொஞ்சம் மாடில யாரையாவது அனுப்பி ஜமுக்காளம் போட்டு சந்தனம், சர்க்கரையெல்லாம் ரெடி பண்ணச் சொல்லு.''

அப்பாவின் குரல் ரேழியிலிருந்து 'கணீ'ரென்று கூடம் வரை வந்தது.

''அதெல்லாம் இழை கோலம் காஞ்ச உடனேயே தயாரா பண்ணிட்டு இப்பத்தான்



கீழே வந்து சித்த உட்கார்ந்தேன்!''

''ஏண்டாப்பா கோபாலா! வாசல்ல இப்படி இரண்டு வாழை மரங் கட்டின தோட போறும்னு விட்டுட்டியா? ரெண்டு காலை நட்டு ஒரு சின்னப் பந்தலா போட சொல்லக் கூடாதோ? மூத மொதல்ல கல்யாணம் பண்ற...''

யாரோ நீட்டி முழுக்க,' பதில் வரவில்லை கொஞ்ச நேரம்.

''எனக்கும் ஆசைதான். எம் பொண்ணுக்கு என்னென்னமோ பண்ணணும்னு'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே வருகிறார் அப்பா. என்னைத் தாண்டியவர்... நிற்கிறார். திரும்பி அருகே வருகிறார். ''மருதாணி இட்டுண்டியாம்மா?'' —நிமிர்கிறேன் தலையாட்டியபடியே. கண்களின் நீர் அப்பாவை மங்கலாகக் காட்டுகிறது. வாஞ்சையோடு ஒரு தடவை உச்சந்தலையை வருடி விட்டுக் கூடத்தைத் தாண்டிப் போகிறார் விருவிருவென்று.



என்னைப் பெண் பார்க்க வந்த போது எத்தனை சந்தோஷம் இந்த அப்பாவின் முகத்தில். வாசலுக்கும் உள்ளுக்குமாக ஆபீஸிற்கு லீவு போட்டு விட்டு எத்தனை தடவை ஓடியிருப்பார். நடுநடுவே எத்தனை கேலி எத்தனை கிண்டல்.

''பாரு! அம்மா பார்வதி! பரதேவதை. கேசரியைக் கொஞ்சம் பார்த்துக் கிளறு. கேசரியைப் பார்த்துட்டு எங்காவது எம் பொண்ணைப் பிடிக்கலைன்னு போயிடப் போறான் புள்ளையாண்டான்!''

அம்மா சிரித்துக் கொள்வாள். ''ரொம்ப சமர்த்து வழியறது போங்க!'' — என்றபடியே.

''கையிலே காலணா சேர்த்து வச்சுக்கலை! பொண்ணை பொண் பார்க்க கூப்பிட்டாச்சு. பொண் புடிச்சுப் போய் மேல பேச்சு ஆகி பாக்கு வெத்தலை மாத்தணும்னா! என்ன பண்றது. அதை யோசிச்சீங்களா?''

''தோ பாரு நடக்க வேண்டியதை நாம பார்த்துப்போம். நாளைக்கு நடக்கப் போறதை ஏழுமலையான் பார்த்துப்பான். புரிஞ்சுதா! இப்ப பஜ்ஜியைக் கொண்டா இரண்டு. உப்பு போறுமான்னு பார்த்துட்டு ஓடறேன்!''

இப்படி விளையாட்டாக இருந்த அப்பா கூடத்தான் எத்தனை மாறி விட்டார் பின்னால். உடனே நிச்சயம் என்று ஆன பிறகு சொல்லப் போனால் தூக்கம் என்பதே மறந்து விட்டது இருவருக்குமே!

''என் கழுத்து சங்கிலி மூணு பவுன் தானே! மெருகு போட்டு திருமாங்கல்யத்தைக் கோத்து அவ கழுத்துல போட்டுடலாம். திருமாங்கல்யம் பண்ணியாகணும். வளை இரண்டு பவுன்னு வச்சுண்டாலும் இரண்டும்சேர்த்து மூணரை ஆச்சு. நெக்லஸ் இரண்டரை பவுன். ஆறு பவுன். மாப்பிள்ளை மோதிரம் அரை பவுன். அப்புறம் வெள்ளியிருக்கே!''

சில சமயம் காப்பி கலந்தவுடன் திரிந்து போய் விடும். புளிக்காமல் இருக்கிறதா என்று பார்த்து விட்டு, டீ வடிகட்டியில் வடிகட்டினால் காப்பி வித்தியாசம் தெரியாமல் நன்றாகவே இருக்கும்.

— பார்வதி.



இதே பேச்சுத்தான் சாப்பிடும் போதும், குளிக்கும் போதும். புடைவை பற்றி, மண்டபம் பற்றி, யாராரிடம் கடன் கேட்பது என்று... அரைத் தூக்கத்தில் புரண்டு படுத்தால் மூலையில் கிசுகிசுப்பாக அப்பா அம்மாவோடு உட்கார்ந்து ஜன்னல் வழியாக வானத்தை வெறித்தபடியே பேசிக் கொண்டிருப்பார்.

''பாரு. பி.எஃப்.லேயிருந்து லோன் வர்றது. நாலோ, நாலரையோதான். அவங்களுக்கு கையிலே வேற மீதி ஆயிரம் கொடுத்தாகணும். நீ சொல்ற பட்சண, புடைவை லிஸ்ட்டைப் பார்த்தா அதுக்கெங்கே போறது போலிருக்கேடி?''

''பின்னே? கல்யாணம்னா சும்மாவா! மணைல நாளைக்கு கன்னிகாதானம் பண்ணிக் கொடுக்க நிக்கணுமேன்னு ஒரு ஒன்பது கஜம்பட்டுப்புடைவைசாதாரணமா ஒண்ணு எனக்கு வாங்கிக்கலாம்னு நினைச்சுண்டிருந்தேன். இங்கே இருக்கறதுக்கே முழி பிதுங்கறதே? ஒரு சின்னாளபட்டில 'பளிச்'சுன்னு பார்த்து ஒண்ணு எடுத்துக்கறேன்.''

குழந்தைக்கு ஒரு தாலிக் கூரைப் புடைவை, ஒரு ஊஞ்சல் புடைவை, மத்ததுக்கு சாதாரணமா ரெண்டு புடைவை வாங்கிடுவோம் போதும். அன்னைக்கே பாக்கு வெத்திலை மாத்தற அன்னைக்கே புள்ளையோட மாமி கொஞ்சம் சேப்பா, ரெட்டநாடியா வரலை அவ அப்பவே சொன்னா ''பட்டுப் புடைவைல ஏனோ தானோன்னு வாங்கிடாதீங்கோ. ஆயிரம் ரூபாய்க்குக் குறையக் கூடாதுன்னு.''

''ம்! வாங்கிட்டாப் போறது. நாளைக்கே செட்டியார் கடைல பார்த்துப் பேசறேன். இன்னைக்கு வியாழன். என்ன சொல்லப் போறார். உனக்கா வந்து அள்ளிக்கோம் பார் செட்டியார். நாளைக்கே போறேன் ஆபீஸ் போறச்சே. நாளன்னிக்கு ம்ஹூம் சனிக்கிழமை வேண்டாம்! திங்கள் கிழமை குழந்தையையும் அழைச்சுண்டு போய் புடிச்சதா போய் எடுத்துக்கங்கோ!'' — இப்படி எத்தனை ப்ளான்கள்?

''கௌரீ!'' — பின்னால் வந்து கழுத்தைக் கட்டிக்கொண்ட பத்மாவை மெள்ள விலக்குகிறேன். "எங்கேடி அம்மாவைக் காணோம்?"

''ம்! அதைக் கூட நான்தான் சொல்லணுமா? அங்கே அத்திம்பேர் வந்து இறங்கியாச்சு பட்டாளத்தோட. அப்பா! மேல மாடிருமே ரொம்பி வழியறது.''

இப்பவே இவ்வளவு கூட்டமா? பத்து பேர்தானே வருவதாக சொன்னார்கள்? — நினைத்துக் கொள்கிறேன். சமையல் லிஸ்ட்டில் இன்னும் அதிகமாக சாமான் தேவைப்படுமோ?

''கௌரீ! பாரேன் அம்மாவ இங்கே வந்து கூட என்னைத் திட்ட ஆரம்பிச்சுட்டா!''

''ஏன்?''

''நீயே சொல்லு. மாப்பிள்ளை விட்டுக் காரா ஜோரா வந்து இறங்கிட்டா. இந்த டிரஸ்ஸ மாத்தின்டேன்! முறைக்கறா. இதை எதுக்குடி இப்பவே தீச்சுண்டு நிக்கறே? மாப்பிள்ளை அழைப்புக்கு என்னத்தைப் போட்டுப்பேன்னு பல்லைக் க டி க் க றா.'' நிமிர்ந்து பார்க்கிறேன். போனா வருஷத்திய தீபாவளி டிரெஸ். சிவப்பு வண்ண பாம்பே—டையிங் பாவாடை. சிவப்பு தாவணி, ப்ளவுஸ்.

''தோ பாருடி பத்மா. ஆகிற செலவுல உங்களுக்கெல்லாம் வேற இட்டு ரொப்பின்டிருக்க முடியாது. புரிஞ்சுதா. மாப்பிள்ளை அழைப்பண்ணிக்கு பளிச்சுன்னு அந்த தீபாவளி டிரஸ்ஸை போட்டுக்கோ. மறு நாள் ஊஞ்சல் போது கௌரியோட புடைவை ஒண்ணை எடுத்து சப்தமில்லாம கட்டிக்கோ! கல்யாணம் ஆன கையோட அவிழ்த்து பத்திரமா அவ பொட்டியிலே மடிச்சு வச்சுட்டு அதே பாவாடையை எடுத்துக் கட்டிண்டுடு தெரிஞ்சுதா? கல்யாணம் நிச்சயமானதிலிருந்து அம்மா அவளிடம் ஓதிய பாடம் இது — சிரிக்கிறேன்!

''சரி! சரி அம்மா டென்ஷன்ல ஏதாவது சொன்னா பட்பட்ன்னு பதில் சொல்லிண்டு நிக்காதே! ஆமா ''பத்தர் தட்டு அடிச்சுக் கொண்டு வந்துட்டானா?''

''ம்ஹூம்! அதான் அப்பா கூட தவிச்சுண்டு இருக்கார். நம்ம பக்கத்து வீட்டு சீனு இல்லே. அவனைத் தன் சைக்கிளைக் கொடுத்து அனுப்பியிருக்கார். போய் பத்தரைப் பார்த்துட்டு வான்னு!''. — பரபரவென்று கதவைத் திறந்து கொண்டு நாலைந்து பேர் நுழைய பத்மா பாக்குத் தட்டைத் தூக்கிக் கொண்டு ஓடுகிறாள்.

மாலை மணி ஐந்து.

''கௌரீ!'' — ஏ கௌரி! நீலா வந்திருக்காப் பாரு!

''வாடியம்மா! பிரெண்ட் கல்யாணத்துக்கு வர்ற நேரமா இது! அம்மா அப்பாவெல்லாம் எப்போ வர்றா?''

''கார்த்தால வருவா மாமி!'' — சொல்லிக் கொண்டே ஓடி வந்து கட்டிக் கொள்கிறாள்.

''கன்கிராஜுலேஷன்டி கௌரீ!''

''தேங்க்யூ!''


''எனக்கு விஷயமே தெரியாது தெரியுமோ. ஒரு நாள் ஆபீஸ் விட்டு வரச்சே மாமாவைப் பார்த்தேன். ''சமையக்காரனுக்கு அட்வான்ஸ் கொடுத்துட்டுப் பேசி முடிச்சுட்டு இப்பத்தான் வரேன். இதே மாதிரி கௌரியின் கல்யாணம் நிச்சயமாகியிருக்குன்னு 'டேட்'டு சொன்னார். இல்லேன்னா பத்திரிகை பார்த்துத்தான் தெரிஞ்சிண்டிருப்பேன்.''

கழுத்தில் மின்னிய செயினை விரலை விட்டு முறுக்கியபடியே அவள் பேசிக் கொண்டே போக பேசாமல் முழுந்தாளை கட்டியபடி கேட்டுக் கொண்டிருக்கிறேன். எனக்கு எப்போதுமே 'வளவள' வென்று பேசப் பிடிக்காது. பிடிக்காது என்ன? தெரியாது. உட்கார்ந்து அரை மணி நேரம் வாய் ஓயாமல் கதை அளப்பவர்களை ஆச்சரியமாகப் பார்ப்பேன். எப்படி இவர்களால் மூச்சு கூட விடாமல் ஒரு விஷயத்திலிருந்து மறு விஷயத்திற்குத் தாவ முடிகிறது? அதுவும் இந்த நீலா! வாய் திறந்தால் அடித்துத்தான் மூட வைக்க வேண்டும். நல்ல பேச்சு! நல்ல மூளை! நல்ல படிப்பு.

படித்து முடித்து காலேஜ் வாசல் வரை கூடப் போய் டிகிரி வாங்கிக் கொண்டு வேலையும் 'சட்'டென்று கிடைத்து விட ஒரு கம்பெனியில் ஸ்டெனோகிராபராகி விட்டாள். நிச்சயம் இவள் கல்யாணத்தில் இவள் அப்பா, அம்மாவிற்கு இத்தனை... இத்தனை சுமையிருக்காது. இவள் சம்பளத்தில் பாதியையாவது மிச்சப்படுத்தி வாங்கி சேர்ப்பார்கள். நான்? அதிகம் படிப்பில் நாட்டமில்லாமல் டென்த் பரீட்சையைக் கோட்டை விட்டு விட்டு பேப்பரில் நம்பர் வராமல் போக அன்று அழுத அழுகை இன்றும் ஞாபகம் இருக்கிறது: அம்மா என்ன சொன்னாள் அன்று.

''போயிட்டுப் போறது போ! பெயிலானா என்ன இப்ப? பாஸ் பண்ணி எந்த காலேஜ்ல போய் படிச்சு சம்பாதிக்கணும்? ஆசைப்பட்டா அந்த எந்த பேப்பர் போனதோ அதை வேணா முடிஞ்சா எழுது. இரண்டு மூணு வருஷம். ஜாதகம் எழுதி, நாலு இடத்துல கொடுத்து, நல்ல இடமா தகைஞ்சா அப்புறம் என்ன? மகாராணியாட்டமா ராஜ்ஜியம் பண்ண கிளம்பப் போறே!''

அம்மாவின் இந்த விளக்கம் அப்போது



காராமணி ஒரு பங்கு. அரிசி ¼ பங்கு என்ற கணக்கில் லேசாக வறுத்து பொடிக்கவும். இதில் பொடி உப்பு, நீர் கலந்து பிசைந்து சேவை (பெரிய துளைகள் கொண்டது) அல்லது தேன்குழல் அச்சில் பிழிந்து ஆவியில் வேக வைத்து, தேவையான காய்கறி மசாலா தயாரித்து, இரண்டையும் கலந்து, கொத்துமல்லி தூவி பரிமாறலாம். சத்தான சிற்றுண்டி.

— ஆனந்தி.



ஒரு பாட்டிலில் இருந்து வேறு பாட்டிலுக்கு எண்ணெய் மாற்றும் போது, வழியாமல் இருக்க பாட்டிலின் வாயில், ரப்பர் பேண்ட் போடவும்.

— பார்வதி.

வருத்தத்தைப் போக்கியது. மேலே யோசிக்க விடாமல் எல்லா கதவையும் மூடியது. கல்யாணம் என்று நினைத்துப் பார்த்து வெட்கப்பட வைத்தது. ஆனால் இன்று? இன்று இப்போது நினைத்துப்பார்க்கிறேன். நானும் நீலா போல இருந்தால் நிச்சயம் அம்மா ஒரு பட்டுப் புடைவை வாங்கிக் கொண்டிருப்பாள். நிச்சயம் அப்பா... அப்பா..

"ஏய்! கௌரி!" — நீலா பிடித்து உலுக்க சிலிர்த்துப் போகிறேன்.

"எங்கம்மா? நாளைய கனவுக்கு இன்னைக்கே போயாச்சா. மிஸ்டர் ஸ்ரீதரன் கிட்டே சொல்லட்டுமா போயி?"

"யாரு ஸ்ரீதரன்?" பேந்த பேந்த முழிக்க என் கன்னத்தைத் திருகுகிறாள்.

"யாரு ஸ்ரீதரனா? போச்சுடியம்மா. எனக்குத் தெரியாது. நான் என்னமோ பத்திரிகையைத்தான் பார்த்தேன். ஸ்ரீதரனுக்குக் கௌரியை கன்னிகாதானம் செய்து கொடுப்பதாய்ன்னு எழுதியிருந்தது. ம்க்கூம்! ஆளு எப்படி கறுப்பா? சேப்பா? இல்லை நம்ம ஜாதியா?"

இடுப்பைக் கிள்ளியவளின் கையைப் பிடித்துக் கோர்த்துக் கொள்கிறேன் விரலோடு விரலாய். கறுப்பா? சேப்பா? யாருக்குத் தெரியும்? சொன்னாள் நம்புவாளா இவள். பெண் பார்க்க வந்த அன்று பயத்தில் வியர்வை வர கையில் பிடித்திருந்த கர்சீப்பில் விரலை உருவியபடி தரையைப் பார்த்தபடியே உட்கார்ந்து விட்டு "தையல்லாம் தெரியுமாம்மா?" என்ற கேள்விக்கு மட்டும், நிமிர்ந்து அருகில் உட்கார்ந்திருந்தவளின் முகத்தைப் பார்த்துப் பதில் சொன்னேன். "கொஞ்சம் கொஞ்சம் தெரியும்!" என்று. பிறகு மீண்டும் கீழே பாயைப் பார்த்துச் சுரண்டல்.

"ரொம்ப வெட்கப்படறா! உள்ள போம்மா!" யாரோ சொல்லி வாய் மூடு முன் ஒரே ஓட்டமாக எழுந்து உள்ளே ஓடி வந்து விட்டேன். ஐந்து நிமிடத்தில் அம்மா அருகில் வந்து "என்னடி புடிச்சிருக்கா?" — என்று தலையைக் கோத காரணமில்லாமல் வெட்கப்பட்டேன். நிச்சயமாகி மாப்பிள்ளை அழைப்பு வரை வந்தாகி விட்டது. இப்போது நான் சொன்னால் யார் நம்புவார்கள்? முதலில் இவள் நம்புவாளா?

"போடி நீலா! போய் டிபன் சாப்பிடு." அம்மா அழைத்தபடியே வர, "ஓகே. மாமி!" என்றபடியே நீலா எழுந்து போகிறாள்.

அம்மா உள்ளே வந்து மூலையில் அடுக்கியிருந்த பட்சணை டின்னை திறந்து பார்க்கிறாள்.

"எறும்பு கிறும்பு வராம இருக்கணும்."

"அம்மா!"

"என்ன? என்ன வேணும்? அப்பவே கௌரிக்கு டிபனைக் கொண்டு குடுன்னு பத்மாகிட்டே சொன்னேன் சாப்பிட்டியோ!"

நிமிர்ந்து பார்க்கிறேன். அலைச்சலின் அயர்ச்சி இப்போதே கண்களில் மிதக்க தளர்ந்து போய் ஒடிந்து நிற்கிறாள்.

"அம்மா வெள்ளித் தட்டு அடிச்சு வந்துடுத்தா?"

அம்மா பதிலின்றி பக்கத்தில் வந்து உட்காருகிறாள்.

"வந்துடும் வந்துடும். இத்தனை நாழி ஏன் ஆச்சுன்னு தான் புரிய மாட்டேங்கறது. முருகன் பத்தன்ட்ட சீனுவை நாலு தடவை அனுப்பியாச்சு. ஆளையே பார்க்க முடியலேன்னு வெறுங்கையோட வந்துட்டான். திரும்ப அதான் உங்க அப்பாவே போயிருக்கார். சாயங்காலம் நிச்சயதார்த்தத்தின் போது மணைல வைக்கணுமே. ஆயிரம் ரூபாவைத் தூக்கி அவன்கிட்டே கொடுத்துருக்கு. நாடியம்பாளைத்தான் வேண்டிண்டிருக்கேன்! அவதான் துணையா இருக்கா இப்ப மட்டும் என்ன, இனிமேலும் அவதான் நின்னு சொச்ச காரியத்தையும் நடத்திக் கொடுக்கணும்."

அம்மா குரல் தழுதழுக்க வழக்கம் போல அடிவயிறு என்னவோ செய்கிறது எனக்கு. என்ன ஆகும்?

"பாரு...ரு" அப்பா உற்சாகம் குரலில் துள்ள உள்ளே நுழைந்தார்.

"உங்கப்பா வந்துட்டார்!" — அம்மா பரபரக்கிறாள்.

"இந்தா பர்ஸ்ட் கிளாஸா அடிச்சிருக்கான் தட்டு. ரெண்டு பேர் பேரையும் ஒட்டச் சொன்னேன். அதை மறந்துட்டான்.

"போறது சமயத்துக்கு இப்பப் பொருள் கைக்கு வந்ததே! அதே போறும். அதைத்தான் சொல்லிண்டிருந்தேன் கௌரிட்ட."


அப்பா முறைக்கிறார். பட்டென்று என்னருகே வந்து உட்கார்ந்து கொள்கிறார்.

"குழந்தைகிட்டே என்னென்ன பேசறதுன்னு இனிமே நான் சொல்லித்தான் தெரியணும் உனக்கு. நீ எதுக்கும்மா கவலைப்

படறே. பிரியர்புல்! ப்ரெண்ட் நிலா வந்திருக்காப் போலிருக்கே? இன்னும் ஏதாவது வேணுமா உனக்கு! உனக்குத் தேவையான சாமான் ஏதாவது இருந்தாச் சொல்லு. சீனு நிக்கறான் சைக்கிளோட வாங்கிண்டு வரச் சொல்றேன்.''

தலையாட்டுகிறேன். ''ஒண்ணும் வேண்டாம்ப்பா! எல்லாம் இருக்கு!'' — என்கிறேன் குனிந்தபடியே. என்னால் நிமிர முடியாது. நிமிர மாட்டேன். நிமிர்ந்தால் அந்தக் கண்களில் இருக்கும் — ஓரமாக ஒதுங்கி யாருக்கும் தெரியாமலிருக்கும் அந்த வேதனையை என்னால் பார்க்க முடியாது. அந்த அவஸ்தையை ஜீரணிக்கும் சக்தி என்னிடம் இல்லை. முதுகை ஆதரவாய்த் தட்டுகிறார். வெள்ளித் தட்டு வந்தவுடன் கொஞ்சம் தெம்பு கூடியிருக்கிறது அப்பாவுக்கு.

''சரி! சம்மந்தி பேர்லாம் என்ன பண்றாங்கன்னு கவனிக்கறேன்! ம்! வேஷ்டியை மடித்துக் கட்டியபடியே விறுவிறுவென்று ஓடுகிறார் அம்மா பின்தொடர. பெண்ணைப் பெற்று விட்டால் இப்படித்தானா? சேமிப்பைக் கரைத்து, நாலு பேரிடம் பிச்சையெடுக்காத குறையாக கடன் வாங்கி, மாப்பிள்ளை வீட்டாரிடம் பேரம் பேசி குறைத்து, ராத்தூக்கம் இன்றி கவலைப்பட்டு இதெல்லாம் — இத்தனை வேதனைகளும் எதற்காக?




"எனக்குப் பிடித்த
சக-நடிகரா?
ஸின்த்தால்!
மூன்று ஷிஃப்ட்களில்
நடித்த பிறகும்
அது என்னை
புத்துணர்ச்சியுடனும்
எழிலுடனும் வைக்கிறது."
Godrej
NEW
CINTHOL
LUXURY
TOILET POWDER
CINTHOL FOR FRESHNESS ALL DAY LONG
PROTECTIVE • SOOTHING • FRAGRANT
CINTHOL
கோத்ரேஜ்
தயாரிப்பு
ஸின்த்தால் - நாள்முழுதும் புத்துணர்ச்சியூட்டும் நறுமணம்
MADISON-C-48-TAM

கல்யாணம்? இத்தனையும் பட வேண்டுமென்று கட்டாயமா? நாற்பது நாற்பத்தைந்தாயிரம் கடனை எப்படி அடைக்கப் போகிறார்கள் இவர்கள்? கீழே நிற்பவர்களின் கதி? தலைசுற்ற இறுக்கி ஜன்னல் கம்பிகளைப் பற்றிக் கொள்கிறேன். வாசலிலிருந்து மேள சப்தம் வந்து மோதுகிறது காதுகளில்.

வெள்ளிக்கிழமை காலை.

அப்பாவின் மடியில் உட்கார்ந்திருக்கிறேன். என்னை ஆதரவாகப் பிடித்துக் கொண்டிருக்கும் அந்தக் கைகளைப் பார்க்கிறேன். கிளார்க்காக ஒரே சேரில் உட்கார்ந்து எழுதி எழுதித் தேய்ந்த விரல்கள் — பெண்ணைத் தானம் செய்வதற்காக என் கைகளைச் சேர்த்து பிடித்துக் கொண்டிருக்கின்றன. இந்தத் தானத்திற்கு புண்ணியமா கிடைக்கிறது? — எத்தனை பிடுங்கல்கள்? எத்தனை புண்கள். யாரோ என் தாவாங்கட்டையைப் பிடித்து நிமிர்த்துகிறார்கள்.


"போட்டோல அப்புறம் மூஞ்சியே தெரியாது."

நிமிர்ந்தவள் கண்களில் முதலில் பட்டவள் அம்மா. நீலச் சின்னாளப்பட்டில் தன் ஆசைகளைக் குறுக்கிக் கொண்டு எதற்காகவோ சீனுவை விரட்டிக் கொண்டிருந்தாள். கழுத்தில் கவரிங் செயின்! "எங்காவது போனா கழட்டி கழட்டி வச்சுட்டு போட்டுப்பேன். இனிமே எனக்கு என்ன?"

திடீரென்று கெட்டி மேளம்! கெட்டி

இட்லிக்கு அரைக்கும் போது, முளை விட்ட கொத்துகடலை, பச்சைப் பயறு ஆகியவற்றைத் தனியாக மிளகாய், இஞ்சி, உப்பு, கொத்தமல்லி சேர்த்து அரைத்து தனியாகவே வைக்கவும். இட்லி வார்க்கும் போது, வாழை இலையில் இட்லி மாவு ஊற்றி ஐந்து நிமிடங்கள் வெந்ததும், எடுத்து பயறு — கடலை கலவையை மேலாக தடவி மேலும் 3 — 4 நிமிடங்கள் வேகவைத்து இறக்கவும். சூடாக சட்னியுடன் பரிமாறவும். வெகு சத்தான உணவு வகையாகும்.

— ஆனந்தி.



மேளம்! என்று பல குரல்கள் ஒலிக்க திடுக்கிட்டு நிமிர்கிறேன். இரண்டு கைகள் மஞ்சள் கயிற்றை என் கழுத்தில் கட்டிக் கொண்டிருக்கின்றன மேள சப்தத்தோடு. அம்மா கண்ணீரைத் துடைத்தபடியே அட்சதையைத் தூக்கித் தூக்கிப் போடுகிறாள். அம்மாவின் செயினை சாஸ்திரிகள் கேட்க அதுவும் என் கழுத்திற்கு வருகிறது.

"தாலி முடிஞ்சதுக்கு எத்தனை வரும்படி!" — யாரோ ஒரு குரல் பின்னால் கேட்க அம்பத்தொன்னு! — என் நாத்தனார் 'கீச்' குரலில் பளிச்சென்று சொல்ல,

"ப்பூ! பட்டுப்புடைவை கூட இல்லையா? ஒரே தங்கையாச்சே நீ? ஏன் விட்டே?" — சண்டைக் கோழியாக அந்த பின்குரல் ஒலிக்க, 'பக்பக்' கென்று அடித்துக் கொள்கிறது.

"பகவானே! பட்டுப் புடைவைக்கு எங்கே போவார்கள். சாதாரணமாக இருந்தாலும் ஐநூறு ரூபா ஆகுமே. கடவுளே!" புகையும் ஓமகுண்டத்தைப் பார்க்கிறேன் கண் கரிக்க.

"சம்மந்தி! முகூர்த்தக் காய்!"

"இதோ வந்துண்டே இருக்கு! எத்தனை வேணும்?"

"இதைக் கூட தலை எண்ணியா சொல்ல முடியும்? கொண்டாருங்க!"

வேஷ்டியைத் தூக்கிக் கட்டியபடியே வெற்றிலை பாக்கு வாயோடு அவர் 'வள்' ளென்று விழ அப்பா விழுந்தடித்துக் கொண்டு ஓடுகிறார். சீனுவும் அப்பாவுமாக தேங்காய் மூட்டையை இழுத்துக்கொண்டு வர அந்த மனிதர் நிதானமாய் வெற்றிலைக் காம்பை கிள்ளி விட்டு சுண்ணாம்பைத் தடவியபடியே,

"கொண்டு வந்துட்டீரா! அக்கா இப்பவே நாட்டுப்பொண்ணை மேல் ஜாகைக்கு அழைச்சுடலாங்கறா. அதனால தேங்காயை மேல மாடில கொண்டு போட்டுடுங்கோ. அதோட சந்தனம், சர்க்கரை வகையறா."

"பேஷா! இதோ ஒரு நொடில." சாக்குப் பையின் காதோரத்தை பிடித்தபடி மாடியேறும் அப்பாவைப் பார்க்கிறேன். அப்பாவுக்கு மூட்டு வலி அதுவும் நேற்றிலிருந்து மாடிக்கு எத்தனை தடவை ஏறியிருப்பார். வெயிட்டையும் தூக்கிக்கொண்டு மாடியேறினால்... பத்மாவைக் கொண்டு போடச் சொல்லக் கூடாதா? — யாரோ வருகிறார்கள் பக்கத்தில் நின்று போட்டோ! ஏதேதோ பேசுகிறார்கள். வெறுமனே குனிந்தபடி சமயத்தில் சிரித்தபடி நிற்கிறேன் நான்.

இரவு மணி பத்து.

"எந்தப் புடைவையைக் கட்டிண்டிருக்க? அம்மா ஓடி வருகிறாள். இன்னமும் ஓட்டம் நிற்கவில்லை அவளுக்கு.

"பச்சைதானே? அதான் பளிச்சின்னு இருக்கும்! சித்தி, அம்மா, பெரியம்மா எல்லோரும் ஆளுக்கொரு கொத்தாக

பூவைத் தலையில் செருகி, "வா!" உனக்கு சொல்ல வேண்டாம்! மனசுப்படி நடந்துக்கோ!"

"இளம்பு என்று அழைத்துக் கொண்டு போகிறார்கள் மாடிக்கு. ஒரே பெண்கள் கூட்டம்." சாந்தி கல்யாணத்துக்குப் பட்டுப் புடைவை, வெள்ளி சொம்பு ரெண்டுமே கிடையாதா?"

அம்மாவின் தவிப்பு பதில் சொல்ல முடியாமல் முகத்தில் பிரதிபலிக்க சித்தி அசடு வழிய ரெடிமேடாக சிரிக்கிறாள். "வந்து...!" அவளும் என்ன சொல்வாள்?

"சொம்பு வேண்டாம். சரி! பட்டுப் புடைவை வாங்க வேண்டாமோ?" மாத்துக்காவது உள்ளே புடைவை வச்சிருக்கா அதுவும் இல்லையா?" இடக்காக ஒரு குரல்.

"அதெல்லாம் தட்ல முன்னாலேயே கொண்டு வச்சுட்டோம் மாமி!" குனிந்திருந்தவள் கண்களில் அம்மாவின் கால்கள் அகப்பட எத்தனை வீக்கம்? புறங்கால் இரண்டும் பூரியாக உப்பியிருந்தது! தைலம் தடவி ஒத்த வேண்டும். தைல பாட்டில் கூட வீட்டில் காலிதான். அப்பாவின் தோள் பட்டை வலிக்குத் தடவி உருகி உருகி, போய் வீட்டில் என்ன பண்ணப் போகிறாளோ? பாவம்...

ஒரு கை தோள் பட்டையில் விழ நிமிர்கிறேன். யாரோ முன்பின் பார்த்திராத, அறிமுகமில்லாத அந்தக் கணவர். ஓ! அறைக்குள் வந்து விட்டேன். கட்டில் — மெத்தை இரண்டு தலைகாணியிலும் ஏழெட்டு மல்லிகைப் பூக்கள் தூவப் பட்டிருக்க...

"பூரா ரெண்டு மாசம் கேப் இருந்ததே நிச்சயம் பண்ணினப்புறம். என்னை எத்தனை தடவை நினைச்சுப் பார்த்திருப்பே? ம்!"

அவர் கேட்க முழிக்கிறேன்.

"இந்த ரெண்டு மாசமா எனக்கு ஒரே நினைவுதான். கௌரி! கௌரி! இந்த நாள். இந்த இரவு. நீ என்னென்ன கற்பனை பண்ணினே? ம்! சுமான்?"

காதருகே குரல் வர கோர்த்திருந்த விரல்களை உருவிக் கொள்கிறேன். நான் என்ன நினைத்துக் கொண்டிருந்தேன்? மூலையில கண்கள் எதேச்சையாக போக... அதே வெள்ளித் தட்டு. அப்பா, அம்மாவைக் கடைசி நிமிடம் வரை தவிக்கடித்த தட்டு. பால் தம்ளர். பால்! நிச்சயம் அம்மா பாலைக் குறைப்பாள். ஏன் ஒரேயடியாக நிறுத்தினாலும் நிறுத்தி விடுவாள்.


சட்டென்று கண்களை அகற்றி.. இதோ இதோ... செக்கச் செவேலென்று மின்னிக் கொண்டிருக்கும் வெல்வெட் மெத்தை... இந்த மெத்தை? மெள்ள குனிந்து கைகளால் தடவிப் பார்க்கிறேன். மெத்தென்று இல்லாமல் குத்துகிறது முள்ளாய். மெத்தை வாங்கிக் கொண்டு வந்த இரவு! அந்த இரவு... அப்பா சொன்னது இன்று போலல்லவா இருக்கிறது.

"பாரு! பணத்தை எடுத்துண்டு மெத்தை ஆர்டர் கடைக்குப் போனா யார்கிட்ட ஆர்டர் கொடுத்தேனோ அவன் இல்லை. இன்னொருத்தன் இருந்தான். பில் போட்டு கிழிச்சான். கைல பணம் குறைஞ்சது. நாளைக்கு கொண்டு தர்றேன்னா நம்ப மாட்டேன்ட்டான். சரி சகுனம்லா பார்த்துண்டு போனோம். அபசகுனமா எதுக்கு வெறுங்கையோட திரும்ப வீட்டுக்குச் சும்மா வருவானேன்னு இரண்டு கட்டடம் தள்ளி இருந்த ஆஸ்பத்திரிக்குப் போய் ரத்தம் குடுத்தேன்."

"ரத்தம் கொடுத்தேளா?"

"ம்! அரை மணி உட்கார வச்சுட்டான் நம்ப மணி. அவன் கம்பவுண்டரா அங்கே தான் வேலை பண்றான். காப்பி வாங்கிக் கொடுத்தான். ஆஸ்பத்திரியிலே வாங்கின பணமும் போறாம சொச்சம் கொஞ்சம் அவன்கிட்டேயிருந்தும் வாங்கிப் போட்டுக் கொடுத்து மெத்தையைத் தூக்கிண்டு வந்தேன்."

ரத்தம் சிந்திக்கூட இல்லை... ரத்தம் விற்று வாங்கிய மெத்தை இது! எனக்காக வாங்கின மெத்தை. 'பட்' டென்று குப்புற விழுந்து குலுங்கிக் குலுங்கி வாய் விட்டு அழுகிறேன் பெரிதாக. அறை வெளியில் பாட்டுச் சப்தம் நாலைந்து குரல்கள் இணைந்து பெரிதாகக் கேட்கிறது.



அப்பளத்தை பேப்பர் பஞ்ச் செய்யும் கருவி கொண்டு பஞ்ச் செய்தால் அப்பளம் பொட்டு பொட்டாக வந்து விழும். இப்படி விழும் பொட்டுக்களை ஒரு பெரிய பாட்டிலில் சேர்த்து வைத்துக் கொள்ளவும். மாலை நேரங்களில் திடீரென்று விருந்தினர்கள் வந்தால், எண்ணெயில் இந்த அப்பளப் பொட்டுக்களைப் போட்டுப் பொரித்தெடுக்கவும். அகன்ற தட்டில் இதைப் போட்டு, மேலே இலேசாக மிளகாய்த் தூள் உப்புத் தூள் தூவி நன்றாகக் கலந்து விட்டால் புது மாதிரியான பஞ்ச் அப்பளம் மொறு மொறுப்புடன் தயார். டீ, காப்பியுடன் டிகர் டிபன் ரெடி. (பஞ்ச் செய்யப்பட்ட ஒரிஜினல் அப்பளம் ஓட்டைகள் பலவாக அதைப் பொரித்தெடுத்தால், குழந்தைகளுக்குச் சாப்பாட்டுடன் கொடுத்துவிடலாம்.)

— ராபியா பஸரியா.



சுவையான இனிப்புப்பண்டங்கள் எளிதாகத் தயாரிக்கலாம்.

மில்க்மெய்டினுல் தயாரிக்கப்பட்ட, சுவை நிறைந்த இந்த ஸ்பெஷல் இனிப்புப் பண்டங்களை உங்கள் குடும்பத்தினர் விரும்புவார்கள். இவற்றை எளிதாகத் தயாரிப்பதில் உங்களுக்கு ஒரே ஆனந்தம்தான்.

பாதாம் கீர்

5 பேருக்கு
சமைக்க ஆகும் நேரம்: 20 நிமிடங்கள்

தேவை

மில்க்மெய்ட் —1 டின், புதுப் பால் —1 லிட்டர்
முந்திரிப் பருப்பு —50 கிராம் (6 டேபிள் ஸ்பூன்)
பாதாம் பருப்பு எஸ்ஸென்ஸ் —1/4 டீஸ்பூன்

செய்முறை

1. பாலைக் காய்ச்சி ஆற வைக்கவும். உடைத்த முந்திரிப் பருப்பை 2 கப் பாலில் 2 மணி நேரத்துக்கு ஊற வைக்கவும். ஊறிய முந்திரிப் பருப்பை மையாக அரைக்கவும்.
2. மில்க்மெய்டுடையும், அரைத்த முந்திரிப் பருப்பையும் சேர்த்து கலக்கவும்.
3. பாதாம் பருப்பு எஸ்ஸென்ஸை சேர்க்கவும்.
4. சூடாகவோ, குளிர வைத்தோ பரிமாறவும்.

கடலைப்பருப்பு பாயாசம்

6 பேருக்கு
செய்ய ஆகும் நேரம்: 30-35 நிமிடங்கள்

தேவை

மில்க்மெய்ட்	—1 டின்
கடலைப் பருப்பு	—1 கப்
வெல்லம்	—100 கிராம் (1/2 கப்)
ஏலக்காய் பவுடர்	—1/4 டீஸ்பூன்
தேங்காய்	—1 (துருவப்பட்டது)
முந்திரிப் பருப்பு	—10 (விரும்பினுல்)
நெய்	—1 டேபிள்ஸ்பூன்

செய்முறை

1. கடலைப் பருப்பை 3 கப் தண்ணீரில் குழையும் வரை வேக விட்டு, பருப்பை மசிக்கவும்.
2. வெல்லத்தை ஒரு கப் நீரில் கரைத்து வடிகட்டவும்.
3. தேங்காய்த் துருவலிலிருந்து ஒரு கப் கெட்டிப்பாலும் ஒரு கப் அடர்த்தி குறைந்த தேங்காய்ப் பாலும் எடுத்துக்கொள்ளவும்.
4. வெல்லப்பாகு, பருப்பு, அடர்த்தி குறைந்த தேங்காய்ப் பால் மற்றும் ஏலக்காய்ப் பொடியை கலவையாக்கிக் கொள்ளவும்.
5. கலவையை இளஞ்சூட்டில் சிறிது நேரத்திற்கு வேகவிட்டு மில்க்மெய்ட் சேர்த்து கிளறி கெட்டித் தேங்காய்ப் பாலை சேர்க்கவும்.
6. முந்திரிப்பருப்பை நெய்யில் வறுத்து எடுத்தபின் மீதியுள்ள நெய்யிலேயே தேங்காய்த் துண்டுகளையும் வறுக்கவும்.
7. பாயாசத்தில் முந்திரிப்பருப்பு, தேங்காய்த் துண்டுகள் மற்றும் நெய்யை சேர்த்து கலக்கவும் அடுப்பிலிருந்து இறக்கி பரிமாறவும்.

இலவசம்

மில்க்மெய்ட் ரெஸிப்பி புத்தகம்
அதனைப் பெற போஸ்ட் பேக் 22,
புது தில்லி-110019
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.



விந்தை பல செய்திட மில்க்மெய்ட்

TSA-D/MM/4490/TM

நெஸ்லேயின் ஒரு தரமான தயாரிப்பு

முதல் பரிசு:

காப்சிகம் மாகி (Copsigum Egg Mogi)

தேவையான பொருட்கள்:

புழுங்கல் அரிசி — 2 ஆழாக்கு.
குடமிளகாய் — 5 (நீளவாக்கில் மெல்லிய தாக நறுக்கியது)
முட்டை — 1.
பெரிய வெங்காயம் — 2 (நீளவாக்கில் மெல்லியதாக நறுக்கியது)
டால்டா (அ) நெய் — தேவையான அளவு
மஞ்சள் பொடி — சிறிது.
கொத்தமல்லி தழை — சிறிது.
பட்டை — 1, லவங்கம் — 2, ஏலக்காய் — 2
சோம்பு — ½ தேக்கரண்டி பிரிஞ்சி இலை.

செய்முறை:

முதலில் புழுங்கல் அரிசியை நன்றாக நீரில் ஊறவைத்து, கல் நீக்கி விட்டு, கிரைண்டரில் போட்டு, அதிகம் தண்ணீர் ஊற்றாமல் நன்றாக, கெட்டியாக அரைத்துக் கொள்ள வேண்டும். பின்பு வாணலியை அடுப்பில் வைத்து, சிறிது எண்ணெய் ஊற்றி, அதில் அரைத்த மாவைப் போட்டு நன்றாகக் கிளற வேண்டும். (அதிகப்படியான நீர் வற்றி விடும்)

பின்பு மாவை சிறு சிறு உருண்டைகளாக்கி, இடியாப்ப உரலில் மிகச் சிறிய கண் தட்டுப் போட்டு இட்லி தட்டில் பிழிந்து அடுப்பில் வைத்து வேக வைக்க வேண்டும். பின்பு வெந்த இடியாப்பத்தை உதிரி உதிரியாக ஆக்கி, சிறிது உப்பும், மஞ்சள் பொடியும் கலந்து வைத்துக் கொள்ளவும். வாணலியில் நெய் ஊற்றி அடுப்பில் வைக்கவும். நெய் காய்ந்ததும் பட்டை, லவங்கம், ஏலக்காய், சோம்பு ஆகியவற்றை நுணுக்கி நெய்யில் போட்டு சடசடவென்று வெடித்ததும், நறுக்கி வைத்துள்ள வெங்காயம், குடமிளகாய், கொத்தமல்லி தழை ஆகியவற்றைப் போட்டு, இரண்டு கிளறு கிளறியபின்பு, உதிரியாக்கிய இடியாப்பத்தையும் போட்டு நன்றாகக் கிளற வேண்டும். பின்பு அடித்து வைத்துள்ள முட்டையையும் அதில் ஊற்றி கிளறி, முட்டை வெந்து உதிரி உதிரியானதும், வாணலியை அடுப்பில் இருந்து இறக்கவும். இதுவே "காப்சிகம் மாகி" என்பது. இதை மாலை வேளையில் சூடாகச் சாப்பிட்டால் நன்றாக இருக்கும்.

—வசந்தி முருகேசன், கடலாடி.



இரண்டாம் பரிசு:

ஸ்டஃப்டு காப்ஸிகம்

தேவையான பொருட்கள்:

முளை கட்டிய பயறு — 1 கப்.



* ரேவதி

காரட் துருவல் — 1 கப்.
வெங்காயம் (பெரியது) — 3.
உருளைக்கிழங்கு (பெரியது) — 3.
குடை மிளகாய் பெரியது — ½ கிலோ.
கடுகு, உப்புத்தூள், உ. பருப்பு — 1 டீஸ்பூன்.
தேங்காய்த் துருவல் — 1 கப்.

செய்முறை:

குடை மிளகாய்களை அலம்பி தலையை வெட்டி, விதைகளை எடுக்கவும். உள்ளே உப்பைத் தடவி வைத்துக் கொள்ளவும். உருளைக்கிழங்கை வேகவைத்து மசித்துக் கொள்ளவும். முளைகட்டிய பயிரையும், காரட் துருவலையும் 5 நிமிடம் நீரில் வேக வைத்துக் கொள்ளவும். வெங்காயத்தை சிறு துண்டுகளாக்கிக் கொள்ளவும். எண்ணெயில் கடுகு, உ. பருப்பு தாளித்துக் கொண்டு, வெங்காயத்தை வதக்கவும். அதில் உருளைக்

கிழங்கு, பயறு, காரட்டைப் போட்டு 5 நிமிடம் கிளறவும். கடைசியில் தேங்காய்த் துருவலையும் போட்டு, உப்பு சிறிதளவு சேர்த்து, கிளறி இறக்கவும். இவைகளை சிறு உருண்டைகளாக்கிக் கொள்ளவும். இந்த உருண்டைகளை மிளகாய் கொள்ளும் அளவு உள்ளே வைத்து வாணலியில் எண்ணெய் விட்டு மிளகாய்களை வதக்கவும். இதனை குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுவார்கள். ரொம்ப காரம் இருக்காது. சத்து நிறைந்தது.

— ரேவதி, தூத்துக்குடி

மூன்றாவது பரிசு:

குடமிளகாய் — எள்ளுப் பச்சடி

தேவையான பொருட்கள்:

குடமிளகாய் — 100 கிராம்.



* லீலாவதி

எள்ளு (வெள்ளை) — 2 மேசைக்கரண்டி.
வெல்லம் — பொடித்தது 1 கரண்டி.
புளி — 1 பெரிய எலுமிச்சை அளவு.
உப்பு — தேவைக்கேற்ப.
மஞ்சள் பொடி, வெந்தயம் — 1 ஸ்பூன்.
பெருங்காயம் — 1 சிறிய கட்டி.
நல்லெண்ணெய் — 50 கிராம். (½ கப்)
கடுகு, க. பருப்பு — தாளிக்க.

செய்முறை:

முதலில் புளியை ஒரு டம்ளர் ஜலத்தில் கெட்டியாகக் கரைத்துக் கொள்ளவும். எள்ளு, வெந்தயம், வறுத்துத் தனியாகப் பொடித்துக்கொள்ளவும். பெருங்காயத்தை இரண்டாக நறுக்கிக் காம்பு நீக்கிச் சிறிது எண்ணெயைக் கடாயில் விட்டு கடுகு, கடலைப் பருப்பு தாளித்து வதக்கவும். நன்றாக வதக்கியதும் மஞ்சள் பொடி உப்புப் போட்டு புளியை விடவும். நன்றாகக் கொதிக்க வைக்கவும். வெல்லம் சேர்க்கவும். சுருண்டு வரும் சமயம் பெருங்காயம் வெந்தியப் பொடி போட்டுக் கிளறவும். தேவையானால் சிறிது புளி ஜலம் போட்டுக் சேர்க்கலாம். நன்றாகக் கொதித்து வாசனை வந்ததும் இறக்கி எள்ளுப் பொடி தூவி மீதியுள்ள நல்லெண்ணெயை விட்டு வைக்கவும்.

ஆறியதும் நல்ல காய்ந்த புட்டிகளில் ஊற்றி வைத்தால் ஒரு மாதம் வரை கெடாது. தயிர் சாதம், தோசை இட்லி சப்பாத்தியுடன் சாப்பிட ருசியாக இருக்கும்.

லீலாவதி, சென்னை — 15.

ஆறுதல் பரிசு:

த்ரீ ஸ்டார் பிக்கிள்ஸ்

தேவையான பொருட்கள்:

குடமிளகாய் (காப்ஸிகம்) — 4.




* கவிதா

காரெட் (பெரியது) — 2.
மாங்காய் (பெரியது) — 1.
மிளகாய் பொடி, கடுகுப் பொடி, உப்பு, நல்லெண்ணெய்.
மஞ்சள் பொடி — 1 ஸ்பூன்.
வெந்தயம் — 1 ஸ்பூன்.
பெருங்காயம் — ¼ ஸ்பூன்.

செய்முறை:

குடமிளகாய், காரெட், மாங்காயை நன்றாகக் கழுவி, ஈரம் போக துடைத்துக் கொள்ளவும். மூன்றையும் 1'' நீளத்தில் லேசாக நறுக்கிக் கொள்ளவும். (விதையை நீக்கி விடுங்கள்) இந்த மூன்றையும் ஒரு சிறிய கிண்ணத்தால் 5 கிண்ணங்கள் அளவு வரும்படி அளந்து கொள்ளுங்கள். இந்த 5 கிண்ணம் அளவுக்கு 1 கிண்ணம் மிளகாய்ப் பொடி, 1 கிண்ணம் உப்பு, ¾ கிண்ணம் பச்சை கடுகுப் பொடி, 1 கிண்ணம் — நல்

மறக்க முடியாத நிகழ்ச்சி



எங்களிடம் இருந்த பழைய பிளாக் & ஒயிட் டீ.வி. விற்று விட்டு கலர் டீ.வி., வாங்க வேண்டுமென்று ரொம்ப நாட்களாக யோசித்துக் கொண்டிருந்தோம்.

அந்த நல்ல நாளும் வந்தது. புது டீ.வி. யுடன் வீட்டிற்குத் திரும்பும் போது மணி ஒன்றாகி விட்டது. பழைய டீ.வி.யை எடுத்து மூலையில் உட்கார்த்தி விட்டு மட்டில்லாத சந்தோஷத்துடன் கலர் டீ.வி. முன் உட்கார்ந்து பார்ப்பதற்காக ஸ்விட்சை ஆன் செய்தால் கணீரென்று.

"கண்ணா, கருமை நிறக் கண்ணா
உன்னை காணாத கண்ணில்லையே
உன்னை வெறுப்பாரில்லை
என்னைக் கண்டாலும் பொறுப்
பாரில்லை

என்ற பாட்டுடன் "நானும் ஒரு பெண்" படம் தொடர்ந்தது.

எங்கள் எல்லோருக்கும் எங்கள் பழைய ப்ளாக் & ஒயிட் டீ.வி.யே இந்தப் பாட்டைப் பாடுவதாக ஒரு பிரமை.

படத்தின் கதாநாயகி கறுப்பாக இருப்பதால் அவளை முதலில் எல்லோரும் வெறுக்கிறார்கள். பிறகு அவள் குணத்தின் அருமை புரிந்து எல்லோருக்கும் அவளைப் பிடித்துப் போவதுதான் "நானும்ஒருபெண்" படத்தின் கதை.

பழைய டீ.வி.யை நாங்கள் விற்று விட்டதால் அதை வாங்கியவர்கள் எடுத்துப் போகும் போது ஒரு நிமிஷம் ஒரே ஒரு நிமிஷம் மனம் என்னவோ செய்தது.

— விஜயா நடராஜன்.

வெண்ணெய் அளந்து வைத்துக் கொள்ளவும். வெந்தயத்தை வெறும் வாணலியில் வறுத்துப் பொடித்துக் கொள்ளவும். வாணலியில் எண்ணெயைச் சூடு செய்து கொள்ளவும். அதில்பெருங்காயப் பொடி. மஞ்சள் பொடி. கலந்து கொள்ளவும். நறுக்கி வைத்துள்ள குடமிளகாய் கலவையில் மிளகாய்ப் பொடி. கடுகுப் பொடி. உப்பு, வெந்தயப் பொடிகளை சேர்த்துக் குலுக்கி வைத்துக் கொள்ளவும். காய்ச்சிய எண்ணெய் நன்றாக ஆறிய பின் அதை ஊறுகாயில் கலந்து நன்றாக சேர்த்து கலந்து வைத்துக் கொள்ளவும். அதிக நாள் வைத்துக் கொள்ள வேண்டி வந்தால் சிறிது கே.எம்.எஸ். பொடியைச் சேர்க்க வேண்டி வரும். மாங்காய் சீசன் ஆனதால் வாரத்திற்கு ஒரு தடவை போட்டுக் கொள்ளுங்களேன்.

— கவிதா, கோயமுத்தூர்.

ஆறுதல் பரிசு:

குடமிளகாய் தொக்கு

தேவையான பொருட்கள்:

குடமிளகாய் — ¼ கிலோ,
கொத்தமல்லி தழை — 100 கிராம்.
புளி — 150 கிராம்.
மஞ்சள் பொடி — 2 தேக்கரண்டி.
எண்ணெய் — 100 கிராம்,
உப்பு. கடுகு. வெள்ளை உ. பருப்பு —
தேவையான அளவு.

செய்முறை:

கொத்தமல்லித் தழை, மிளகாய் சுத்தம் செய்து எண்ணெயில் வதக்கவும். தழை மிளகாய், உப்பு. புளி. மஞ்சள் பொடி கலந்து இடிக்கவும். கலவையை கைபடாமல் கரண்டியால் எடுத்து, வாணலியில் எண்ணெயை விட்டு, காய விட்டு, கடுகு. வெள்ளை உளுத்தம் பருப்பு போட்டுத் தாளித்து தொக்கைப் போட்டு கிளறி, ஆற விட்டு இறக்கவும். கரண்டியைப் பயன்படுத்தினால் நீண்ட நாள் கெடாமல் பயன்படுத்தலாம்.

குறிப்பு: இட்லி. தோசை, தயிர் சாதம், சாம்பார் சாதம் போன்றவைகளுக்கு தொட்டுக் கொள்ள பயன்படுத்தலாம்.

— கருணாவதி. கடலூர் — 4.

காலை வேளை அவசரத்தில் பரக்கப் பரக்க 'ஷேவ்' செய்து கொண்டிருந்த சங்கரன் வாசலில் வந்து நின்றவர்களைப் பார்த்துத் திகைத்து விட்டான். சாந்தாவும், அவளுடைய தம்பி மணியும் உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்கள். மனம் குதூகலித்தது. மனைவி வந்துவிட்டாள்.

இங்கே அம்மா முரண்டு பிடித்து நிற்க, மாமனாரோ எந்தக் கடிதமும் போடாமல் விறைக்க இடையில் சங்கரன்தான் தவித்துப் போனான். 'சாந்தா சாந்தா' என மனம் ஜபித்தது. அவள் இங்கிருந்த கொஞ்ச நாட்கள் சுகமான தென்றல் போன்றது. மீண்டும் சாந்தா வந்து விட்டாள்.

கூடத்தில் பேச்சு வார்த்தை கேட்டது.

''ஒரு வழியா உங்கப்பா அனுப்பினாராக்கும்!'' இந்த அம்மாவின் குரல் சாந்தாவிடம் பேசும்போது மட்டும் ஏன் இப்படிக் கர்ண கடூரமாக மாறுகிறது?

பதில் எதுவும் எழுந்த மாதிரி தெரியவில்லை.

''சரி, சரி... உள்ளே போய் சுருக்கக் குளிச்சுட்டுச் சமையலுள்ள போ... சங்கரன் ஆபீசுக்குக் கிளம்பணும். இட்லி வச்சிருக்கேன்... சட்னிக்கு அரைக்கணும்...''

சிறிதுநேரம் மௌனம்.

''மாமா வெளியே போயிருக்காரா மாமி...'' மணியின் சன்னமான குரல்.

''ம்... காய்கறி வாங்கப் போயிருக்கார். உன்னோட அத்திம்பேர் ஷேவ் பண்றான். என் பொண்ணு பாமா படிக்கிறா... இன்னும் என்ன வேணும்...?''

அந்தச் சின்னப் பையன் விக்கித்து வாயே திறக்கவில்லை.

''உங்க வீட்ல யார்டா சமைக்கிறா...? உங்கப்பா மாறினாரா இல்லையா? ஏதாவது சாமான் கீமான் வாங்கிப் போடறாரா?''

''வாங்கறார் மாமி. அக்காதான் சமைச்சுண்டிருந்தா. இனிமே நான்தான் செய்யணும். சியாமா ஸ்கூல் போறா...''

அம்மாவின் குரல் இன்னும் தழைந்தது.

''இதோ பாரடா... அக்கா வீடு, அக்கா வீடுன்னு இங்கே டேரா போடலாம்னு யாரும் நினைக்காதீங்க. தெரிஞ்சுதா? அப்படியெல்லாம் எதிர்பார்த்துக்கிட்டு இங்கே வந்து நிக்காதீங்க...''

''சரி, மாமி...'' தொண்டையடைக்க மணி சொல்வது கேட்டது. 'சுர்ர்' என்றது சங்கரனுக்கு. ஏன் இவள் இப்படித் தேள் போலப் பிடுங்குகிறாள்? கலங்கிப் போயிருக்கும் மைத்துனனைச் சமாதானப்படுத்தலாம் என எழுந்த அதேகணம், அம்மா அறையினுள் நுழைந்தாள். அவனருகில் வந்தவள் குரலைக் கிசுகிசுப்பாக்கிக் கொண்டாள்.

''உன் பொண்டாட்டியும், அவ தம்பியும் வந்திருக்காங்க. இங்கேயே இரு. மணிகிட்டே இப்ப ஏதாச்சும் அனுதாபமாப் பேசினா அட்டை மாதிரி ஒட்டிக்குவான். அவனை அப்புறமாப் பிடுங்கி எறியறது ரொம்பக் கஷ்டம், தெரிஞ்சுதா? அவனை நான் ஏதாச்சும் சொல்லி அனுப்பிச்சுடறேன்... என்னடா பாக்கறே? உன் நல்லதுக்குத்தான் சொல்றேன். தெரியாத்தனமா ஒரு தரித்திரத்தைக் கட்டிண்டாச்சு. அவளோட போச்சா? இப்ப குடும்பமே உன் கழுத்திலே தொங்க வருது. நீ மாட்டிண்டே காலம் பூரா கழுத்தறுப்புதான். வயசான காலத்துல ஒரு பொண்ணு வேற இருக்கு... பத்திரமா இருந்துக்கோ...''

அம்மா சொல்வது நியாயமாகத்தான் பட்டது. எழுந்தவன் பேசாமல் உட்கார்ந்து விட்டான். அம்மா வெளியேறி விட்டாள். அவள் என்ன பேசினாளோ என்னவோ, அவன் குளிக்கப் போகும் போது மைத்துனன் ஹாலில் இல்லை. பாத்ரூமில் தண்ணீர் விளாவி வைக்கப்பட்டு இருந்தது. அவன் குளிக்கும்போது ஒரு வளைகரம் துண்டையும், வேஷ்டியையும் கதவின் மேல்

யௌவன கர்வம் 3

மஞ்சுளா ரமேஷ்

கொண்டுவந்து போட்டது. 'சாந்தா... என்று கூப்பிட வாய்வரை வந்துவிட்ட குரலை அடக்கிக் கொண்டான். அம்மாவின் முகம் நினைவில் எழுந்தது.

''மன்னி... இட்லி ஹாலுக்குக் கொண்டு வந்துடுங்க. நான் இப்படியே சாப்பிட்டுட்டு ஸ்கூலுக்குப் போகணும்...'' பாமாவின் குரல் உயர்ந்து ஒலித்தது. 'எப்போ வந்தீங்க மன்னி...?' என்று இவளாவது அவளை ஒரு வார்த்தை கேட்கக் கூடாதோ? அப்பாவின் செருப்புச் சப்தம் நடையில் தேய்ந்து நின்றது.

''அட, சாந்தாவா? எப்பம்மா வந்தே?''

''இப்பதான் மாமா...''

''ஊர்ல அப்பா எல்லாம் சௌக்கியமா...?''

''சௌக்கியந்தான் மாமா...''

''நீ தனியாவா வந்தே...?''

''மணியும் கூட வந்தான்...'' ஒரு கணம் தயங்கி, ''அவனுக்கு இப்போ பரீட்சை டயம். அதனால உங்களைக் கூடப் பார்க்க முடியலே மாமா, உடனே போய்ட்டான்.''

''பரவாயில்லைம்மா. அதனால என்ன? அவனும் சின்னக் குழந்தைதானே? சாப்பிட்டானோ...?''

ஒரு கண மௌனம். மெல்லிய குரலில், ''சொன்னா கேக்காம நேரமாயிட்டதுன்னு பறந்தான் மாமா...''

''ஏ, சாந்தா... பாமாக்கு இட்லி கொடுத்துட்டு வர இவ்வளவு நாழியா...?'' அம்மாவின் குரல் சமையல் ரூமிலிருந்து பெரிதாக வந்தது.

''இதோ வந்துட்டேன், அத்தை...''

சோப்பின் நுரை மூக்கை அரித்தது போலச் சாந்தா மனத்தை அரித்தாள். என்ன பெண் இவள்...! மணியை அம்மா துரத்தாத குறையாக அனுப்பியதை மறைத்து எத்தனை சாதுர்யமாகப் பேசுகிறாள்! அவள் வந்து ஒரு மணி நேரத்துக்கு மேலாகியும் தான்

ரவையை வாணலியில் நன்கு வாசனை வரும் வரை வறுத்து அது நன்கு ஆறிய பிறகு உப்புத் தண்ணீரை அதில் விட்டுப் பிசிறி வைத்து ஆவியில் வேக வைக்கவும். பிறகு வெல்லப் பாகில் தேங்காயைப் போட்டுப் பாகு முற்றியவுடன் வெந்த ரவையில் சேர்த்துக் கிளறவும். ஏலக்காய், முந்திரிப் பருப்பு சேர்த்துச் சாப்பிடவும். அரிசி மாவை விட ருசியாக இருக்கும் ரவா புட்டு.

— இந்திரா.



இன்னும் அவளைப் பார்க்கவில்லை.

துண்டால் உடம்பைத் துடைத்தபடி ஹாலுக்கு வந்தான் சங்கரன். அப்பா ஹாலில் பேப்பர் படித்துக் கொண்டிருந்தார். இவனை நிமிர்ந்து பார்த்தவர்,

''சாந்தாவோட தம்பி பாவம், சாப்பிடக் கூட தங்காமப் போயிட்டானே...?''

''ஆமா, ஏன்னா பொண்ணைக் கொண்டு வந்துவிட ஏகப்பட்ட பட்சணம், சீரோட வந்துட்டான் பாருங்க. நிக்க எடம் இல்லாம போயிட்டான்...'' ஹாலுக்கு வந்த அம்மா சீறினாள்.

''சே, என்னமா பேசறே நீ...? அங்க பட்சணம் செய்ய யார் இருக்கா? அந்தக் குடும்பத்தையே இவ இல்ல பார்த்துண்டு இருந்தா? எல்லாம் தெரிஞ்சும் ஏன் இப்படிப் பேசறே?''

''பேசியாவது ஆத்திக்கத்தான். பின்ன என்ன பண்ண முடியும்? அன்னிக்கே இந்தப் பொண்ணு வேணாம், அந்தக் கும்பகோணத்துக்காரா இருபது சவரனோட பொண்ணைத் தர்றான்னு சொன்னேன். என்னவோ குத்துவிளக்கு மாதிரி இவ இருக்கான்னு அப்பாவும்பிள்ளையுமாக் குதிச்சேள். என்ன ஆச்சு...? பித்தளைக் குத்துவிளக்காட்டமா நிக்கறா, அவ்வளவுதான்...''

''போறுண்டீ இப்பத்தான் வந்திருக்கா. அந்தப் பொண்ணைச் சும்மா நோகடிக்காதே?''


சங்கரன் தன் அறைக்குள் போய்விட்டான். அம்மா எப்பொழுதுமே இப்படித்தான். தனக்கு ஒருவரைப் பிடிக்கவில்லையென்றால் அவரை உண்டு இல்லை என்றாக்கி விட்டுத்தான் மறுவேலை பார்ப்பாள். பாவம் சாந்தா, என்ன பாடுபடப் போகிறாளோ...? நேற்று இரவு நிறுத்தியிருந்த விவேகானந்தர் கட்டுரைப் புத்தகத்தை எடுத்துக் கொண்டான். காலம் பூரா இது தான் துணையோ?

பாமா ஸ்கூலுக்குச் சொல்லிக் கொண்டு கிளம்பும் குரல் கேட்டு மறைந்தது. அப்பா குளிக்கப் போயிருப்பார். மணி பார்த்தான். ஒன்பதாகியிருந்தது. சாப்பாட்டை முடித்துக் கொண்டு அலுவலகம் கிளம்பலாம் என்று எழுந்தான். அம்மா உள்ளே நுழைந்தாள்.

''என்னடா, சாப்பிட வர்றியா...? இல்லே இங்கேயே கொண்டு வந்துடட்டுமா...?''

''என்னம்மா இது? புதுப் பழக்கம்? நானே வர்றேன்,''

''சரிதான்...'' சங்கரனுக்கும் சிரிப்பு வந்தது. மௌனமாக அம்மாவின் பின்னே போனான். சமையல் அடுப்பருகில் ஸ்டவ்வின் பின்புறம் ஓரமாக ஒடுங்கி நின்றிருந்த உருவம். ஒரு கணம் நிமிர்ந்து அவன் கண்ணோடு கண் கலந்தவள் வேறு பக்கம் பார்வையைத் திருப்பிக் கொண்டாள். சிவந்த அந்தக் கண்களும், சோர்வான முகமும்...


1950
11

அம்மா தட்டு வைத்துச் சாதம் பரிமாறினாள். சாந்தா அங்கிருந்தபடியே வேண்டியது எடுத்துக் கொடுத்தாள்.

"என்னடா, கொரிக்கிறே...? தட்டைப் பார்த்துச் சாப்பிடு..."

தலைகுனிந்தவண்ணம் சங்கரன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். ரசம் சாதம் முடிந்து அண்ணாந்து தண்ணீரைக் குடித்த போது கண்கள் கலந்தன. "சாந்தா..." அன்பு ததும்பிய பார்வையைத் தூது விட்டான். அவள் முகத்தில் புன்னகை.

அப்பா...! இந்தக் குளிர்ச்சிப் புன்னகை இதயத்தில் நிரம்பிக் கொண்டு இன்றெல்லாம் ஓட்டிவிடுவான். மனம் சிலிர்த்தது.

"சாந்தா வந்திருக்கா, பார்த்தியோ...?" ஓரக் கண்ணால் மருமகளைப் பார்த்தபடியே அம்மா இழுத்தாள்.

"ஏம்மா... அவதான் வந்து ரொம்ப நாழியாச்சே...?"

"அதுக்கில்லேடா... அவ பாட்டுக்குச் சமையலுள்ளே இருக்கா... ஐயோ, இந்த மாமியார்க்காரி புருஷன் முகம் பார்த்துப் பேசக் கூட விட மாட்டேங்கிறான்னு உங்கிட்டே சொல்லப் போறா..."

"என்னம்மா நீ... இது என்ன வேறான் வீடா...? அவ வீடு. இரண்டு மாசமா வீட்ல இல்லை. வந்தவுடனே வேலையைப் பார்க்க வேண்டியதுதானே...?"

'இரண்டு மாசமா வீட்ல இல்லை...' என்று அவன் சொன்னவுடன் அம்மா 'சடக்' கென்று சாந்தாவைப் பார்த்தாள்.

"ஏண்டீ, இங்கே வந்தவுடனே ஒக்காந்தியே... அங்கே போய்க் குளிச்சியோ...?"

"இல்லே அத்தை..."

"என்னது, குளிக்கலியா...?"

தலை கவிழ்ந்தாள் சாந்தா. "இல்லே, அத்தை. பக்கத்து வீட்டு மாமி கூடச் சொன்னா... எனக்கும் சாப்பாடே பிடிக்கலை..."

சங்கரன் மனத்தில் 'குப்' பென்று சந்தோஷம் அடைத்தது. நான் தந்தையாகப் போகிறேன். மனம் பரவசமாக சாந்தாவை பார்த்தான். அம்மாவின் குரல் நாராசமாக ஒலித்தது.

"என்ன தைரியமடீ உங்கப்பனுக்கு? பொண்ணு உண்டாகியிருக்கா. உங்கப்பன் ஒரு கடிதாக போடலே. உலக்கைக் கொழுந்து மாதிரி வந்த தம்பியும் ஒரு வார்த்தை சொல்லலை. என்னடீ உங்க குடும்பமே நல்ல குடும்பம்தானா...? இல்லே கூத்தாடிக் குடும்பமோ...?"

இடியாக இறங்கிய குரலில் சாந்தாவின் கண்களில் அருவி பொழிந்தது. விக்கி விக்கி அழ ஆரம்பித்தாள். பாத்ரூமிலிருந்த அப்பா உடம்பை அவசரம் அவசரமாகத் துடைத்தபடி ஓடி வந்தார்.

"ஏய், ஏய் அன்னபூரணி என்னது இதெல்லாம்...? குழந்தை, வாயும் வயிறுமா வந்திருக்கா. அவ அப்பாக்கு அவ்வளவு போறாது. திருப்பியும் திருப்பியும். அவளை ஏண்டீ குடையறே...?"

"ம்... குழந்தை... வேற பொம்மனாட்டிக்கு இல்லையென்னா, இவ இல்ல அப்பண்ட்ட சொல்லி எழுதச் சொல்லியிருக்கணும்.

எங்கள் "விருதுநகர் ஜூனியர் சேம்பர் துணைவியர் அணி" கடந்த மூன்றாண்டுகளாகச் சிறப்புற சேவை செய்து வருகிறது. இவ்வியக்கத்தின் மூலம் நாங்கள் எங்களை மேம்படுத்திக் கொண்டதோடு அல்லாமல் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியருக்கு எங்கள் ஜேசீஸ் பயிற்சியாளர்கள் மூலம் நேர நிர்வாகம், திறன் மிகு முடிவெடுத்தல், சுய மேம்பாடு, மனித நேயம், சுய ஊக்கம், இலக்கு அமைத்தல், வாழ்க்கையில் உயர்நிலை அடைதல், சிறந்த நிர்வாகியாய்த் திகழ்தல், சிறந்த விற்பனையாளர், சிறந்த பேச்சாளராய் உருவாகுதல், தக்க முறையில் உடல் பராமரிப்பு முதலான பல்வேறு தலைப்புகளில் பண்பு மேம்பாட்டு பயிற்சி வகுப்புகளை நடத்துகிறோம்.



யாரோ பக்கத்து விட்டு மாமியாமே அவளை யாச்சும் கூட்டிண்டு வர்றது...?''

சாந்தா கதறி அழுது கொண்டிருந்தாள்.

''போறுண்டீ... முதன் முதலா நமக்குப் பேரனோ, பேத்தியோ பொறக்கப் போறது. அதைச் சந்தோஷமா நாம கொண்டாடுவோம்...''

''ஆகட்டும்... அவ்வளவு நெஞ்சழுத்தப் பிராமணனுக்கு நான் சரியான பாடம் சொல்லாம விடப் போறதில்லை...''

சங்கரன் பாதி சாப்பாட்டிலேயே எழுந்து போய்விட்டான். நெஞ்சம் குமுறியது. சிறு வயதிலிருந்தே அம்மாவை எதிர்த்துப் பேச முடியாது. பழக்கமாகிப் போனதால் வாயே திறக்க முடியவில்லை. அவசரம் அவசரமாக பேண்ட்டை மாட்டிக் கொண்டவன், கையில்விவேகானந்தர் புக்குடன், செருப்பை மாட்டிக் கொண்டு கிளம்பி வீட்டின் கேட்டருகே போகும்போது.

''என்ன அழுகை, அவன் மத்தியான்னத்துக்கு டிபன் பாக்ஸ் கூட எடுத்துக்காம போறான். வேக வச்சிருக்கிற இட்லியை டிபன் பாக்ஸ்ல போடக் கூட முடியலே உன்னால...?''

அம்மாவின் குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டு இருந்தது.

சே, நரகம் இந்த வீடு. எப்போதும் ஓங்கிக் குரல் ஒலிக்கும் அம்மா. பாமாவும் அம்மா கட்சிதான். இரண்டு பேரும்தான் கடை, கண்ணிக்குப் போவார்கள். சாமான், துணிமணியெல்லாம் அவர்கள் பொறுப்புதான். அவனோ, அப்பாவோ எதிலும் தலையிடுவ தில்லை. பார்க்கப் போன ரெண்டு பெண்களின் வீட்டாரும் அம்மாவின் பேச்சையும், பாமாவின் அலங்காரத்தையும் பார்த்தே பயந்து பின்வாங்கி விட்டார்கள். இதெல்லாம் சரிப்பட்டு வராது என்றுதான், அவசரம் அவசரமாக சாந்தா சம்பந்தத்தை முடித்து விட்டார்கள். மாமியாரும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருந்ததால் மேற்கொண்டு கல்யாணம் ஆனால் போதும் என்று தலையாட்டி விட்டாள். பாவம், சாந்தா சரியாக வந்து மாட்டிக் கொண்டாள்.

ஐந்து நிமிட நடையில், அவன் கணக்கு எழுதும் கடையை வந்து அடைந்தான். சேட் மூக்கில் வழிந்த கண்ணாடியை நிமிர்த்திக் கொண்டு இவனைப் பார்த்தார்.

''அரே பாய், மொத்லாளி நானே எட்டு மணிக்கு வரான். நீ சாவ்காசமா பத்து மணிக்கு வர்றே...?''

''இல்லே சேட், இன்னிக்கு வொய்ஃப் ஊர்லந்து வந்திருக்கா...''

''சர்தான் போ, அப்போ இனிமே தெனமும் லேட்டாத்தான் வருவே...?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே, நான் சரியா ஒன்பது மணிக்கு வந்துடுவேன்...'' என்றவன் தனக்கென உள்ள குட்டை மேஜையின் கீழ் போய் அமர்ந்தான். அம்பாரமாய்க் குவிந்து கிடந்த வேலை நெட்டி முறித்தது. சேட்டுக்கு அடகு வியாபாரம் மட்டும் இல்லாமல், வாடகை டெம்போ விடுவது, பல இடங்களில் கொடுக்கல், வாங்கல், சீட்டு என ஏதேதோ வியாபாரம். அத்த

னைக்கும் இவன் ஒருத்தனே கணக்கு வழக்கு பார்ப்பது மட்டுமல்லாமல், ஏதாவது பிரச்னை என்றால் ஓடவேண்டும். டெம்போவுக்கு ஸ்டெப்னி மாட்டுவதில் இருந்து எல்லாம் இவன்தான். மாசமெல்லாம் நரம்பை முறித்துவிட்டுச் சம்பளமாக எண்பது ரூபாயைக் கொடுக்கும் போது 'சேட்'டுக்கு மலைப்பாக இருக்கும்.

சீட்டுப் பணம் மூவர் பாக்கி நின்றது. சேட் பதினோரு மணிக்கு விரட்டினார். ஜார்ஜ் டவுனுக்கும், இராயப்பேட்டைக்கும், அலைந்து முடிந்து சுண்ணாம்பாகி ஐந்து மணிக்கு வந்து சேர்ந்தான். ஒன்றிரண்டு பாக்கி வேலையை முடித்து ஆறு மணிக்கு வீட்டுக்குக் கிளம்பும் வரை சுத்தமாகச் சாந்தாவின் நினைவே இல்லை.

கசங்கிய காகிதமாக வீட்டை நோக்கிப் புறப்பட்டான். வழியில் மல்லிகைப்பூ விற்ற பெண்மணி இவனைப் பார்த்துச் சிரித்தாள்.

"பூ வாங்கறியா, உன் பொண்சாதி வந்திருக்காளே?" எனக் கேட்க மாட்டாள். அவளுக்கு மட்டுமென்ன, அந்தப் பகுதி முழுக்கவே அவன் குடும்பத்தைப் பற்றித் தெரியும். தெரியாவிட்டாலும் அவ்வப்போது முழங்கும் அம்மாவின் குரல் முரசு அறிவிப்பது முழங்கித் தெரிவித்து விடும்.

நடையில் செருப்பை விட்டுவிட்டு ஹாலில் போய் அமர்ந்தான். வீடு நிசப்தமாக இருந்தது. எல்லோரும் எங்கே போனார்கள்?

"அம்மா..."

சமையலறையின் கதவோரம் நிழலாடியது.

"அம்மா அவங்க தம்பி வந்திருக்கான்னு, அவரோட போயிருக்காங்க."

"சாந்தா..." ஆவலோடு அவளைப் பார்த்தான். "இங்கே வாயேன்..."



குடும்ப ஆலோசனை செயல்பாட்டுக் குழு

மங்கையர் மலர் அமைத்துள்ள குடும்ப ஆலோசனை செயல்பாட்டுக் குழுவிற்கு ஏராளமான கடிதங்கள் வந்துள்ளன. அவற்றைக் குழு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. மேல் நடவடிக்கைகள் பற்றி அடுத்த இதழில்...

தயங்கித் தயங்கி ஹாலுக்கு வந்தாள்.

"மாமா, அப்பா கூட இல்லியா?"

"மாமா உங்க தங்கையைக் கூட்டிட்டு எங்கேயோ போயிருக்கார். ஏதோ சொல்லிண்டிருந்தார். கடையிலே நல்ல டிசைனாப் புடைவை வந்திருக்குன்னு..."

சங்கரன் புன்னகைத்தான். தான் இந்த நேரத்தில் வருவதால், அப்பா பாமாவை அழைத்துப் போயிருக்கிறார்.

"சாந்தா இங்கே வாம்மா... மாமா வந்திருக்கார்னா அம்மா அவ்வளவு சீக்கிரம் வரமாட்டா..."

மெல்லிய அந்தத் தென்றல் பதவிசாக வந்து அவனருகே அமர்ந்தது. குனிந்திருந்த அந்த முகத்தைப் பார்த்தான். காதில் தொங்கிய அந்தக் குடை ஜிமிக்கிகளை நிமிண்டிவிடத் துடித்த கையை அடக்கிக் கொண்டான்.

"சாப்பிட்டியா...?"

"ம்..." ஜிமிக்கி ஆடியது.

"ஏன் லெட்டரே போடலை நீ...? ரொம்ப எதிர்பார்த்தேன்."

அந்தக் கரிய விழிகள் அவனை நிமிர்ந்து பார்த்தன. அதில் தெரிந்த பரவசம்...

"நான்... நான் எப்படி எழுதட்டும்?"

'குபுக்'கென்று சிரித்துவிட்டான். "ஏன் பொண்டாட்டி புருஷனுக்கு எழுதக் கூடாதா?"

அவள் முகம் சிவந்தது. "எனக்கு... எனக்குப் பழக்கமில்லை..." இன்னும் பெரிதாகச் சிரித்தான். "சரியாப் போச்சு. ஒவ்வொண்ணும் பழகித்தான் எழுதணும்னா நீ கிழவியானப்புறம்தான் லெட்டர் எழுதுவே..."

சாந்தா புன்னகைத்தாள். அவள் தலை ஒயிலாக ஒருபுறம் சாய்ந்தது. "நீங்க எழுதியிருக்கலாமே..."

சங்கரனின் புன்னகைத்த முகம் நின்றது. ஆமாம், எழுதியிருக்கலாம்தான். ஆனால் வீட்டில் சதா சர்வகாலமும் அம்மாவின் ஏச்சுக்கள். இங்கேயிருந்து பிடுங்கிக் கொண்டு கடைக்குப் போனால் சேட்டின் விரட்டல்கள் இதிலே கடிதம் எழுத எங்கே மனம் சென்றது? இரவு படுத்தவுடன் தூங்கச் சொல்லும் உடம்பு. நடு இரவில் திடீரென்று விழித்துக் கொள்ளும் போது மனமும் விழிக்கும்.

'இந்நேரம் சாந்தா தூங்கிக் கொண்டு இருப்பாளா? என்னை மாதிரி விழித்துக் கொண்டு நினைத்துப் பார்ப்பாளா...?' என மனம் சிந்திக்கும். மறுகணம் உடம்பு அயர்வில் தூங்கிவிடும்.

"நான் ஏதாச்சும் தப்பா கேட்டுட்டேனா...?"

சங்கரன் புன்னகைத்தான். ஊன்றியிருந்த அவளுடைய விரல்களை மெல்ல ஸ்பரிசித்தான்.

"இல்லம்மா..." விரலில் இருந்து கைக்கு ஏறியது அவனுடைய கைகள். சட்டென்று

தன் கையை எடுத்துக் கொண்ட சாந்தா தள்ளி உட்கார்ந்து கொண்டாள்.

"வாசலுக்கு நேரா உட்கார்ந்து இருக்கோம்..." எனப் புன்னகைத்தாள்.

இருக்கும் இந்தக் கொஞ்ச நேரத்தின் சுதந்திரத்தையும் அப்படியே அனுபவிக்கத் துடித்தது சங்கரனின் உள்ளம்.

"உள்ளே வாயேன்."

"ஐயையோ... நான் போய்க் காப்பி போட்டுக் கொண்டு வர்றேன்..."

"காப்பியும் வேணாம், ஒண்ணும் வேண்டாம்... வா..." சங்கரன் எழுந்து அறைக்குள் போனான். உள்ளே தயங்கித் தயங்கி நுழைந்த சாந்தாவை இழுத்து இறுக்கிக் கொண்டான். சாந்தா ஒண்டிக் கொண்டாள். தன் துக்கம், துயரம், எல்லாம் மறந்து, 'இவர் பாதுகாப்பு எனக்குப் போதும்' என அவள் உடம்பின் ஒவ்வோர் அணுவும் துடித்தது.

"சாந்தா..."

"ம்..."

"'அந்த' விஷயம் நிஜமா...?"

"தெரியலை. அம்மா மத்தியானம் சொன்னாங்க, நல்ல நாள் பார்த்து டாக்டர்கிட்டே கூட்டிண்டு போறேன்னு..."

"உங்கப்பாவுக்குத் தெரியுமா...?"

"ம்... பக்கத்து வீட்டு நீலா மாமிதான் சொன்னா..."

சங்கரன் அவளை நாற்காலியில் உட்கார்த்தி வைத்துத் தான் மேஜை மேல் அமர்ந்து கொண்டான்.

"சாந்தா... உன் நிலைமை பூரா எனக்குப் புரியறது... அம்மா கத்துவாளே தவிர, தப்பா ஒண்ணும் செய்ய மாட்டா... கொஞ்சம் பொறுத்துக்கோ... நான் ஒண்ணும் சொல்லலியேன்னு உனக்குக் கஷ்டமா இருக்கா...?" அவள் கையை வருடியபடி கேட்டான்.

"அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லைங்க..." அவள் கண்களின் ஓரம் நீர் வழிந்தது.

"இந்த மாதிரி நேரத்துல நீ அழக் கூடாது. நீ ஏதாச்சும் கஷ்டமா மனசுல வருத்தப்படறப்போ, என்னை நெனைச்சுக்கோ. எனக்கும் இன்னும் நல்ல நிலையான உத்தியோகம் கிடைக்கலை. நமக்கும் நல்ல காலம் பொறக்கும் மனசைத் தளரவிடாதே...!"

அவனின் இதமான குரல் அவளை மேலும் அழ வைத்தது. கேட்டருகே பாமாவின் குரல் கேட்டது.

"என்னப்பா, ஹால்லே 'லைட்'டே எரியலே... அண்ணாவும், மன்னியும் வீட்டைத் தொறந்து போட்டுட்டுப் போயிட்டாளோ...?"

'விருட்'டென்று எழுந்த சாந்தா ஹாலுக்கு ஓட்டமாக ஓடி விளக்கைப் போட்டாள்.

"என்ன மன்னி, ராத்திரி சமையலாவது ஆச்சா, இல்லையா?" துளைத்தெடுக்கும்



க்விஸ்டைமில் சித்தார்த் பாசுவுடன் வெளுத்து வாங்கிய கோமல் சிங் இப்போது அஞ்ஞாத வாசத்தில் இருக்கிறாரோ என்று சிலர் நினைத்திருக்கலாம். ஏனெனில் அவர் அதிகமாகச் செய்தி வாசிப்பதில்லை. இதற்குக் காரணம், மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளைப் பற்றிய டாகுமெண்டரிப் படம் ஒன்றை இவர் இயக்குவதுதான்.

— ஜி. எஸ். எஸ்.

பார்வையில் அவளைக் கிண்டினாள்.

"பாமா, மொதல்ல போய் டிரெஸ் மாத்திண்டு வா, போ..." அப்பா பின்னாடி வந்தபடியே குரல் கொடுத்தார்.

சமையலறையில் நுழைந்த சாந்தா மூவருக்கும் காப்பி கலந்தாள். ஹாலில் சங்கரனிடம் அப்பா பேசிக் கொண்டிருந்தார்.

"மாமா வந்திருந்தாராமே, என்ன விசேஷம்பா...?"

"என்ன இருக்கு? அவன் பெத்து வச்சிருக்கிற பொண்ணை யார் தலையில கட்டறதுன்னுதான்..."

"அதுக்கென்ன இப்போ...?"

"திருவல்லிக்கேணியிலே பையன் இருக்கானாம். விசாரிக்க உங்கம்மாவையும் இழுத்துண்டு போயிருக்கான்."

பாமாவின் குரல் இடைமறித்தது. "இந்த அம்மாக்கு எவ்வளவு சொன்னாலும் புத்தியே இல்லை. ஊர்ல உலகத்துல இல்லாத அதிசயமா அந்த லட்சுமி பி. ஏ. படிக்கிறாளாம்... அவ அலட்டறது பத்தாதுன்னு மாமாவோட ஜம்பம் வேறே... ஏன் அவளை அண்ணாக்குக் கொடுக்கச் சொன்னப்போ முடியாதுன்னுட்டா... இப்ப மட்டும் பேச அம்மா வேணுமாக்கும்...?"

வயசுக்கு மீறிப் பேசும் அந்தப் பதினைந்து வயதுப் பெண்ணை அடக்குவார் யாருமில்லை. சாந்தா மனத்திற்குள் மறுகினாள். இதே பதினைந்து வயதுதான் மணிக்கும். யாரையும் ஒரு வார்த்தை கடுமையாகப் பேச மாட்டான். தான் வளர்த்த பிள்ளை... இந்நேரம் என்ன செய்கிறார்களோ...?'

பெருமூச்செறிந்தபடி மூன்று தம்ளர்களில் காப்பியுடன் ஹாலை நோக்கி நடந்தாள் சாந்தா.

(தொடரும்)

இது உடையக்கூடியது.



ஓ... ஓ! இந்த பிளாஸ்க் உடையுமே!

ஆம் கண்ணாடி பிளாஸ்க் கைதவறினால் உடைந்துதான் போகும். அதிகக் கவனம் தேவை. இல்லாவிடில்...!

இதில் சூடு குறையுது.



ஓ... நோ! இந்த பிளாஸ்க் உடையாதுதான். ஆனால் சூடே நிலைப்பதில்லையே!

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல். அதனால்தான் உடையவில்லை. ஆனால் வேக்குவம் இல்லையே. ஆகவே சில மணிகள்கூட சூடு தங்குவதில்லை. சூடாக ஊற்றிய காப்பி ஆஃபீஸுக்கு வருவதற்குள்ளே ஆறிவிடுகிறது.




தயாரிப்பாளர்கள்:

கங்காதரம் அப்ளையன்ஸஸ் லிமிடெட்

272, அண்ணா சாலை, சென்னை-600 018.

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்தானா எனப்பாருங்கள் / வேக்குவம்தானா

இதுவோ புரட்சிகரப் புதியது.



ஓ... எஸ்! இதோ இந்த பட்டர்ஃபிளை பிளாஸ்க் பிரமாதம்.
புதிய பட்டர்ஃபிளை ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் வாக்குவம் பிளாஸ்க்.

- இது உடையாது. காரணம்: உள்ளும் வெளியும் முழுவதுமே உயர்தரமான ஸ்டெயின்லெஸ் ஸ்டீல். உறுதியான வடிவமைப்பு.
- இதில் 24 மணி நேரத்திற்குமேல் கூட சூடு குறைவதில்லை. காரணம்: உட்புறமும் வெளிப்புறமும் ஒரே ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தகடு. இடையில் சக்திமிக்க வேக்குவம் நிலை எப்போதும்.
- நூற்றுக்கு நூறு கசிவுத்தடுப்பு. காரணம்: மேல்பகுதியின் சிறப்பான வேலைப்பாடு.
- துர்நாற்றம் வீசுவதில்லை. ஒரே தகட்டில் செய்யப்பட்டதால் கசிவு ஏற்பட்டு உட்புறத்தில் பானம் தங்கி விடும் வாய்ப்பு அறவே இல்லை. குறைவான மறைகள். அதனால் அழுக்கு அடையும் நிலையும் இல்லை. சுத்தம் செய்யவும் எளிது.
- தயாரிப்பாளர்கள்: பட்டர்ஃபிளை. ஸ்டெயின்லெஸ் ஸ்டீலில் 40 ஆண்டுகால அனுபவம் கொண்டவர்கள். பிரஷர்குக்கர், காஸ் ஸ்டவ், மிக்ஸி, வெட் கிரைண்டர், வாட்டர் ஹீட்டர், வாட்டர் ஃபில்டர் மற்றும் டின்னர் செட்டுகளைத் தயாரிப்பவர்கள்.

பட்டர்ஃபிளை ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் வேக்குவம் பிளாஸ்க். இதுவே சிறந்தது! இதுவே புதுமையானது.

பட்டர்ஃபிளை
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் வாக்குவம் ஃபிளாஸ்க்

வாழ்நாள் முழுவதும் உழைக்கும்

HTA 7517

எனக் கேளுங்கள் / பட்டர்ஃபிளை வேண்டும் என்று சொல்லுங்கள்


சாலை விபத்துக்களை குறைக்க நீங்களும் உதவலாமே?



விபத்துக்கள் எல்லாமே எதிர்பாரா மல் நடப்பவை என்று சொல்லிவிட முடி யாது. பல விபத்துக்கு நம்முடைய கவனக் குறைவும், மனநிலையும், உடல் நிலையும் காரணம். வாகனங்களின் தேவைகள் பெருகப் பெருக விபத்துக்களும் நாளுக்குநாள் அதிகமாகியே வருகின்றன. பெரிய பெரிய நகரங்களிலும், வானிலை அறிக்கைகளைப் போல, இன்று வரை சாலை விபத்துக்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை என்று காணப்படும் விளம் பரப் பலகைகளைப் பார்க்கும் போது மனம் சங்கடத்திற்கு உள்ளாகிறது. நாம் சாலை விபத்துக்களைக் குறைக்க எப்படி உதவ முடியும்?

1. ஓட்டுபவரின் மனநிலை சரியாக இருக்க வேண்டும்:

வாகனங்களை ஓட்டுபவரின் மனநிலை, விபத்துக்கள் ஏற்பட ஒரு முக்கிய காரணம். வாகனங்களை எடுத்து ஓட்டும் முன்பு வீட்டில் மனைவியிடமோ, பெற்றோர்களிடமோ சண்டை போட்டு விட்டு அதே மனநிலையுடன் வாகனத்தை எடுத்து ஓட்ட ஆரம்பித்தால் வாகனம் ரோட்டில் சென்று கொண்டிருந்தாலும் ஓட்டுபவரின் மனம் வீட்டில் நடந்த சண்டையைப் பற்றியே சிந்தித்துக் கொண்டு வருகிறது.



எதிரில் வாகனம் வருவது சாலையில் போகும் மற்றவர்களுக்குத் தெரிந்தாலும் குறிப்பிட்ட நபருக்குக் கவனம் முழுவதும் வீட்டில் நடந்த சண்டையில் இருப்பதால் எதிரில் வரும் வண்டியை கவனிப்பதில்லை. விபத்து நடக்கிறது.

பெற்றோர்கள் திட்டியிருந்தாலோ அல்லது மனைவி மக்கள் மனதைப் புண் படும்படி பேசி இருந்தாலோ, வாகனத்தை ஓட்டுபவருக்கு 'தான் யாருக்கும் தேவை யில்லாதவன், தன்னிடம் உண்மையாக அன்புகாட்டுபவர்கள் யாரும் இல்லை. தனக்கு என்ன நேர்ந்தால்தான் என்ன வாகப் போகிறது' என்ற விரக்தி ஏற்படு கிறது. அதனால் வண்டி ஓட்டும் போது அலட்சிய மனோபாவம் ஏற்பட்டு விபத்துக் களை எதிர் கொண்டு அழைக்கும் மன நிலையில் இருக்கிறார்கள். பல விபத்துக் களுக்கும் முக்கிய காரணம் இத்தகைய மன நிலை இதனைக் குறைக்க நீங்கள் உதவ முடியுமே!

2. அவசரம் வேண்டாம்:

ஒரு இடத்திற்கு வாகனத்தில் போக வேண்டுமென்றால், போகும் இடத்தின் தூரத்தை அனுசரித்து, போகும் வழியின் போக்குவரத்து நெரிசலை அனுசரித்து நேரத்தைக் கணக்கிட வேண்டும். வீட்டில் புறப்பட தாமதமாக்கி விட்டு அந்த காலதாம தத்தை எல்லாம் வண்டியின் வேகத்தின் மூலம் சரி செய்துக் கொள்ளலாம் என்று

முயலும் போது பல விபத்துக்கள் ஏற்படு கின்றன. நேரம் குறைவாக இருப்பதால் எப்படியும் குறிப்பிட்ட நேரத்திற்குள் வாகனங்களின் இடையில் எப்படியாவது 'நுழைந்து' போக வேண்டும் என்று தோன்று கிறது. இப்படிச் செய்யும் போது விபத் துக்கள் ஏற்படுகின்றன. கொஞ்சம் முன்ன தாவே நீங்கள் வீட்டில் இருந்து கிளம்ப லாமே!

3. உடல் நிலையும் ஒரு காரணம்:

உடல் மிகவும் அசதியாக இருக்கும் போது ஓட்டுபவரின் மனமும் உடலும் ஒருங் கிணைந்து வேலை செய்வதில்லை. மிகவும் சோர்வாக இருக்கும் போது வண்டியை ஓட்டாமல் இருப்பது நல்லது. குடித்து விட்டு வண்டியை ஓட்டுவது இன்றைய ஃபேஷன்! 'எனக்கு நல்ல கண்ட்ரோல் உண்டு' என்று சொல்லிக் கொண்டு வண்டியை ஓட்டுபவர் கள், தங்களை மாத்திரம் அல்லாமல் தங்க ளுடன் கூட வருபவர்களையும் விபத்துக்கு உள்ளாக்குகிறார்கள். இத்தகைய விபத் துக்கள் நாளுக்கு நாள் பெருகி வருகிறது. குடிப் பழக்கத்தை நீங்கள் தடை செய்ய முடியா விட்டால், குடித்து விட்டு வண்டியை ஓட்டாமல் இருக்கும்படி உங்கள் கண வரையோ, மகனையோ மற்ற உறவினர் களையோ வற்புறுத்தலாமே!

4. பேச்சுக் கொடுக்காதீர்கள்:


ஒரு சிலர் வண்டியை ஓட்டிச் செல்லும் போது பின்னால் உட்கார்ந்திருக்கும் பெண் மணி பேசிக் கொண்டே வர வண்டியை ஓட்டுபவர் அதனைக் கேட்டுக் கொண்டு அவ் வப்போது பதில் சொல்லிக் கொண்டு வரு வார். இதைப் பார்க்கும்போது அவர் களைப் பார்த்து 'அட இவ்வளவு அன்னி யோன்யமாக இருக்கிறார்களே! என்று சந் தோஷப்பட முடியாது. இவர்களுக்கு பேசிக் கொள்ள, வீட்டில் நேரமே இல்லையோ, வேறு இடமே இல்லையா? பேச்சு சுவாரஸ் யத்தில் எதிரே பக்கத்தில் வரும் வண்டிகளை ஒரு கணம் கவனிக்காமல் இருந்துவிட்டாலும் விபத்து ஏற்படுகிறது. வாகனங்களில் செல் லும் போது கூடிய வரை முக்கியமான விஷ யங்களைப் பேசாமல், விவாதிக்காமல் இருக்க வேண்டும்.


5. காற்றில் பறக்கும் புடைவைகள்:

இரண்டு சக்கர வண்டிகளில், குறிப்பாக மோட்டார் சைக்கிளில் போகும் பெண் களின் புடைவைகள் சக்கரத்தில் சிக்கிக் கொண்டு அதனால் ஏற்படும் விபத்துக்கள் இன்னும் நடந்து கொண்டு இருக்கின்றன. இதுபோன்ற பல சம்பவங்களைப் பத்திரி கைகளில் படித்தும் கொஞ்சம் எச்சரிக்கை யாக இருக்கக் கூடாதா?

6. குடும்பக் கட்டுப்பாடு ஸ்கூட்ட ருக்குத் தேவை:

நாமிருவர்; நமக்கிருவர். குடும்பத்தைப் பொறுத்தவரை சரிதான். குடும்பத்தில் உள்ள நபர்கள் ஒருவருக்கொருவர் அன் பினைக் காண்பித்துக் கொள்ள வேண்டியது அவசியமே. நன்றாக வளர்ந்த குழந்தை களையும் 'போன்சாய்' மர வளர்ப்பு முறை போல் கைகால்களைச் சுருக்கி, குறுக்கி மொத்த ஷேப்பினையே மாற்றி நான்கு பேர்களையும் ஸ்கூட்டரில் திணித்து, போகும் போது திடீர் என்று ஏற்படும் பிரச் னைகளைச் சமாளிக்க முயலும் போது கண்ட்ரோல் இல்லாமல் போய் விடுகிறது. இத்தகைய விபத்துக்களைத் தவிர்க்க முடியுமே. நான்கு பேர்கள் ஸ்கூட்டரில் போவதால்ஏற்படும்லாபத்தைவிட அப்படிப் போகும் போது ஏற்படும் விபத்தால் உண்





டாகும் நஷ்டம் ஈடுசெய்ய முடியாதது என் பதை உணர்ந்து இத்தகைய விபத்துக்களைத் தவிர்க்கலாமே!

7. காலணிகளில் கவனம் தேவை:

வண்டிகளை ஓட்டுபவர்கள் காலணி களில் பிரத்தியேகக் கவனம் செலுத்த வேண்டும். பழக்கப்பட்ட செருப்புகளில் இருந்து புதிய செருப்புகளை அணியும் போது காலுக்கும் செருப்புக்கும் சரியாகப் பொருந்தாமல் லூசாக இருந்தால் பிரேக்கு களை மிதிக்கும் போது சரியான உணர்வு கிடைப்பதில்லை. புதிய செருப்புகளால் பல விபத்துக்கள் நடந்ததை வாகனம் ஓட்டுப வர்கள் ஒப்புக்கொள்வார்கள். புதிய செருப்புகள் அணியும் போது அதிகக் கவனம் தேவை. வண்டியை ஓட்டிச் செல் லும் போதே வழியில் அதிக போக்குவரத்து இல்லாத இடங்களில் பிரேக்குகளை மிதித் துச் சரியான 'ஃபீலிங்' கிடைக்கிறதா என் பதைப் பரிசோதித்துக் கொள்ள வேண் டும்.



8. வண்டிக்கும் உடல் பரிசோதனை தேவை:

உங்களது கணவரின், மகனின் உடல் நிலையைக் குறித்து அக்கறை காட்டுவதைப் போல அவ்வப்போது அவர்கள் ஓட்டும் வாகனங்களும் நல்ல கண்டிஷனில் இருக் கிறதா என்று கேளுங்கள். பிரேக்குகள், ஹாரன்கள் சரியாக வேலை செய்யவில்லை யென்றால் உடனே மெக்கானிக்குகளிடம் எடுத்துச் சென்று சரி, செய்ய வற்புறுத் துங்கள். 'பரவாயில்லை, சமாளித்துக் கொள்ளலாம்' என்ற அபிப்பிராயத்துடன் வண்டியை ஓட்ட அனுமதிக்காதீர்கள்.

9. உயிர் எல்லாவற்றைக் காட்டி லும் பெரிது:

உயிர் எல்லாவற்றைக் காட்டிலும் பெரிது என்ற உண்மையை அடிக்கடி உணர வையுங் கள். ஒரு குறிப்பிட்ட இடத்திற்குத் தாமத மாகப் போக நேரிட்டால் அதற்காக வருத் தப்பட வேண்டாம். அவசரப்பட்டு வழி யில் ஏதாவது நேர்ந்திருந்தால்? என்று நினைத்துச் சமாதானப்படுங்கள். வெளியில் சென்று இருக்கும் உங்களது வரு கைக்காக வீட்டில் உங்களுக்கு மிகவும் நெருக்கமானவர்கள் காத்துக்கொண்டிருக்கி றார்கள் என்கிற நினைப்பு எப்போதும் உங்க ளுக்கு இருக்கட்டும். — கமலநாதன்.

மெலட்டூரில் ஒரு கலைக்கோயில்



'கலை மணக்கும் தஞ்சை' இப்போது மாறிக் கொண்டு வருகிறது. இருந்தாலும் அதன் பழைய பாரம்பரியம் மாறவில்லை என்பதற்கான அடையாளங்கள் இருக்கத் தான் செய்கின்றன. அவற்றுள் ஒன்றுதான் — பாகவத மேளா.

தஞ்சையில் இருந்து பதினைந்து கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் மெலட்டூரில் கோடைகாலத்தில் 'ஜல் ஜல்' என்ற சலங்கைச் சத்தமும்; சுத்தமான கர்நாடக இசையும் காற்றில் மிதக்கத் தொடங்கும். ஜூனில் வரும் நரசிம்ம ஜயந்தியின் போது வரதராஜ பெருமாள் கோவிலில் 'பாகவதமேளா' நடத்துகிறார்கள்.

இதன் கதை சரித்திரச் சிறப்பு கொண்டது. 11 ஆம் நூற்றாண்டில் படையெடுத்த முகமதிய மன்னர்களின் பிடியில் இருந்து கலைஞர்களைக் காப்பாற்றியது மராட்டிய அரசு. நாயக்க மன்னர்கள் ஐநூற்றுப் பத்து ஏக்கர் நிலத்தை மெலட்டூரில் கலைஞர்களுக்குக் கொடுத்து அவர்களை வாழவைத்தார்கள். அப்படிக் கலைஞர்கள் கூடிய நேரம் மலர்ந்ததுதான் பாகவதமேளா. பாரம்பர்யச் சிறப்புமிக்க பரதநாட்டியத்தையும், கர்நாடக இசையையும் கொண்டு மிகச் சிறந்த முறையில் பிரகலாத சரித்திரம், ஹரிச்சந்திரா, ஹரிஹர லீலா விலாசமு போன்ற நாட்டிய நாடகங்களைத் தயாரித்தார்கள். பக்தி ரசமும், உயர்ந்த கலைச் சிறப்பும், சுத்தமான இசையும் நாட்டியமும் இதன் பிரதான அம்சங்களாக விளங்குகின்றன. மலிவான பொழுது போக்கு அம்சங்கள் எதுவும் நுழைய கிஞ்சித்தும் இவர்கள் அனுமதிப்பதில்லை.

* பெண் வேடத்தில் நடராஜன்.



இடையில் நசிந்து போன இக்கலைக்குப் புத்துயிர் அளிக்க வி. கணேச ஐயர் 1939 இல் 'லக்ஷ்மி நரசிம்ம ஜயந்தி பாகவத மேளா நாட்டிய நாடக சங்கம்' என்ற ஒன்றைத் துவக்கினார். இதன் வளர்ச்சிக்காக தனது நாற்பது ஏக்கர் நிலத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக விற்றார்! அவருடைய மகன் ஸ்வாமிநாத ஐயரும் முழு ஒத்துழைப்பு கொடுத்தார்.

இப்படிப் பல கலைஞர்களின் தியாகத்தாலும் உழைப்பாலும் வளர்ந்த பாகவத மேளா இந்த ஆண்டு ஜூன் 4 இல் பொன் விழா கொண்டாடுகிறது.

இன்றைக்கும் இதில் பங்கு பெறும் கலைஞர்கள் ஒவ்வொருவரும் இந்தியாவில் எந்த மூலையில் இருந்தாலும் தாங்கள் சொந்தச் செலவில் வருகிறார்கள். பாகவதமேளாவில் பெண் வேடம் தரிக்கும் நடராஜன் ஸ்வாமிநாதரின் மகன். இவர் சவுதி அரேபியாவில் இயந்திரப் பொறியாளராகப் பணியாற்றுகிறார். ஆறாவது வயதிலேயே நாட்டியம் பயின்ற இவர், வேலை செய்யும் நேரம் போக மீதி நேரமெல்லாம் நாட்டியத்திற்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறார். ஒவ்வொரு வருடமும் குடும்பத்துடன் தன் சொந்தச் செலவில் வெளிநாட்டில் இருந்து வந்து பாகவதமேளாவில் பங்கு பெறுகிறார்.

கலை செழிக்கும் இப்படிப்பட்ட வம்சத்தில் வந்த இவருடைய பெண் ப்ரியா நடராஜனும் தந்தைக்குச் சற்றும் சளைத்தவளல்ல. நாட்டியத்தின் மேல் கொண்ட காதலால் தன் பெற்றோரையே துறந்து சென்னையில் வசிக்கிறார். சித்ரா விஸ்வேஸ்வரனைக் குருவாகக் கொண்ட ப்ரியா, எதிர்காலத்தில் தன் வாழ்வே கலைக்காகத்தான் என்கிறார்.

அட்டையில்: **ப்ரியா**
வண்ணப்படம்: **யோகா**

புதிய பட்டர்ஃபிளை மிக்ஸரில் அப்படி என்ன தனிச்சிறப்பு ?









40 ஆண்டுகளுக்கு மேல் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் சாதனங்கள் தயாரிப்பில் ஈடுபட்டு ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் குக்கர், ஸ்டவ், வாட்டர் ஹீட்டர், ஃபிளாஸ்க் ஆகியவற்றை வழங்கிய பட்டர்ஃபிளை இப்போது உங்களுக்கு அளிப்பது புதிய மிக்ஸர்-கிரைண்டர்.

பட்டர்ஃபிளை சிறப்பு அம்சங்கள் :

- ☐ ஹெவி டியூட்டி மோட்டார்- தொடர்ந்து 60 நிமிடம் ஓடும்.
- ☐ மூன்று பிரத்தியேக ஜாடிகள்- 26 கேஜ் சேலம் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
- ☐ ஹைடென்ஷன் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பிளேடுகள் — அதி உறுதி; எளிதில் மழுங்காத கூர்மை.
- ☐ ஸ்பெஷல் கிரேடு நைலான் கப்ளர் — எளிதில் தேயாது; உடையாது; மோட்டார் ஓடும் போதும் ஜாடியை இறுகப் பற்றிக் கொள்ளும்.
- ☐ சஸ்பெண்டட் மோட்டார் அமைப்பு- மோட்டார் அதிர்வு இல்லாமல் இயங்கும்.
- ☐ மைக்ரோ பாலன்ஸ் செய்த ரோட்டர் - மோட்டார் சப்தம் இல்லாமல் சீராக இயங்கும்.
- ☐ ஆட்டோமாடிக் ஓவர்லோடு கட் ஆஃப் வசதி-மோட்டாருக்குப் பாதுகாப்பு
- ☐ வேக்வம் ரப்பர் ஷு-மிக்ஸர் இயங்கும் போது ஆடாமல் நிலை நிறுத்தும்.
- ☐ ஃபுட் ப்ராசஸர் இணைப்பு கள் - வேண்டுமானால் கிடைக்கும்.

பட்டர்ஃபிளை

மிக்ஸர் கிரைண்டர்

குறையாத திறன் அழியாத தரம்.





தயாரிப்பாளர்கள் :

காந்திமதி அப்ளையன்ஸஸ் பி. லிமிடெட்,

272, அண்ணா சாலை, சென்னை - 600 018. போன் : 45 41 86, 45 53 42, 45 87 22, 45 83 75

எல்லா பிரபலமான கடைகளிலும் கிடைக்கும்.

Insight-GA-819

மரங்களும் மலர்களும் தீபாவும்

— ருக்மிணி பார்த்தசாரதி

"டெல்லியே பரவாயில்லை. அங்கே குளிர்காலம் தீபாவளியோடு ஆரம்பிச்சு ஹோலிப் பண்டிகையோடு முடியறது. இந்த ஸிம்லாவிலோ ஜூன் மாசம் முதல் தேதி ஆரம்பிச்சு மே மாசம் முப்பத்தொன்றாம் தேதி முடியறது!" என்றாள் பாட்டி.

பாட்டிக்கு அப்படியொன்றும் வயதாகவில்லை. ஐம்பத்தைந்துதான். கணவர் அவள் பெயருக்கு வைத்துவிட்டுப் போன சொத்து கணிசமாக இருக்கிறது. அவளோ ஃபாஷன் ஸர்க்கிளைச் சேர்ந்தவளாக இருந்திருந்தால் நரைத்துவிட்ட தலைமுடியில் சாயம் பூசி, பூப்போட்ட நைலான் புடைவை கட்டிக் கொண்டிருக்கலாம். ஆனால் சம்பிரதாயங்களில் ஊறிப் போனவள் அவள். நூல் புடைவைதான். அதிலும் கலர் பளிச் சென்று கண்ணை அடிக்கிற மாதிரி உடுத்த மாட்டாள். காது, மூக்கு, கழுத்து எல்லாமே வெறுமை... பிள்ளை ராஜகோபாலனோடு இருப்பதுதான் கௌரவம் என்று நினைப்பாள்.

இந்தக் கதையில் அவளுக்குப் பாட்டி என்பதைத் தவிர வேறு பெயர் கிடையாது. பாட்டி என்றால் யாருக்கு? பேத்தி தீபாவுக்கு! தீபா ராஜகோபாலனின் மகள். பிள்ளை வழிப் பேத்தி! ஆகவே, அசல் பேத்தி! இவளைத் தவிர பாட்டிக்கு ஒரு பேரனும் பேத்தியும் கூட இருக்கிறார்கள் — ஆனால் அவர்கள் பெண் வழிப் பேரன் பேத்திகள் — அதாவது, பாட்டியின் மகள் பங்கஜாவின் குழந்தைகள். ஆகவே இரண்டாம் பட்சம்தான்.

பாட்டிக்கு நல்ல இடகாத்திரமான உடம்பு. தலைவலி, முதுகுவலி, என்றெல்லாம் படுக்க மாட்டாள். ஆனால் குளிர் தாங்காது. குளிர் காலத்தில் கை கால்களெல்லாம் ஐஸ் கட்டிகளாகச் சில்லிட்டுப் போகும். கால் விரல்கள் சிவந்து வீங்கிப் போகும். சற்றே அடிபட்டால்கூட வலியில் துடிதுடித்துப் போவாள். மாட்டுப் பெண் ஜானகி பார்த்துப் பார்த்து நல்ல 'உல்' லாக வாங்கித் தன் கையாலேயே கனமான ஸாக்ஸ் பின்னித் தருவாள். அதை அணிந்து கொண்டாலும் ஸாக்ஸுக்குள்ளும் கால் விரல்கள் சில்லிட்டே கிடக்கும். டெல்லியிலேயே இப்படிக் கஷ்டப்படுவாள். இரண்டு வருடங்கள் ஸிம்லாவில் இருக்க வேண்டும் என்றால் அது கொடுமைதானே!

முதன் முதலில் ராஜகோபாலன் தாயிடம் விஷயத்தைச் சொன்ன போது "என்னால் முடியாதுடா ராஜா! இந்த உடம்பு தாங்காது. அந்தக் குளிரில் காலிலும் கையிலும் ரத்தம் உறைஞ்சு போயே நான் செத்துப் போவேன்!" என்றாள் பாட்டி.

"இரண்டு வருஷம்தான் அம்மா... அப்புறம் மறுபடியும் டில்லிக்கே மாற்றலாயிடும்... உனக்குத் திக்காக ஸ்வெட்டர் ஸாக்ஸ் வாங்கித் தர்றேன். ரூமுக்கு ரூம் நெருப்பு மூட்டி உஷ்ணப்படுத்தற வசதி அங்கே எல்லா வீடுகளிலேயும் இருக்குமாம். உனக்குக் குளிரே தெரியாது அம்மா!" என்றான் மகன்.

பாட்டி மகனின் முகத்தைப் பார்த்தாள். அவனை இரண்டு வருடங்களுக்கு "டெபுடேஷனில்" அனுப்புகிறது அலுவலகம். சம்பள உயர்வு உண்டு. இதைத் தவிர, இந்த டெபுடேஷன் அவனுடைய உழைப்புக்கும் தகுதிக்கும் கிடைத்த வெகுமதி.

அடுத்து, பாட்டி தீபாவின் முகத்தைப் பார்த்தாள். "செல்லக் குட்டி, வெல்லக்

கட்டி,'' என்றெல்லாம் பாட்டி கொஞ்சிக் கொஞ்சிச் சீராட்டும் பேத்தி. ஆறு வயது நிறைந்த எழிலோவியம். ''பாட்டி! பாட்டி!'' என்று கழுத்தைக் கட்டிக் கொண்டு தொங்கும் பொற்சித்திரம். பாட்டி ஊட்ட உண்டு, அவள் தாலாட்ட உறங்கி, அவள் கதை சொல்ல லயித்து மகிழ்ந்து வளர்ந்த குழந்தை.

''தீபாவுக்கும் அங்கே நல்ல ஸ்கூல் இருக்கு அம்மா... இது கோடை விடுமுறைதானே? ஸ்கூல் திறந்தவுடனேயே சுலபமாக அட்மிஷன் கிடைச்சுடும்!'' என்றான் ராஜகோபாலன்.

''பேசாமல் நீ ரெண்டு வருஷம் என் கூட இருந்துடு அம்மா! அண்ணா போயிட்டு வரட்டும்!'' என்று பிரச்னைக்குப் பளிச்சென்று விடை தந்தாள், பாட்டியின் பெண் பங்கஜா.

பாட்டியின் சம்பிரதாய உண்மை அதிர்ந்தது. என்ன! பெண் வீட்டில் தங்குவதா? தாயைத் தாங்கக் காத்திருக்கும் மகன் இருக்கும் போதா? மாமியாரைத் தாயாகவே நினைக்கும் மாட்டுப் பெண் இருக்கும் போதா? முக்கனியாக, சர்க்கரையாகத் தித்திக்கும் பேத்தி தீபாவை விட்டுப் பிரிவதா?

''நான் உன்னோடு வர்றேன் ராஜா... அதுதான் உனக்கும் நிம்மதி, எனக்கும் கௌரவம். ரெண்டு வருஷம் என்ன? நிமிஷமாய்ப் பறந்து போயிடாதா?'' என்றாள் பாட்டி.

''ரெண்டு வருஷமும் குளிர் காலத்துக்கு அம்மாவை என்னிடம் அனுப்பிடணும்!'' என்று தமையனிடம் வாக்குறுதி கேட்டாள் பங்கஜா.

''பார்க்கலாம்!'' என்றாள் பாட்டி.

ஆக, பாட்டி, பிள்ளை, மாட்டுப் பெண், பேத்தியோடு ஸிம்லாவில் அடி வைத்தாள்.

இது மே மாதம். குளிர் காலம் ஆரம்பிக்க இன்னும் நாலைந்து மாதங்கள் இருக்கின்றன. அதற்குள் இந்தச் சீதோஷ்ண நிலை பழகிவிடும் என்று கணக்குப் போட்ட பாட்டி முதல் நாளே தன் கணக்குத் தப்பு என்று தெரிந்து கொண்டாள்.

புட்டு செய்வதற்குத் தேங்காய்க்குப் பதில் கொப்பரையைத் துருவிச் சேர்த்தால் புட்டு ருசியாக இருக்கும்.

— இந்திரா.



மாலை மங்க ஆரம்பித்ததுதான் தாமதம். காற்றில் குப்பென்று குளுமை நிறைந்தது. காலையில் டெல்லியின் உஷ்ணத்தில் வதங்கி விட்டு மகனின் காரில் நேரே இங்கு வந்து இறங்கிய பாட்டி, இந்த மாற்றத்தை எதிர்பார்க்கவில்லை. உடல் நடுங்க ஆரம்பித்த போது சட்டென்று தீபாவைப் பார்த்தாள். தனக்குக் குளிர் என்றால் குழந்தைக்கும் குளிருமே! பேத்தியை அருகே இழுத்து வாரி அணைத்துக் கொண்டாள்.

''நல்ல ஊரடியம்மா இது! மே மாசமே இப்படியானால் ஜனவரி எப்படி இருக்கும்?'' என்று தன் கவலையை வாய் விட்டுச் சொன்னாள் பாட்டி. ஜானகி முறுவலித்தவாறு இரண்டு ஸ்வெட்டர்களை தீபாவுக்கு அணிவித்தாள். ''இப்போதுதான் ரெண்டு மாசம் முன்பு இந்த ஸ்வெட்டரையெல்லாம் தோய்த்து உலர்த்தி மடிச்சுப் பெட்டிக்குள் வைத்தோம்.. கொஞ்ச நாள் இதன் தரிசனம் இல்லாமல் இருக்கலாம்னு பார்த்தால், இதோ மறுபடியும் ஸ்வெட்டர் உடம்பில் ஏறியாச்சு!'' என்று அலுத்துக் கொண்டாள் பாட்டி.

வந்து இரண்டே மாதங்களில் பாட்டிக்கு ஸிம்லா பழகி விட்டது. குளிர்ந்த கையோடு ஸ்வெட்டர் அணிந்து கொள்வதும் பழகி விட்டது. ராஜகோபாலனின் கார் சாதுவாக ஒரு ஷெட்டில் உறங்கிக் கொண்டிருக்க, ஏழை பணக்காரன் என்ற வேறுபாடின்றி மலை ரோடுகளின் ஏற்றத்திலும் இறக்கத்திலும் காலார நடக்க வேண்டிய நிர்பந்தம் கூட பாட்டிக்குப் பிடித்துப் போய் விட்டது. இயற்கை தன் அழகை இப்படி வாரி வாரிக் கொட்டியிருக்கும் இந்தப் பிரதேசத்தில், நிதானமாக, அந்த அழகை மெள்ள மெள்ள ரசித்துக் கொண்டே நடப்பதே இன்பமல்லவா!

தீபாவைப் பள்ளியில் சேர்த்து விட்டார்கள். பிற்பகல் மணி ஒன்றுக்கெல்லாம் அவள் பள்ளியிலிருந்து திரும்பி விடுவாள். அவசரமாக ஹோம்வொர்க், பின் ஏதாவது டிபன். அதன் பிறகு பாட்டியிடம் வந்து நிற்பாள்.

''ரெடியா பாட்டி?''

''ரெடிம்மா தங்கம்!''

ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு இருவரும் கிளம்பி விடுவார்கள். ''வாக்கிங்'' போக... ராஜகோபாலனோ ஜானகியோ உடன் வருவதும் உண்டு. ஆனால் அவர்களுக்கு வேறு பணிகள் இருந்தாலும், பாட்டி — பேத்தியின் ஜோடி இயற்கையழகைப் பருகக் கிளம்பி விடும்.

மனிதர்களிலும் தான் எத்தனை வகை! உதட்டிலும் கன்னத்திலும் சாயமும், கண்களுக்கு மையும் மாஸ்கராவும், தலையைவிடப் பெரிய போலி மயிர்க் கொண்டையும், தழைய தழைய கட்டிய ஹிப்ஸ்டர் புடைவையுமான ''ஃபாஷன்'' சுந்தரிகள்; அவர்களு

டன் கோட்டும் பாண்டும் டையும் பளபளக்கும் ஜோடுமாக நடக்கும் ''ஸாஹப்புகள்'' முகமே வேறாயிருக்கும் ''திபெத்'' நாட்டினர்கள். வித்தியாசமான உடையலங்காரத்தில் ஹிமாசல் பிரதேசத்துக் குடிமக்கள். இந்தப் பெண்கள் தலைமுடியைச் சுற்றி வண்ண வண்ண மலர்கள் அச்சிட்ட துணியைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். தலைப் பின்னல் அத் துணிக்குக் கீழ் எட்டிப் பார்க்கும் காட்சி புதுமையாயிருந்தது. பைஜாமாவுக்கு மேல், ஏறக்குறைய கணுக்கால் வரையில் தொங்கும் கோட். காலில் முரட்டு ஜோடு... அவர்களுடைய நிறத்திலும் ஒரு தனிச் சிறப்பு... சிவப்பு கலந்த நிறம்.



ஆனால் ரோஜா நிறமல்ல. ''அசாத்திய வெளுப்போடு சிவப்பைச் சேர்த்துக் குழைத்த ஆண்டவன் எங்கே அந்த நிறத்தின் மீது கண் பட்டு விடுமோ என்று அஞ்சி ஒரே ஒரு சொட்டுக் கறுப்பையும் சேர்த்துக் கலந்து விட்டானோ?'' என்று நினைத்துக் கொள்வாள் பாட்டி.


இயற்கையின் அழகோ பாட்டியும் பேத்தியும் சமமாக ரசிக்கும் விஷயம். ஓங்கி வளர்ந்த பைன் மரங்களைப் பார்த்து, ''பாட்டி! ஒன்றையொன்று துரத்திக் கொண்டும் ஓடும் மேகங்களைப் பார்த்து. ''இது மேகங்களுக்குள் ரன்னிங் ரேஸ்! அதோ, அந்தப் பெரிய மேகம்தான் ஜெயிக்கும்!'' என்பாள். ''பாட்டி! இந்த மேகத்தைப் பார்த்தால் நம் மெத்தையிலிருக்கும் பஞ்சு மாதிரி இல்லை?'' என்பாள். ஒன்றுக்கொன்று மாறுபாடே இல்லாத மலை ரோடுகள்.. மேடுகளில் தடதடவென்று ஓடுவாள். பின் களைப்பில் மூச்சு வாங்க அப்படியே பொத்தென்று உட்காருவாள்.. சரிவில் சறுக்கு மரத்தில் விளையாடுவது போல் சறுக்கி விரைந்து உன்மத்தம் அடைவாள். ஓடி விளையாடிக் களைத்த பின் பாட்டியின் அரவணைப்பில் சுருண்டு கொள்வாள்.

ஒரு நாள் தீபா, ''பாட்டி, நாம் பார்த்த ரோஜாவின் கலரையெல்லாம் சொல் பார்க்கலாம்!'' என்றாள். சொல்லிக் கொண்டே வந்தாள் பாட்டி. ரத்தச் சிவப்பு, தீ நாக்கின் செம்மை, வெளிர் மஞ்சள், ஆழ்ந்த மஞ்சள், இளஞ்சிவப்பு, வெள்ளை, ஆரஞ்சு... சரி, இதுவரை சுலபம்தான்'' வெள்ளையில் சிவப்பு ரேகைகளையும் மஞ்சளில் வெள்ளைக் கோடுகளையும் எந்த வண்ணத்தில் சேர்க்கலாம்?'' என்று அவள் குழம்பிப் போன போது, ''பாட்டி! நீ தோத்துப் போயிட்டே! ரோஜாதான் ஜெயிச்சது!'' என்று தீபா கைகொட்டிச் சிரித்தாள்.

''ராஜா, ஜானகி இந்தப் பைன் மரம் இருக்கே, இதைச் சீராக வெட்டினால் விடுகளுக்குத் தரை போடலாம். சிறு சிறு துண்டங்களாக நறுக்கினால் கரி அடுப்பை நிமிடத்தில் ஏற்றலாம். ''ஸில்வர் ஓக்'' மரத்தின் இலைகள் வெள்ளியும் பச்சையுமாகக் கண்ணுக்குத்தான் அழகு என்றில்லை... மாடு இதை எத்தனை ஆசையாய்ச் சாப்பிடறது தெரியுமா? மனுஷன் எப்படி இயற்கையோடு இணைஞ்சு வாழணும் என்கிறதுக்கு இதெல்லாம் எத்தனை அழகான உதாரணங்கள்!'' என்றாள் பாட்டி.

''ஸிம்லா வந்தப்புறம் உன் பேச்சே கவிதையாக இருக்கு அம்மா!'' என்றான் ராஜகோபாலன்.

''கவிதையா? என் பேச்சா? தீபாவின் கண்களைப் பார்.. அவள் இயற்கையின் அழகில தன்னை மறந்து ஆடும் நர்த்தனத்தில் பார்... கவிதையின் உண்மையான அர்த்தம் புரியும்!'' என்று பேத்தியை அணைத்து உச்சிமுகர்ந்தாள் பாட்டி.



நல்ல மாங்காயை, அலம்பி, தோல் சீவிச் சிறு சிறு துண்டங்களாக நறுக்கி இட்லி மாவுடன் கலந்து இட்லி வார்த்தால் பிடித்தமான புதிய ருசியுடன் இட்லி மிக நன்றாக இருக்கும்.

— பாக்யம் ஸ்ரீநிவாஸன்.

மாதங்கள் செல்லச் செல்லக் குளிர் அதிகரித்தது. பாட்டியின் உற்சாகம் குறைந்தது.. சாதாரணமாக ''டீ'' என்றாலே முகம் சுளிப்பவள், ஏலக்காயும் இஞ்சியும் சேர்த்துக் கொதிக்க வைத்த தேனீரை ஜானகி கொடுக்கக் கொடுக்க சூடு மாறுமுன் வாய் வாயாகக் குடித்தாள்.... இதைச் சாப்பிட்டால் உடம்பில் கொஞ்சம் தெம்பு வருது! என்றாள். அம்மா! நீ காலுக்கு 'டபுள் ஸாக்ஸ்'' போட்டுக்கணும்... ''ஒன்றுக்கு மேல் ஒன்று'' என்றான் ராஜகோபாலன். பாட்டியின் பஞ்சு ''ரஜா''யின் உள்பக்கம் கம்பளியை வைத்துத் தைத்துக் குளிருக்கு அடக்கமாகப் போர்த்திக் கொள்ளக் கொடுத்தாள் ஜானகி. பாட்டியும் தன்னால் இயன்றவரை முயன்று பார்த்தாள். ஆனால் குளிரில் கைவிரல்கள் விரைத்துப் போயின. கால்விரல்கள் சிவந்து வீங்கின.. நாளெல்லாம் வெயிலில் உட்கார்ந்திருந்தாள் பாட்டி. சற்றே மேக மூட்டம் தோன்றினாலும் உள்ளே வந்து ரூம் ஹீட்டர் முன் அமர்ந்தாள். மாலையில் ''ஃபயர் ப்ளேஸில்'' கரிகளை அடுக்கித் தகதகவென்று நெருப்பு மூட்டினான் ராஜகோபாலன். அதற்குமுன் உட்கார்ந்து குளிர் காய்ந்தாள் பாட்டி. இருந்தும் நவம்பருக்குமேல் அவளால் சமாளிக்க முடியவில்லை.

தாயை அழைத்துக் கொண்டு டெல்லி சென்று பங்கஜாவின் இல்லத்தில் விட்டு விட்டு வந்தான் ராஜகோபாலன். ''தீபாவை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்!'' என்று கிளிப்பிள்ளையைப் போல் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே இருந்தாள் பாட்டி.

சாதாரணமாக டெல்லியில் மார்ச் மாதம் முடியுமுன் பாட்டியின் பாதங்களில் வீக்கம் வடிந்துவிடும்... பழையபடி பாதம் ஊன்றி நடக்க ஆரம்பித்துவிடுவாள்.. நிறம் மாறிக்

கருத்தும் சிவந்தும் விகாரமாகி விட்ட பாதங்கள் பழைய ஆரோக்கிய நிலையை அடைந்துவிடும்.

மார்ச் பிறந்தவுடனேயே பாட்டி கடித மெழுதி நச்சரிக்க ஆரம்பித்து விட்டாள்.. "ராஜா... சீக்கிரம் வந்து என்னை அழைத்துக் கொண்டு போ! பெண் வீட்டில் எத்தனை நாள் தங்கமுடியும்? நன்றாகவா இருக்கிறது? என் கால் கைகளில் இப்போது வலி இல்லை. கண்தான் தீபாவைப் பார்க்காமல் பூத்துப் போய்விட்டது!"

"மார்ச் முடியட்டும்!" என்று ராஜகோபாலன் பதிலெழுதினான். அப்படியே, மாதம் முடிந்ததும் டெல்லி சென்று தாயை அழைத்து வந்தான். பெண் வழிப் பேரக் குழந்தைகளிடம் சிரித்த முகத்தோடு விடை பெற்றுக் கொண்ட பாட்டி ஸிம்லா வந்து தீபாவைக் கண்டதும் வாரி அணைத்து உணர்ச்சி வசப்பட்டுப் போனாள்!

ஸிம்லாவில் குளிர் காலம் ஜூன் முதல் தேதி ஆரம்பித்து மே முப்பத்தொன்றாம் தேதி முடிவடைவதாகப் போன வருஷம் சொன்ன பாட்டி இப்போது வேறு விதமாக எண்ணலானாள். ஸிம்லாவில் கோடைக் காலம் ஆரம்பமாகப் போகிறது. "ஸம்மர் இன் ஸிம்லா!" அவளும் தீபாவுமாகக் காலாற நடந்து இயற்கை எழிலை ஆசைத் தீரப் பருகலாம். ஆஹா! வேறென்ன வேண்டும்?

ஆனால் அந்த வருஷம் இயற்கை ஏமாற்றத்தைத் தந்தது.

ஏப்ரல் மாதத்தில் மழை பெய்தது..

நீலமாக, நிர்மலமாக இருக்க வேண்டிய வானத்தில் மேகத் திரள்களைக் கண்ட போது பாட்டி உற்சாகமிழந்து போனாள். உள்ளூர் வாசிகளுக்கே இது அதிசயமாக இருந்தது. "ஏப்ரலில் மழை பெய்யக் கூடாதே!" என்றார்கள். "ஒரு வேளை இந்த வருஷம் ஸம்மரே இருக்காதோ?" என்றார்கள்.

நாள் மேல் நாளாக நகர்ந்தது.. தீராத, மீளாத மேக மூட்டம். வானத்துக்கு என்ன ஆகிவிட்டது? இயற்கைக்கு யார் மீது கோபம்?

மே, ஜூன், ஜூலை... மழை விட்ட பாடில்லை... மழையென்றால் சடசட வென்று பெய்து ஓய்ந்துவிடும் ஆக்ரோஷமான மழையும் இல்லை. வீட்டுக்குள்ளிருந்து வெளியே உலகைப் பார்த்துப் பார்த்துத் துக்கித்தாள் பாட்டி... உலகமே சாம்பல் பூத்தாற் போல் எங்கும் மேகங்கள். ஏதோ ஓர் அரக்கன் மேகங்களாக உருமாறி மரங்கள், இலைகள், தெருக்கள், கட்டடங்கள் எல்லாவற்றையுமே விழுங்குவது போல் இருந்தது.

"பாட்டி! எங்கே பார்த்தாலும் மேகங்களாகவே இருக்கே? சூரியன் எங்கே?" என்றாள் தீபா.

"அதைத்தான் நானும் தேடறேன் கண்ணம்மா!" என்றாள் பாட்டி... பாட்டி! நீ ஒரு கதை சொல்லியே, நினைவிருக்கா? காத்தும் சூரியனும் யார் பலசாலின்னு பார்க்க "பெட்" வச்சுதாம். தெருவில் போய்க் கொண்டிருந்த மனுஷனின் கோட்டை யார் கழற்ற வைக்கிறார்களோ, அவர் தான் பலசாலி... காத்து அடிக்க அடிக்க மனுஷன் கோட்டை இன்னும் கெட்டியாய் பிடிச்சுண்டானாம்.. ஆனால் சூரியனின் வெயில் தாங்காமல் கோட்டை எடுத்துப் போட்டானாம். அதனால் சூரியன் தான் பலசாலி...இல்லையா, பாட்டி?"

"ஆமாம்!"

"பின்னே ஏன் சூரியன் மேகத்துக்கெதிரே தோத்துப் போறது?"

இந்தக் கேள்விக்கு என்ன பதில் தரமுடியும்? "என்ன புத்தியடியம்மா உனக்கு! என் சமர்த்துச் செல்லச் சூடிகைத் தங்கம்!" என்று பேத்தியைக் கொஞ்சத்தான் முடிந்தது பாட்டியால்.

"உடைந்த கை, கால்களை வைத்துக் கொண்டு வாழ்க்கையில் உயர முடியும். ஆனால் உடைந்த உள்ளத்தை வைத்துக் கொண்டு உழைக்க முடியாது, வாழ்க்கையில் உயர முடியாது.

— யாரோ

— ரமா ராமநாதன்.



நாட்கள் நகர்ந்தன. இரவு பகல் என்றில்லாமல், வானம் பூமி என்று பாராமல், எங்கும் எப்போதும் மேக மூட்டம். ஜன்னல்களைத் திறந்தால் மேகங்கள் வீட்டுக்குள்ளும் பிரவேசித்தன. மூடியே வைத்தால் வீடெல்லாம் தேங்கி நின்ற நீர்த்துளியின் நாற்றம்... வீட்டின் தரைகள், மேஜை நாற்காலிகள் அனைத்திலும் மக்கிப்போன மரத்தின் நாற்றம். "இன்றாவது மழை பெய்யும், பெய்துவிட்டு நின்றுவிடும்... இந்த மேகங்கள் இப்படி மழையையும் தராமல் விலகியும் போகாமல் ஏன் சண்டித்தனம் செய்கின்றன?" என்று நினைத்துச் சோர்ந்து போனாள் பாட்டி.

ஆகஸ்ட் மாதத்தில், வானத்தில் பெரிது பெரிதாய் ஓட்டைகள் விழுந்தாற்போல் நீர் கொட்ட ஆரம்பித்தது... கருமேகங்கள் வானத்தை நிறைத்தாலும், மரங்களும், மலர்களும், தெருக்களும், கட்டடங்களும் மேகச் சிறையிலிருந்து விடுபட்டாற்போல் ஆனந்த

நினைவிருக்கட்டும், ஊட்டச்சத்துமிக்க சமநிலை உணவு இல்லையேல், உங்கள் குழந்தை சுறுசுறுப்பாக விளங்கத்தேவையான ‘சரி’ யான கலோரிகளைப் பெறமுடியாது.

“ஆகவேதான் என் குழந்தைக்கு செரிலாக் தருகிறேன்.”

‘சரி’யான கலோரிகள் என்றால் என்ன?
நாம் உண்ணும் உணவில் புரதங்கள், கார்போஹைட்ரேட்டுகள் மற்றும் கொழுப்புச் சத்துகள் சரியான சமநிலையில் இருந்து, அவற்றிலிருந்து கிடைக்கும் கலோரிகளுக்குத்தான் ‘சரி’யான கலோரிகள் என்று டாக்டர்கள் கூறுகின்றனர். இளம் குழந்தைகள் நன்கு வளரவும் சுறுசுறுப்பாக விளங்கவும் இந்த மூன்று முக்கியமான உணவுச்சத்துகள் அவசியம்.
எனவே, உங்கள் செல்லக் குழந்தை ‘சரி’யான கலோரிகளைப் பெறுவதற்கு, நீங்கள் ஊட்டச்சத்துமிக்க சமநிலை உணவை அதற்கு அளிக்கவேண்டும்.
ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வேளை உணவிலும் இவை தேவை.
ஆனால், குழந்தைகளுக்கு வழக்கமான உணவுகளைக் கொடுத்து, கலோரிகளை சமாளிப்பது பெரும்பாலான தாய்மார்களுக்கு எளிதல்ல.
இதற்குப் பரிகாரம் உண்டா?
உண்டு. செரிலாக்–ஊட்டச்சத்துமிக்க சமநிலை திடஉணவு.
உங்கள் குழந்தைக்கு பால் மட்டுமே போதாதபோது, அதன் நான்காவது மாதம் முதலே செரிலாக் தாருங்கள்.
செரிலாக்கில் புரதங்கள், கார்போஹைட்ரேட்டுகள், கொழுப்புச் சத்துகள், வைட்டமின்கள், இரும்புச் சத்து, மற்றும் கால்ஷியம் அடங்கியுள்ளன. ஆகையால், உங்கள் குழந்தை ‘சரி’யான கலோரிகளைப் பெற்று, சுறுசுறுப்புடன் வளரும்; சுவையான செரிலாக்கை ருசித்துச் சாப்பிடும்.
எனவே, செரிலாக்கில் அடங்கியுள்ள ஊட்டச்சத்துமிக்க சமநிலை உணவின் நற்பலன்களை உங்கள் குழந்தைக்குக் கொடுங்கள். குழந்தைக்கு 6 மாதம் ஆனதும், செரிலாக்கைத் தவிர விட்–ஆப்பிள், விட்–ஆரஞ்சு மற்றும் விட்–வெஜிடேபிளின் நற்பலன்களையும் அளிக்கவும்.

பேக்கின் மீதுள்ள விதிமுறைகளைப் பின்பற்றுக.

இலவசம்: செரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: செரிலாக், தபால் பெட்டி எண். 21, புது தில்லி–110020.





உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் செரிலாக் அனுகூலம்.

மாக மழைநீரில் குளித்தன. பாட்டி மகிழ்ந்தாள். தீபாவை மடிமேல் அமர்த்திக் கொண்டு நீராகவும் நீர்க் கட்டிகளாகவும் பெய்த மழையின் அழகை ஜன்னல் வழியே கண்டு களித்தாள். கண்ணாடி ஜன்னல் மீது நீர்க் கட்டிகள் பட்பட்டென்று விழுந்த போது தீபா, "பாட்டி, மழை நம் ஜன்னல் மேல் தபலா வாசிக்கிறது, இல்லை?" என்றாள். இந்த உபமானத்தைக் கேட்டுச் சொக்கிப்போன பாட்டி குழந்தையை இறுக அணைத்துக் கொண்டாள்.

"மழை ஆசை தீரப்பெய்கிறது. இனி ஓய்ந்து விடும். கதிரவனின் கிரணங்கள் உலகுக்கு மெத்தென்று ஒத்தடம் கொடுக்கும்" என்று கற்பனை செய்தாள் பாட்டி.

ஆனால் மழை விடவில்லை. நாள்மேல் நாளாகப் பெய்தது. பிரளயகாலமே வந்து விட்டதுபோல் சீற்றத்தோடு பெய்தது. கல்லூரிகள், பள்ளிகள் அனைத்தும் மூடப்பட்டுவிட்டன... இந்த மழையிலும் அலுவலகம் சென்று வந்தான் ராஜகோபாலன். மழையினால் ஏற்பட்ட நாசத்தைப் பற்றிக் கதை கதையாகச் சொன்னான். ஆங்காங்கே மலை ரோடுகள் விண்டு பாதாளத்தில் விழுந்து விட்டன. ஏழை மக்களின் வீடுகளில் பற்பல மழையில் நனைந்த தீப்பெட்டிகள் போல் நசுங்கிவிட்டன... நூற்றுக் கணக்கானவர் தம் உடைமைகளை இழந்தனர். வயோதிகர்களும் குழந்தைகளும் மழை நீரோடு அடித்துச் செல்லப்பட்டனர். போக்குவரத்து ஸ்தம்பித்து விட்டது.

செப்டம்பர் மாதத்தில் தான் மழை விட்டது. பள்ளிகள் திறந்தன. தீபா புத்தகப் பையை முதுகின் மேல் ஏற்றிக் கொண்டு பள்ளிக்கு விரைந்தாள். ஆனால் மாலை வேளைகளில் பாட்டியோடு வாக்கிங் போகவில்லை. பாட்டிக்கு நல்ல ஜலதோஷம், லேசாக ஜுரம். இவை வாரக்கணக்கில் நீடிக்கவே பயந்துபோய் "ஸ்பெஷலிஸ்டிடம்" காண்பித்தான் ராஜகோபாலன். அவருடைய யோசனைப்படி அக்டோபர் மாதத்திலேயே தாயை டெல்லி அழைத்துச் சென்று சகோதரியின் இல்லத்தில் விட்டு விட்டு வந்தான்.

பிப்ரவரி மாதத்திலிருந்தே பாட்டி மகனுக்குக் கடிதம் எழுதித் தொணதொணக்க ஆரம்பித்துவிட்டாள். "ராஜா! இந்த வருஷம் எனக்குக் கை கால் வீக்கமெல்லாம் லேசாகத்தான் வந்தது. இப்போதே வடிந்து போய்விட்டது. ஜலதோஷம், சளி, ஜுரம் எதுவும் அடியோடு இல்லை. நாளெல்லாம் தீபாவின் நினைவாகவே இருக்கிறது. சீக்கிரம் வந்து என்னைக் கூட்டிக் கொண்டு போ!"

தீபாவோ தன் பங்குக்கு, "பாட்டியை சீக்கிரம் வரச் சொல்லு, அப்பா..." ஸ்னோ ஃபால்" எத்தனை அழகு! இதைப் பாட்டி மடியில் உட்கார்ந்து பார்த்தால் ஜம்முனு இருக்கும்! என்று நச்சரித்தாள்.

மார்ச் மாதம் பிறந்தவுடனேயே தாயை அழைத்துக் கொண்டு வந்தான் ராஜகோபாலன். வருமுன் பங்கஜாவிடம், "இந்த ஸம்மரோடு ஸிம்லாவில் என் டர்ம் முடியறது... நீங்கள் எல்லாரும் அதற்குமுன் ஒரு ட்ரிப் அங்கே வாருங்கள்!" என்று அழைத்து விட்டு வந்தான்.


மார்ச் மாதத்தில் பனி பெய்யாது, தன் தாயைக் குளிர் வாட்டாது என்றுதான் கணக்குப்போட்டான் ராஜகோபாலன். ஆனால் பாட்டி ஸிம்லா வந்திறங்கிய மறுநாளே "ஸ்னோ ஃபால்" தன் அழகை அந்தப் பரம ரசிகைக்குக் காட்டிற்று.

மாசு மறுவற்ற பளீர் வெள்ளை நிறத்தில் பஞ்சு போன்ற 'ஸ்னோ' துளி சிறந்த "பாலே" நடனக் கதாநாயகியின் லாகவத்தோடு வானத்திலிருந்து பூமியில் மெத்தென்று வந்திறங்கி, மரங்களையும் செடிகளையும் வீடுகளின் சரிந்த கூரைகளையும் வெண் போர்வையால் போர்த்திற்று... சற்று நேரத்தில் வானத்தில் கதிரவன் தோன்ற, அந்த உஷ்ண ரேகையில் வெள்ளைப் போர்வை சற்றே உருகி நீராக, நீரின் ஒவ்வொரு துளியும் கதிரவனின் ஒளி பட்டு வானவில்லின் அற்புத வண்ணங்களைப் பளீர் பளீரென்று வீசிய காட்சியின் அழகே அழகு!

அதன் பிறகு பல நாட்கள் வானம் நீலமாக, மேகங்களின் சுவடே இல்லாமல் இருந்தது. பாட்டி ஆசை தீர வெயிலில் குளிர் காய்ந்தாள். வெள்ளைப் பனிப் போர்வை மெள்ள மெள்ள உருகிச் சின்னஞ்சிறு ஆறுகளாக ஓடும் நளினத்தைப் பார்த்தாள்.. மரங்களின் இலையற்ற கிளைகள் மெள்ள மெள்ள உயிர் பெற்று, மஞ்சளாகவும், இளந்

பக்கோடா செய்பவர்கள் சிலர் வெங்காயம் சேர்க்க மாட்டார்கள். அப்படி வெங்காயம் வேண்டாம் என்பவர்கள் பொடிப் பொடியாய் அரிந்த முட்டை கோஸை பக்கோடா மாவில் கலந்து செய்தால் வெங்காயம் சேர்த்தாற்போல் இருக்கும். ருசியாகவும் இருக்கும்.

— இந்திரா.



சிவப்பாகவும், பின் பச்சையாகவும் துளிர் விடும் காட்சியைக் காணக் காண அலுக்கவே இல்லை.

மாலை வேளைகளில் பாட்டியும் பேத்தியுமாக வாக்கிங் போகும் வழக்கத்தைத் தொடர்ந்தார்கள். இயற்கை அழகைத் தனியாகக் கண்டு களிக்கலாம். அதுவும் இன்பம் தான். ஆனால் தன்னைப் போலவே அதில் இதயத்தைப் பறிகொடுக்கும் மற்றொரு மனிதப்பிறவி உடனிருந்தால், அந்த இன்பம் பன்மடங்காகி விடுகிறது... அந்த மனிதப்பிறவி உயிருக்குயிரான பேத்தியாகவே கொஞ்சிக் கொஞ்சிச் சீராட்டும் பாட்டியாகவே இருந்து விட்டால், பின் கேட்க வேண்டுமா?

பள்ளிகளில் கோடை விடுமுறை ஆரம்பமாகிவிட்டது. பங்கஜா தன் மக்களோடு ஸிம்லா வந்து விட்டாள். தினமும் எல்லோருமாகக் காலாற நடந்து செல்வது வழக்கமாகி விட்டது. கடைகள் கொண்ட "மால்" ரோடு, லோவர் பஜார்... ஒரு தடவை ஜாகோ மலைமீதிருந்த கோயிலைக் கூட தரிசித்துவிட்டு வந்தார்கள். இது ஹனுமான் கோயில். லக்ஷ்மணனின் உயிரைக் காப்பாற்ற சஞ்சீவினி மலையோடு திரும்பிய ஹனுமான் இந்த மலை உச்சியில் அடி வைத்துக் கண நேரம் இளைப்பாறியதாக ஐதீகம்.

"இங்கே இருப்பவர்கள் யாருமே ரெட்டை நாடியாக இல்லையேன்னு பார்த்தேன்... இப்படிச் சதா மலை ரோடுகளில் ஏறிக் கொண்டும் இறங்கிக் கொண்டும் இருந்தால் உடம்பு எப்படிச் சதை போடும்?" என்றாள் பங்கஜா.


"அது மட்டுமில்லை. எல்லோருமே வயசுக்கு ஒவ்வாத இளமையோடும் ஆரோக்கியத்தோடும் இருக்கிறார்கள் பார். இதற்கும் இந்த மலை ரோடுகளும் மரங்களும் மலர்களும்தான் காரணம்!" என்றாள் பாட்டி.

"அம்மாவுக்குச் சிம்லா பைத்தியம் தலைக்கேறிவிட்டது!" என்றாள் பங்கஜா, முறுவலித்தவாறு.

"ஆமாம்... இன்னும் சில நாளில் இந்த அழகையெல்லாம் விட்டுவிட்டுப் போகணுமேன்னு வருத்தமாய் இருக்கு!" என்றாள் பாட்டி.

ராஜகோபாலன் அலுவலகத்தில் சார்ஜ் ஒப்படைத்து விட்டான்... ஸிம்லாவில் அவனுடைய வேலை முடிந்துவிட்டது. பெரும்பாலான சாமான்களையெல்லாம் லாரியில் ஏற்றி டெல்லிக்கு அனுப்பி விட்டார்கள். பங்கஜா தன் மக்களோடு டெல்லி திரும்பி விட்டாள். இன்னும் ஒரு வாரத்தில் பாட்டி தன் பிள்ளை மாட்டுப் பெண்ணோடும் செல்லப் பேத்தியோடும் ஸிம்லாவை விட்டுக் கிளம்பிவிடுவாள்.

"இன்னும் ஒரு வாரம்தானா, பாட்டி? ஒரே வாரம் தானா?" என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்த குழந்தையை எப்படிச் சமாதானப்படுத்துவது என்று பாட்டிக்குத் தெரியவில்லை.



வீட்டுத் தோட்டத்தில் மிளகாய்ச் செடி பூத்துக் குலுங்குகிறது. ஆனால் ஒரு காய்கூட காய்ப்பதில்லை என்று சலிப்பவர்களுக்கு இதோ ஓர் ஐடியா. பூக்கள் பூத்திருக்கும் போது சிறிது சர்க்கரை அல்லது வெல்லம் கலந்த தண்ணீரைச் செடியில் தெளித்து விடுங்கள். வண்டுகள் பூவை மொய்த்துவிடும். அத்தனை பூக்களும் காயாகி விடும். இது என் அனுபவத்தில் கண்ட உண்மை.

— பிரேமா ராமலிங்கம்.

அன்று ராஜகோபாலனுக்கும் ஜானகிக்கும் ஒரு "ஃபேர்வெல் பார்ட்டி" அவர்கள் கிளம்பியவுடனேயே பாட்டியும் தீபாவும் வாக்கிங் கிளம்பினார்கள். "பாட்டி! இன்னிக்கு என செல்ல ரோடில் போகலாம்!" என்றாள் தீபா. அவள் அப்படிக் குறிப்பிட்டது இருபுறமும் மரங்கள் காவலர் போல் வளர்ந்து நிற்கும் ரோடு... மரக்கிளைகளில் குரங்குகள் தாவித் தாவிக் களிக்கும் வாலினால் தொங்கி வேடிக்கை காட்டும்.

"என் கையைக் கெட்டியாய்ப் பிடிச்சுண்டால் போகலாம்!" என்றாள் பாட்டி. தீபா உடனே அவள் கையைப் பிடித்துக் கொண்டாள்.

ஓங்கி வளர்ந்த பைன் மரங்கள். இவற்றுக்குத்தான் ஆண்டவன் எத்தகைய கம்பீரத்தை அளித்து விட்டான்! காற்றில் அவை அசைந்தாடும் ஆட்டத்தில் நளினம், கூடவே உன்மத்தம்... அவற்றின் நறுமணமே அவர்களை அணைத்துக் கொள்வது போல் இருந்தது.. ஆங்காங்கே வீடுகள். வீட்டின் தோட்டக் கதவுகள் கான்க்ரீட் கம்பங்களுக்கு நடுவே பொருத்தப்படாமல் இரு பெரும் மரங்களுக்கிடையே பொருத்தப்பட்டிருப்பது இங்கு சாதாரணக் காட்சி. வீட்டில் வசிப்பவரின் பெயர்ப் பலகையும் தபால் பெட்டியும் கூட மரங்கள் மீதே பொருத்தப்பட்டிருந்தன.

நின்று நின்று நடப்பதும், தலையை நிமிர்த்தி மரங்களைப் பார்ப்பதும், "பாட்டி! இந்த மரம் என்ன உயரம் இருக்கும்? ஆயிரம் அடி இருக்குமா?" என்று கேட்பதுமாக உடன் வந்தாள் தீபா. "பாட்டி, அதோ பார்! அந்தப் பறவை எனக்கு 'ஹலோ' சொல்லறது!" என்று விட்டு, "ஹலோ ஸிட்டில் பர்ட்! எனக்கும் என் பாட்டிக்கும் டாடா

சொல்லு! நாங்கள் ஊருக்குப் போகிறோம்!" என்றாள்.

எதிர் பாராமல் பத்தே நிமிடங்களில் நிர்மலமாக இருந்த வானத்தை மேகத்திரை மறைத்துக் கொண்டது. உலகெங்கும் கருமை படர்ந்தது... பாட்டி தீபாவை இழுத்துக் கொண்டு ஒரு வீட்டின் வராந்தாவில் ஒதுங்கினாள்.... பார்த்துக் கொண்டிருந்த போதே கோலிக் குண்டுகளாய்ப் பனிக்கட்டிகள் கொட்டி பூமியை வெள்ளைப் பொட்டுக்களால் அலங்கரித்துவிட்டன. பின், பத்து நிமிடங்கள் நல்ல மழை... அரை மணிக்குள் வானம் மறுபடியும் நீலமாய், சாதுவாய், ''நானா மழையைக் கொட்டினேன்?'' என்று கேட்பதுபோல் காட்சி தந்தது.

பாட்டியின் கையைச் சட்டென்று உதறி விட்டு தீபா ஓடினாள்.... கரைய ஆரம்பித்து விட்ட பனிக்கட்டிகளைப் பொறுக்கி உள்ளங்கையில் ஏந்தி, அங்கே அவை முழுவதுமாகக் கரைவதைப் பார்த்துக் கலகலவென்று சிரித்தாள். மழையில் நனைந்த மரங்களின் கிளைகளிலிருந்தும், இலைகளிலிருந்தும் நீர் அவள் மேல் வர்ஷித்தது... ஆடைகள் முழுமையாக நனைந்து உடலோடு ஒட்டிக் கொண்டன. சில்லென நீர் தலை முடியிலிருந்து சொட்டத் தொடங்கிவிட்டது. பாட்டி பதறிப் போய் விட்டாள். குழந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு வீட்டுக்கு விரைந்து வந்தாள். நனைந்த உடைகளைக் களைந்து உடம்பைத் துடைத்து மாற்றுடை அணிவித்தாள். தலைமுடியை ஈரம் போகத் துவட்டிவிட்டாள். சூடாகப் பால் சாதம் பிசைந்து எடுத்து வந்து ஊட்டி விட்டாள். பின், படுக்கச் சொல்லி ரஜாயினால் போர்த்திவிட்டாள்.

இயற்கை நமக்கு அளித்துள்ள இனிய பானங்களில் ஒன்று பதநீர். இது மிகச் சிறந்த ஓர் டானிக் என்றே சொல்லலாம். காலையில் எழுந்தவுடனே, பதநீர் கிடைக்கும் பருவங்களில் காப்பி சாப்பிடுவதை விட்டொழித்து, வெறும் வயிற்றில் இரண்டு தம்ளர் பதநீர் அருந்தி வரும் பழக்கத்தை மேற்கொள்ளுவது மிகவும் நல்லது. இதனால் உடலில் உள்ள சூடு தணிகின்றது. சுறுசுறுப்பு உண்டாகின்றது. மலச்சிக்கல் மறைகின்றது. உடலுக்கு நல்ல வலிமையும், சருமத்திற்கு ஒரு மிருதுத்தன்மையும், பளபளப்பும் தோன்றும். தவிர, இது ஒரு சிறந்த டானிக்!

பதநீரில், புரதம், கொழுப்பு, பாஸ்பரஸ், கனிஜ உப்புக்கள் கால்சியம், சர்க்கரை, வைடமின் பி, சி, ஆகியவையும் உள்ளன. பதநீரைத் தொடர்ந்து அருந்தி வந்தால் சொறி, சிரங்கு, சோகை நோய், வயிற்றுப்புண், மூலச் சூடு, மூத்திர வியாதி ஆகியவை நீங்கும்.

— கே. வனிதா



தீபாவுக்குத் தனி அறை... அவள் மூன்று வயதாக இருந்தபோதிலிருந்தே ''டிஸிப்ளின் வேண்டும்'' என்று அவளுடைய பெற்றோர் செய்த ஏற்பாடு இது.

அடுத்த அறை பாட்டியினுடையது.

தன் உடைகளும் உடம்பும் கூட நனைந்து சில்லிட்டு போயிருந்ததை அப்போதுதான் கவனித்தாள் பாட்டி... தானும் மாற்றுடை அணிந்து கொண்டாள்.

விருந்துண்ணச் சென்ற ராஜகோபாலனும் ஜானகியும் ஒன்பதரை மணிக்குத் திரும்பினார்கள். தீபா இதற்குள் உறங்கிப் போயிருந்தாள். பாட்டி தன் வழக்கப்படி ஒரு வாழைப்பழமும் ஒரு தம்ளர் மோருமாகத் தன் இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு படுத்துக் கொண்டாள்.

உடலெல்லாம் அசாத்திய அசதி. பலமெல்லாம் கழன்று விழுந்து விட்ட மாதிரி இருந்தது.

மெள்ள மெள்ள, உடலில் உஷ்ணம் ஏறிற்று. நல்ல ஜுரம்.. மணி பதினொன்றடித்து ஓய்ந்தது. ஆழ்ந்த உறக்கத்திலிருந்த மகனையும் மருமகளையும் எழுப்பித் தொந்தரவு செய்ய விரும்பாமல் பாட்டி படுத்திருந்தாள்.

ஜுரம் ஏற ஏற உணர்வுகள் மங்கின. அரை மயக்க நிலை..

அப்படி, மயக்க நிலையில் அவள் இருந்திராவிட்டால், தீபா சற்றே முனகுவதையும், நேரம் செல்லச் செல்லக் குழந்தைக்கு மூச்சு விட்டு விட்டுத் தடைபட்டு வருவதையும் தன் அறையிலிருந்து செவியுற்றிருப்பாள், கட்டாயம்.

மறுநாள் காலை கூட பாட்டியின் உடம்பு அனலாகத் தகித்துக் கொண்டுதான் இருந்தது. கண்களைப் பிரிக்க முடியாமல் சோர்ந்து, துவண்டு, படுத்திருந்தாள்.

தீபாவின் உடம்பு சில்லிட்டுப் போயிருந்தது.

பாட்டியின் புலம்பல் ஓயவே இல்லை. ''நான் இல்லையா கிழவி? மரங்களையும் மலர்களையும் தீபாவைப் போலவே நானும் நேசிக்கலையா? ஒரு பலிதான் வேண்டும் என்றால் என்னை எடுத்துக் கொண்டு போயிருக்கலாமே!'' முகத்திலும் கண்களிலுமாக அடித்துக் கொண்டே துயரம் வற்றாமல் அழுது கொண்டே இருந்தாள் பாட்டி.

இந்த அழுகை இனி அவள் வாழ்நாள் முழுவதுமே ஓயாது. வாய்விட்டு அழுவதை அவள் நிறுத்தினாலும் கூட, இயற்கையின் மடியிலேயே நிம்மதியாக உறங்கிவிட்ட முக்கனியான சர்க்கரையான செல்லப்பேத்தியை நினைத்து அவள் இதயம் மௌனமாக அழுது கொண்டுதான் இருக்கும்.

அவியல்



தக்காளி மலிவாகக் கிடைக்கும் காலத்தில், தக்காளியை வாங்கி, கெட்சப், சாஸ் போன்றவற்றை வீட்டிலேயே நாம் தயாரித்து வைத்துக்கொண்டால் பணமும் மிச்சமாகும். பொருளும் தரமானதாக இருக்கும்.

தக்காளி கெட்சப்

தேவையான பொருட்கள்:

தக்காளி சாறு — 1 கிலோ,
துண்டுகளாக்கப்பட்ட பெரிய வெங்காயம் — 2,
பொடியாக நறுக்கிய பூண்டு — 10 பல்,
பட்டை, கிராம்பு, சோம்பு, ஜாதி பத்ரி தூள்கள் சேர்த்து — 1 டீஸ்பூன்,
கரம் மசாலா பொடி — 2 டீஸ்பூன்,
மிளகாய்த் தூள் — $1\frac{1}{2}$ டீஸ்பூன்,
மிளகுத் தூள் — $\frac{1}{2}$ டீஸ்பூன்,
உப்பு — $2\frac{1}{2}$ டீஸ்பூன்,
சர்க்கரை — 100 கிராம்,
வினிகர் — 10 டீஸ்பூன்,
சோடியம் பென் சோயேட் — 1 சிட்டிகை.

செய்முறை:

தக்காளிச் சாற்றை அடிகனமான பாத்திரத்தில் ஊற்றி கொதிக்க விடவும். வெங்காயம், பூண்டு, பட்டைத் தூள், கரம் மசாலா பொடி, மிளகாய்த் தூள், மிளகுத் தூள் எல்லாவற்றையும் ஒரு துணியில் போட்டு பொட்டலம் போல கட்டி தக்காளி சாற்றினுள் போடவும். தக்காளிச் சாறு 1/3 பங்காகக் கொதித்து வற்றியதும், மசாலா பொட்டலத்தை வெளியில் எடுத்து, நன்றாக ஆறியதும் மசாலா சாறு முழுவதையும் தக்காளி சாற்றினுள் இறுக்கமாகப் பிழிந்து விடவும். பிறகு சர்க்கரை, உப்பு, வினிகர் சேர்த்து சிறிது கொதிக்க விட்டு கடைசியாக சோடியம் பென்சோயேட் ஒரு சிட்டிகை போட்டு இறக்கி வைக்கவும். இந்தத் தக்காளி கெட்சப், பிரட், பன், சப்பாத்தி, பூரி கட்லெட் முதலானவற்றிற்குத் தொட்டுக் கொள்ள ஏற்றது.

— கீதா தெய்வசிகாமணி.

உறவும் நட்பும் மலர...

வாழ்க்கையில் உறவும் நட்பும் மலர ஆறு முக்கியமான சொற்கள்: ஒப்புக் கொள்கிறேன். இது என்னுடைய தவறுதான். ஐந்து முக்கியமான சொற்கள்: தங்களுடைய பணி சிறப்பானது. மனமார்ந்த பாராட்டுதல்கள். நான்கு முக்கியமான சொற்கள்! இதில் தங்களுடைய கருத்து என்ன?

மூன்று முக்கியமான சொற்கள்: தாங்கள் மனது வைத்தால். இரண்டு முக்கியமான சொற்கள்: மிக்க நன்றி. ஒரு முக்கியமான சொல்: நாம். தேவையில்லாத சொல்: நான்.

—'வெற்றிச் சிந்தனைகள்' நூலிலிருந்து.

— ஆர். பிரபாவதி.

மங்கையர் மலர். மே மாத இதழில் "வற்றல் போடுவோமே" பகுதியில் கூழ் வற்றலைப் பற்றி வெளியிட்டிருந்தீர்கள். மிகச் சுலபமாகக் கூழ் வற்றல் செய்யலாம்.

தேவையான பொருட்கள்:

பச்சரிசி — 2 கிலோ,
ஜவ்வரிசி — 250 கிராம்,
எலுமிச்சம்பழம் — 8 பழங்கள் (பெரியது)
உப்பு — 100 கிராம்.
பச்சை மிளகாய் — 250 கிராம்.

செய்முறை:

பச்சரிசியையும், ஜவ்வரிசியையும் ஒன்றாகக் கலந்து மிஷினில் மாவாக அரைத்துக் கொள்ளவும். பிறகு பச்சை மிளகாய், உப்பு இரண்டையும் மிக்ஸியிலோ, ஆட்டுரலிலோ நன்றாக அரைத்துக் கொள்ளவும். ஒரு பெரிய பாத்திரத்தில் ஒன்றுக்கு 2 அளவு தண்ணீர் விதம் வைத்துக் கொள்ளலாம். நன்றாகக் கொதித்த பிறகு அரைத்த பச்சை மிளகாய் விழுதுகளைக் கலக்கிக் கொதிக்கும் நீரில் கலக்கவும். ஒரு கொதி கொதித்த பிறகு அரைத்த மாவைக் கொஞ்சம் நீர் விட்டுக் கரைத்துக் கொதிக்கும் நீரில் கொட்டவும். நன்றாகக் கிளறி வைத்த பிறகு இறக்கி ஆறிய பிறகு பாலிதீன் தாள்களில் முறுக்கு மற்றும் ஓமப்பொடி அச்சில் பிழியலாம். சிறிதும் கட்டி கட்டாமல் வரும்.

— ராணி, ஆனந்தி.

கூக்குரலிட்டால் போதுமா?

சமீபத்தில் லலித்கலா அகாடமியில் தமிழ்நாடு ஒருங்கிணைப்புச் செயல்பாட்டுக் கழகம்' ஏற்பாடு செய்திருந்த சுவரொட்டிக் கண்காட்சி பெண்களின் வாழ்வில் ஏற்படும் சீர்கேடுகளையெல்லாம் முகத்தில் அறைவதுபோலத்தெளிவாகவெளிப்படுத்தியது.

சிவகாசித் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்கள் தம் கட்டை விரல் ரேகையையே இழக்கும் பரிதாப நிலையைச் சுவரொட்டியில் கண்டு மனம் பரிதவித்தது. துன்பங்களையும், துயரச் சுமைகளையும், அவமானங்களையும், அல்லல்களையும் சுமப்பதுதான் ஒரு பெண்ணின் விதியா என்று அலை பாய்ந்தது. இந்த அவலத்துக்குச் சட்டம் ஒரு பதிலுமே கூறாமல் கண்ணையும், வாயையும் கட்டிக் கொண்டு மறுபுறம் பார்த்துக் கொண்டா இருக்கிறது என்ற நியாயமான கேள்வி எழுந்தது.

வழக்கறிஞர் மாலினி கணேஷிடம் இது பற்றிக் கேட்டபோது —

"நாம எப்பவும் எந்தப் பிரச்சினையையும் நெகடிவ்வாகவே பார்க்கிறோம். கொடுமை, கொடுமை என்று கூக்குரலிட்டால் போதுமா? கொடி பிடித்தால் போதுமா?

அதிலிருந்து மீண்டு வர என்ன வழிகள், அவற்றைஎப்படிக்கையாளவேண்டுமென்று செயலில் காட்ட வேண்டாமா?


பெண்கள் சாதாரணமானவர்கள். நூறு ரூபாயில் குடித்தனம் நடத்திப் பத்து ரூபாய் சேமிப்பார்கள். ஆயிரம் ரூபாயென்றால் நூறு ரூபாயை அழகாக ஒதுக்கி வைத்துக் காட்டுவார்கள். சட்ட நுணுக்கங்களைத் தாமும் புரிந்து கொண்டு அறியாதவர்களுக்கும் புரிய வைக்க வேண்டியதல்லவா படித்த பெண்களின் கடமை. அதை விட்டுவிட்டு, இல்லைப் பாட்டு பாடி, இயலாமைக்கு இடங்கொடுத்து, சுயபச்சாதாபத்தையும், தன்னிரக்கத்தையும் தானே வளர்த்துக் கொண்டால் எப்படி?

முன்பு பல பெண்களை ஒருவன் மணந்து கொள்வது அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாக இருந்தது. சிலர் விஷமமாக எடுத்துக் காட்டுவதுபோல் நம் புராணக் கதைகள் கூட இதற்குச் சாதகமாகவே அமைந்தன. 'சீதையைத் தவிர வேறு எவரையும் சிந்தையாலும் தொடேன்' என்று கூறிய இராமர் கதையைவிட, வில்லாற்றலால் ஒருத்தி விவேகத்தால் ஒருத்தி என்று பலரை வீழ்த்திய அர்ஜுனன் கதைக்குத்தானே **'mass appeal'** அதிகம்? ருசுவாகப்பட்ட இருதார மணம் ஒரு குற்றம் என சட்டம் இப்போது வந்துவிட்டது. அதற்கு ஏழு ஆண்டுகள் சிறைவாசம் என்று சட்டப் புத்தகங்கள் சொல்கின்றன. தவிர இருதார மணம் செய்து கொண்டவர் அரசாங்க வேலையிலிருந்தால் அவர் வேலையை இழக்க நேரிடும். 'முதல் மனைவியின் கையெழுத்துப் பெற்றுவிட்டேன்' என்ற கண் துடைப்பெல்லாம் சட்டத்தின் முன் செல்லாது. ஒரு பெண்ணின் திருமண வாழ்க்கையில் பங்கு கேட்பவள் மனைவியுமல்ல. அவள் குழந்தைகள் முறையான வாரிசுகளுமல்ல. ஆனால் நாம் தெம்பு கொடுத்தால் இன்னும் நன்றாக இருக்கும். வழிகாட்டுவதும் சிறப்பாக இருக்கும். கதைகளின் மூலமும், ஒரு மாநிலத்தின் வாக்குகளையே வளைத்துப் போடக் கூடிய வல்லமை படைத்த திரைப் படங்களின் மூலமும் இப்பிரச்சினையை நகைச் சுவைக்குரியதாக மட்டுமே பார்க்கிறோம்.



அதோடு மட்டும் நில்லாமல் மேலும் ஒரு படி சென்று நியாயப்படுத்தியும் விடுகிறோம்" மேலும் பெண்களுக்குச் சாதகமாக இருக்கும் பல சட்டங்களை எடுத்துக் காட்டுகிறார். ஆக, பெண்களின் துயரங்களை எடுத்துக் காட்டுவது சரிதான். பிரச்னைகளை பேசி 'ஐயோ நாம் இப்படி இருக்கிறோமே' என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் சரிதான். இனி அதற்கும்மேல் ஒருபடி போய், நமக்கு இப்படியெல்லாம் ஆதரவுகள் இருக்கின்றன. தைரியமாகவிழித்துக்கொள்ளுங்கள்" என்று எழுந்து நிற்கத்தெம்பு கொடுத்தால் இன்னும் நன்றாக இருக்கும். வழிகாட்டுவதும் சிறப்பாக இருக்கும்.

— நிர்மலா சக்கரவர்த்தி



உங்கள் சருமத்திலுள்ள எண்ணிலா நுண்ணிய துவாரங்கள் ஆழத்திலுள்ள சுரப்பிகளுக்கு வழியாக அமைந்துள்ள உண்மையை நீங்கள் ஒரு வேளை கவனிக்காமலிருக்கலாம்.

ஆனால் அன்றாட வாழ்க்கையில் உடம்பில் படியும் அழுக்காலும், உயிர்ற்ற அணுக்களாலும் ஆழும் சுரப்பிகளிலிருந்து வெளிப்படும் திரவங்களாலும் இத்துவாரங்கள் அடைபடுகின்றன.

எத்தனை முறை சோப்பும் ம் சேர்த்துத் தேய்த்தாலும் த அழுக்கு நீங்குவதில்லை. னெனில் நீங்கள் தேய்ப்பது யாழத்தை ஊடுருவதில்லை. இதன் விளைவு? கள் சருமத்தில் கரும் புள்ளிகளும், பருவும் ன்றுமில்லாது சரும நோய்கள் பரவுவதற்கும் வாகிறது.

ஆகவே உங்கள் சருமத்திற்கு ஆழ ஊடுருவிச் க்கும் பராமரிப்பு அத்தியாவசியம் — இதை அளிக்கிறது கேடில் நேச்சுரல் கிளென்சர்.



இதிலே இயற்கையான நலம் தரும் வெள்ளரி மற்றும் எலுமிச்சையின் சத்துக்கள் உள்ளது. இதை உபயோகிப்பதால் சருமத்திலுள்ள நுண்ணிய துவாரங்களைத் திறந்து அடியாழத்திலுள்ள அழுக்குகளையும் உயிர்ற்ற அணுக்களையும் நீக்கி சருமத்தைத் துலக்குகிறது. சுரக்கும் சரும திரவங்களின் சுழற்சியை ஒப்படைக்கிறது. உங்கள் சருமத்திற்கு இயற்கையான, கட்டுக்கோப்பான பொலிவைத் தருகிறது.

இவையெல்லாவற்றின் பலன் — புத்துணர்வு கொண்ட, களங்கமற்ற ஆரோக்கியமான சருமம். ஆகவே உங்கள் தினப் பராமரிப்பிற்குத் தேவை — கேடில் நேச்சுரல் கிளென்சர்.

ஏனெனில், இப்பொழுது நீங்கள் சரும பராமரிப்பின் உள்ளர்த்தத்தை நன்கு புரிந்து கொண்டு விட்டீர்கள்.

புதிய

கேடில்

நியூடான்

நேச்சுரல் கிளென்சர்



ஆரோக்கியமான மாசற்ற மேனியெழில் பெற இயற்கையான வழி.

Mudra A/CL 4762 Tam/R

எங்க ஸ்கூலுக்கு டொனேஷனா? மூச்!

பள்ளிகளில் டொனேஷன் இன்று விஷம் போல உயர யார் காரணம்? என்று கேட்ட போது:

திருமதி மாலதி பணிகர் (ஷ்ரைன் வேளாங்கண்ணி மேல்நிலைப் பள்ளி — நிர்வாகி):

''பள்ளிகளில் நன்கொடை பெருக பள்ளி நடத்துபவர்கள்தான் முக்கிய காரணம். எங்கள் பள்ளி சாதாரணமாகச் சிறிய அளவில் இடம் வாடகைக்கு எடுத்துக் குடிசை போட்டுத்தான் ஆரம்பிக்கப்பட்டது. நன்கொடை எந்த வடிவத்திலும் வாங்கக் கூடாது என்பதைச் சத்தியப்பிரமாணமாக எடுத்துக் கொண்டோம். பிள்ளைகள் பள்ளிக்குக் கட்டும் சம்பளப் பணத்தில் மிச்சப் படுத்தித்தான் இந்தப் பள்ளியின் கட்டிடம் உருவானது. எந்தப் பணக்காரர் தயவும் இதற்கு இல்லை. சேவை மனப்பான்மையிருக்குமிடத்தில் நன்கொடை என்ற பேச்சே எழ இடமில்லை. மத்திய அரசு பாடத்திட்டத்தைக் கடைப்பிடிக்கும் எங்கள் பள்ளிக்கு அரசு உதவி எதுவும் கிடையாது.

பள்ளி ஆரம்பித்தபோது எங்கள் ஆசிரியர்களுக்குச் சம்பளம் மிகவும் குறைவுதான். ஆனால் இன்று அவர்களே திருப்திப்படும் அளவு கைநிறையக் கொடுக்கிறோம். இன்றைய நிலையில் அந்தப் இந்தப் பள்ளியின் சொத்துக்களின் மதிப்பு ஏறக்குறைய இரண்டு கோடி — அத்தனையும் பிள்ளைகள் கட்டும்சம்பளப்பணத்தில்மிச்சப்படுத்தியதுதான். பள்ளியின் பிரின்சிபால் முதல் பெற்றோர் வரை யாருடைய தலையீடுமே அட்மிஷன் விஷயத்தில் மட்டுமில்லாமல் 'தேர்வு' செய்வதிலும் கூடக் கிடையாது. நாங்களேதான் பெற்றோரிடம் நேரடியாகப் பேசுகிறோம். எங்கள் பள்ளிக்குச் சென்னையிலேயே சில கிளைகள் இருப்பதுடன் அபுதாபியிலும் ஒரு கிளை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறோம். பள்ளி நடத்துவோர் மனம் மாறினால் நிச்சயம் இந்தப் பிரச்னைக்கு முடிவு ஏற்படும்.

திருமதி ராஜலட்சுமி பார்த்தசாரதி (பத்மா சேஷாத்திரி சீனியர் செகண்டரி பள்ளி):

அரசு, தனியார் பள்ளிகள் திறப்பதற்கு



● மாலதி



● ராஜலட்சுமி



• முத்து சுப்ரமணியன்

ஒப்புதல் அளித்துள்ளது. ஆனால் ஆரம்பிக்கத் தேவையான முக்கிய உபகரணங்கள் (பணிபுரிவோரின் ஊதியம் உட்பட) வாங்கத் தேவையான பணத்திற்கு எங்கே போவது? நன்கொடைகளினால்தான் அவைகளை ஏற்பாடு செய்து கொள்ள வேண்டிய நிலை. அந்தக் காலத்தில் அரசர்களும், பின் வள்ளல்களும், ஜமீன்தார் போன்றவர்களும் அளித்த நிதியுதவியில் பள்ளிகள் பல கட்டப்பட்டன. நன்கொடை என்று வாங்காமல் பள்ளிக் கட்டணத் தொகையிலேயே கட்டிட நிதி என்றோ, பள்ளி வளர்ச்சி நிதி என்றோ வேண்டிய தொகையைச் சேர்த்து விட்டால், இந்தத் தொல்லையே வராது. நடுவர்கள், புரோக்கர்கள், சீட் வாங்கித் தருகிறேன் என்று லஞ்சம் வாங்கிப் பள்ளிகளின் பேரைக் கெடுப்பதையும் தவிர்க்கலாம்.

நல்ல தரம் க்ருதி, வியாபார நோக்கமில்லாமல் ஆரம்பிக்கப்படும் பள்ளிகள் வரவேற்கப்பட வேண்டியவை. தரமில்லாமல் பணத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட பள்ளிகள் தொடர்ந்து நடப்பது கடினம். ஒரு வகுப்பில் எழுபது குழந்தைகள் என்னும் போது எப்படித் தனிக் கவனம் செலுத்த முடியும்? நல்ல பள்ளி நல்ல தரம் நாடும் போது அப்பள்ளியும் வளர, நாமும் கொடுக்கத்தானே வேண்டும்? எங்கள் பள்ளி வாலண்டரியாகக் கொடுக்கும் நன்கொடையைக் கூட வாங்குவதில்லை.

திரு ஆர். முத்துசுப்ரமணியன் (வானொலியில் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் — இரண்டு குழந்தைகளின் தந்தை):

பள்ளிகள் நன்கொடை வாங்க முக்கிய காரணம் பெற்றோர்கள்தான். 'நன்கொடை கொடுத்தால்தான் நல்ல பள்ளியில் பிள்ளைகளுக்கு இடம்' என்ற இன்றைய நிலைக்குப் பெற்றோர்கள்தான் பொறுப்பேற்க வேண்டும். தங்கள் பிள்ளைகளுக்காக — அவர்கள் படிப்பதற்காக எவ்வளவு செலவழிக்கவும் — கடன்படவும் தயார். அரசும் இதற்கு எந்தவிதக் கட்டுப்பாடும் போடுவது கிடையாது. தேர்வு எழுதச் செய்து தேர்ந்தெடுத்து இடமளிக்கும் பள்ளிகளிலும் — தேறாத தம் பிள்ளைகளைச் சேர்த்து விடத் துடிக்கும் பெற்றோர்கள்தான் டொனேஷன் விஷம் போல உயரக் காரணம்.

எந்த வடிவத்திலும் நன்கொடையே வாங்கக் கூடாது என்பதைச் சட்டபூர்வமாக்க வேண்டும். இல்லையெனில் கல்வி என்பதே வியாபாரமாகிவிடும். பள்ளி ஒன்று ஆரம்பிக்கும் போதே படிக்கும் சூழ்நிலை, கழிப்பறைகள், விளையாடுமிடங்கள் போன்ற தேவையான எல்லா வசதிகளும் இருக்கின்றதா என்பதை அரசு கவனிப்பதுடன் நன்கொடை வாங்கக் கூடாது என்பதையும் சொல்ல வேண்டும். ஒரு தொழில் நிறுவனம் ஆரம்பிக்கும் முன்பு எத்தனை முன்னேற்பாடுகளை அரசு கவனிக்கிறதோ அத்தனையும் பள்ளி விஷயத்திலும் கவனிக்கப்பட வேண்டும்.

திருமதி கிருஷ்ணவேணி திருப்பதி (குடும்பத் தலைவி — நான்கு குழந்தைகளின் தாய்):

நல்ல வசதியுள்ளவர்கள் தாராளமாக மனமுவந்து எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கலாம். ஆனால் நம்மைப் போன்ற நடுத்தர வர்க்கத்தினரிடமும் அதே போன்ற அளவில் எதிர்பார்ப்பதுடன் — நம்மால் அவ்வளவு முடியாது என்னும் போது சில பள்ளிகளில் நம்மை ஒதுக்கும் நிலை வரும்போது மனம் கஷ்டப்படுகிறது. நல்ல பள்ளிகளில் நம் பிள்ளைகளுக்கு இடம் கிடைக்கவில்லையே என்ற நிலைமாற — ஓரளவு நம் வசதிக்குத் தகுந்தபடி நன்கொடை வாங்கினால் நன்றாக இருக்கும்.

நல்ல தரமுள்ள நிறுவனம் வளர நம்மாலியன்ற அளவு கொடுப்பதில் நமக்கும் திருப்திதான். கல்வி என்றுமே வியாபாரமாகாமல் இருந்தால்தான் கல்வியின் தரம் உயரும்.

— வைதேகி தேசிகன்.

பஜ்ஜி செய்வதற்காக நறுக்கி வைத்திருக்கும் வாழைக்காய், உருளைக் கிழங்கு வில்லைகளில் மிளகாய்ப் பொடி, உப்பு இரண்டையும் சேர்த்து கலந்து அரை மணி ஊறித்து இவ் வில்லைகளை பஜ்ஜி மாவில் தோய்த்து பஜ்ஜி செய்ய, காரமாய், சுவையாய் இருப்பதோடு உள்ளிருக்கும் காயும் உப்பும், காரமுமாக நன்றாக இருக்கும்.

— ரமா சந்திரசேகர்.




மேஷ ராசி:

அசுவினி; பரணி, கிருத்திகை 1 — ஆம் பாதம்.

தனலாபமும், மகிழ்ச்சியும், சுகமும் ஏற்படக்கூடிய காலகட்டமானாலும் முதல் மூன்று நாட்களில் கால ஸர்ப்பயோகம் ஏற்பட இருப்பதால் சிற்சில விஷயங்களில் மன அமைதி கெடும். கொடுக்கல், வாங்கலில் சற்று அபவாதமும் தாழ்மையான நிலையும் ஏற்படலாம். அதனால் ஏற்படும் அவமானம் மனத்தை வருத்தும். அதீதமான கோபத்தை அடக்கிக் கொள்ள வேண்டியது தான் முறை. 8ந் தேதி முதல் 10ந் தேதி முடிய பல தொல்லைகள் ஏற்படலாம். அது பணிபுரியும் இடத்திலும் ஏற்படலாம். அல்லது தாம்பத்திய வாழ்விலும் கூட இருக்கலாம். மாதத்தின் கடைசி வாரத்தில் இருக்கும். குருவைத் தவிர மற்றவர்கள் மனக் குழப்பத்தைத் தரும் நிலையில்தான் சஞ்சரிக்கிறார்கள். அத்துடன் ராகு கேதுக்கள் தங்களுக்குள் அடங்கிய மற்ற கிரகங்களைக் கொண்டு மாதத்தின் பிற்பகுதியில் எள்ளளவும் நன்மையையோ, மன அமைதியையோ, சுமுகமான தாம்பத்திய உறவையோ உண்டாக்க மாட்டார்கள். பணிபுரியச் செல்லும் பெண்கள் ஸகல விதத்திலும் எச்சரிக்கையுடன் இருப்பது நலம். சுக்கிரனை ஆட்சி, உச்சமாகக் கொண்டு சுக்கிர திசை நடப்பவர்களுக்கு மட்டுமே நல்ல பலன் கூடுதலாக நடக்கலாம். கலைஞர்களும், கட்டிடப் பணியாளர்களும் சற்று நன்முறையில் பாராட்டப்படுவார்கள்.

மிதுன ராசி:

மிருகசீரிஷம் 3, 4 — ஆம் பாதங்கள்,



மீண்டும் கால ஸ்ர்ப்ப யோகம் ஏற்படுவதால் ராகு கேதுவுக்கும் ப்ரிதி செய்வதால் நன்மை ஏற்படலாம். நன்மை நான்கு மடங்கு எனில், பொருளாதாரச் சரிவும், மனக்குழப்பமும் 10 மடங்காக இருக்கும். நல்லதொரு மாதம் எனக் கூற முடியவில்லை. ஆட்சி, உச்சம் பெற்ற அங்காரகனின் தசை நடப்பவர்களுக்கு மட்டுமே நல்ல காலகட்டம் ஆரம்பம்.

ரிஷப ராசி:

கிருத்திகை 2, 3, 4 — ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 — ஆம் பாதங்கள்.

மாதத்தின் முற்பகுதியில் சிறப்பான சூழ்நிலை உலவும். வேலை பளுவு குறையலாம். பதவி உயர்வும் கூட ஏற்படலாம். ஆனாலும் மன அமைதி குறைவாகவே

திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 — ஆம் பாதங்கள்.

நற்பலன்கள் அதிகமாக நடக்க வேண்டிய காலகட்டம். எனினும் சிற்சில இடையூறுகளும் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. மாதத்தின் பிற்பகுதி ஏற்றமுடையதாக இருக்கும். வெளிநாட்டுப் பிரயாணம் ஏற்படலாம். மாணவ மாணவிகளுக்கு தேர்வில் அது எத்தகையத் தேர்வானாலும், மாதத்தின் இறுதியில் வெற்றி வாய்ப்பு அதிகம் உள்ளது. கலைஞர்களும் கவிஞர்களும் பாராட்டப்படுவார்கள். சமூக சேவகிகளுக்குப் பாராட்டும், புகழும் சேர்க்கக்கூடிய காலம். 9, 10, 11 தேதிகளில் வயிற்றுக் கோளாறு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

கடக ராசி:

புனர்பூசம் 4 — ஆம் பாதம், பூசம்,

ஆபரிஸ்யம்.

3ம் வாரம் முதல் மாதம் முடிய சற்று கெடுபிடியாகவே இருக்கும். எனினும் பொருளாதார விஷயத்தில் நல்ல சூழ் நிலையே காணப்படுகிறது. கலைஞர்களுக்கும், கட்டிடம் கட்டும் பொறியாளர்களுக்கும் நல்ல லாபம் கிடைக்கும். மாதத்தின் பிற்பகுதியில் சுக்கிரன் எதிர்பாராத தன லாபத்தைத் தொழில் மூலமாகவோ உத்தியோகத் துறையிலோ கலைத் துறையிலோ அருளுவார். மாதத்தின் முதல் வாரத்தில் மகிழ்ச்சியும் மனநிறைவும் இருக்கும். நீண்ட யாத்திரையோ அல்லது வெளிநாட்டுப் பிரயாணமோ ஒரு சிலருக்கு ஏற்படும்.

சிம்ம ராசி:

மகம், பூரம், உத்திரம் 1 — ஆம் பாதம்.

மாதத்தின் பிற்பகுதி சற்று டென்ஷனுடன் இருக்கும். கண் மருத்துவர்கள் மற்றும் எலும்பு பல் இது சம்பந்தமான மருத்துவர்கள் கூடுதலான லாபத்தைப் பெறுவார்கள். அது போலவே குருவின் அருளாலும், சூரிய புதன் சேர்க்கையாலும் வழக்கறிஞர்களும், புலனாய்வுத் துறையினரும், சுங்கத் துறையினரும் கூடுதலான நன்மையைப் பெறுவார்கள். திரைப்பட நடிகர்களுக்கு, அதிர்ஷ்டம் உதயமாகிறது. அலுவலகத்தில் பணிபுரிபவர்களும், மின்னணுத் துறையினரும் பதவி உயர்வு பெறுவார்கள். 16, 17, 18 தேதிகளில் சற்று எதிலும் ஒதுங்கியிருப்பது நல்லது. வம்பு வழக்காடல்களுக்கு வாய்ப்பு உண்டு.


கன்னி ராசி:

உத்திரம் 2, 3, 4 — ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2, — ஆம் பாதங்கள்.

சிறப்பான மாதமாக இருக்கும். தேர்வு எழுதியுள்ள மாணவ மாணவிகள் பெரும்பாலும் நல்ல மதிப்பெண்களுடன் வெற்றி பெற வாய்ப்பு உண்டு. திரைப்பட நடிகர்கள் தொலைக்காட்சி, வானொலியில் பங்கேற்பவர்களுக்கு ராசிநாதனின் அருள் அமோகமாகவே இருக்கிறது. இதுவரை தோல்வி கண்டவர்கள் கட்டாயம் இந்த மாதத்தில் வெற்றியைப் பெறுவார்கள். குறிப்பாக அஸ்த நட்சத்திரக்காரர்கள் அதிகமாக லாபத்தைப் பெறுவார்கள்.

துலா ராசி:

சித்திரை 3, 4 — ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 — ஆம் பாதங்கள்.



பருப்பு உருண்டைக் குழம்பு செய்யும் போது, சில சமயம் உருண்டை, கரைந்து விடும். இதைத் தவிர்க்க, அரைத்தவுடன், சிறிது எண்ணெய் விட்டு, வாணலியில் 5 நிமிடம் வதக்கி, பின் 4 ஸ்பூன் அரிசி மாவு கலந்து உருட்டி, நிறைய புளித் தண்ணீர் விட்டு, தளதளவென்று கொதிக்கும் போது, ஒவ்வொன்றாகப் போட்டால், கரையாது. (ஒரு பங்கு குழம்பு அளவு என்றால், மூன்று பங்கு தண்ணீராக இருக்க வேண்டும். வெந்தவுடன் உருண்டை மேலே மிதக்கும். குழம்பும் குறுகி விடும்.)

— பார்வதி.


மாதத்தின் முற்பகுதியில் இதுவரை தடைபட்டு வந்த சுபநிகழ்ச்சிகள் நன்கு நிறைவேறி விடும். பதவிகளுக்காக பேட்டிகளுக்குச் சென்று அனுகூலமான பலனை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு மனமகிழ்வு அளிக்கும்படியான செய்திகள் வரும். இரசாயனத்துறையில் உள்ளவர்களுக்கும், விவசாயிகளுக்கும், வாகனங்களை வாடகைக்கு விடுபவர்களுக்கும் கூடுதலான லாபம் கிடைக்கும். இந்த ராசிக்காரர் சிலருக்கு இதுவரை ஏமாற்றத்தைக் கொடுத்து வந்த புத்திரப்பிராப்தி நல்ல முறையில் லாபமாக அமையும். ஆயினும், பணம் புழங்குமிடமாகிய வங்கிகள் கருவூலங்கள் ஆகியவற்றில் பணிபுரிபவர்கள் சற்று எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

விருச்சிக ராசி:

விசாகம் 4 — ஆம் பாதம், அனுஷம், கேட்டை.

இந்த ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் பூராவும் சற்று மந்தமாகவே இருக்கும். எதிலும் ஒரு தேக்கம், அல்லது எதிர்ப்பு என ஏமாற்றம் மிகுந்து காணப்படும். ஆனால் இந்த ராசிக் கன்னிப் பெண்களுக்கு மாதத்தின் பிற்பகுதியில் திருமணம் நிச்சயமாக வாய்ப்பு உள்ளது. எரிபொருள் துறையினர், செங்கல், உற்பத்தியாளர்கள்,

ஒரு போஸ்ட் கார்டு போதும்!...



ஒரு போஸ்ட் கார்டு உங்களது வாழ்க்கையில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தப் போகிறது என்று நாங்கள் சொன்னால் உங்களுக்கு வியப்பாகத் தோன்றலாம். ஆனால் உண்மை அது தான்!.

★ ஆங்கிலத்தில் பேசினால் ஏதாவது தவறாகப் பேசி விடுவோமோ என்ற தயக்கமின்றி சரளமாகப் பேச...

★ இலக்கணப் பிழை ஏற்பட்டுவிடுமோ என்ற பயமின்றி ஆங்கிலத்தில் கடிதங்கள், கட்டுரைகள் எழுதும் ஆற்றல் பெற...

தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்ற தனிப்புகழ் பெற்ற விவேகானந்தா கல்வி நிலையத்தினர் மிகச் சிறந்த முறையில் பயிற்சியளித்து வருகிறார்கள்.

வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் தமிழில் தபால் மூலம் நீங்களும் இப்பயிற்சியை மேற்கொள்ளலாம்.

"நேர்முகப் பயிற்சியும் உண்டு"

மேலும் தகவல் அறிய ஒரு போஸ்ட் கார்டில் உங்களது விருப்பத்தை எழுதி எங்களுக்கு அனுப்பினால் போதும்!

பயிற்சி பற்றிய தகவல் புத்தகத்தையும், விண்ணப்ப மனுவையும் உடனே உங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.

உங்களது முன்னேற்றத்தின் முதல் முயற்சி இன்றே துவங்கட்டும்!

நீங்கள் கடிதம் எழுத வேண்டிய முகவரி:

விவேகானந்தா கல்வி நிலையம்

தபால் பெட்டி எண்: 4986, 9, மேட்லி ரோடு, தி.நகர், சென்னை-17.

சுண்ணாம்பு தயாரிப்பாளர்கள் ஆகியோர் மாதத்தின் பிற்பகுதியில் நல்லதொரு முன்னேற்றம் காண்பர். சகோதரர்களிடையே, இதுவரை இருந்த பாகப்பிரிவினை சம்பந்தமான வழக்குகள் ஒரு முடிவுக்கு வந்து, அதனால் ஓரளவுக்கு ஆதாயமும் கிடைக்கக் கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. எனவே இந்த ராசிக்காரர்கள் இந்த காலகட்டத்தை நன்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு உண்டு. வெளிநாட்டு செய்தி ஒன்று மாதத்தின் கடைசி வாரத்தில் வரலாம்.

தனுசு ராசி:

மூலம், பூராடம், உத்திராடம் 1 — ஆம் பாதம்.

இந்த இராசிக்காரர்களில் சனீஸ்வரனின் முதல் பாரியாயமான மங்கு சனியில் மாட்டிக் கொண்டுள்ள மாணவ மாணவிகள் சற்று தோல்வியைத் தழுவ நேரிடலாம். ஆனால் 2ம் பாரியாயத்தில் உள்ள மாணவ மாணவிகள் வெற்றியை அனுபவிப்பார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் பத்தாம் வகுப்பிலும், 12ம் வகுப்பிலும் படித்துத் தேர்வு எழுதியுள்ள மாணவ மாணவிகள் சற்று சஞ்சலமடைய வேண்டியிருக்கலாம். 35 வயதுக்கு மேற்பட்டவர்கள், அவர்கள் எத்துறையிலிருந்தாலும் ஓரளவுக்கு வெற்றியை அடைவார்கள். அவர்களுக்கு சுபவிரயமும் ஏற்படும். ஆனால் முதுமையை அடைந்தவர்கள் சற்று உடல்நலக் குறைவில் அவதியுற வேண்டியிருக்கும். சனீஸ்வர ஆராதனை, திருநள்ளாற்றுப் பயணம் என ஏதேனும் ஒன்றை மேற்கொள்ள வேண்டி வரும்.

மகர ராசி:

உத்திராடம் 2, 3, 4 — ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 — ஆம் பாதங்கள்.

எதிர்பார்த்த எந்த இடத்திலும் மந்தமான சூழ்நிலை, அல்லது ஒரு தேக்க நிலை என ஏற்பட்டு மனத்தில் ஒரு குழப்பச் சூழ்நிலை உருவாகும். உத்தியோகத் துறையில் உள்ளவர்களுக்கு அளவுக்கு மீறிய கெடுபிடிகள் ஏற்பட்டு அமைதி குறையும். அல்லது வேலையில் குறைகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படத்தக்க சூழ்நிலை உருவாகலாம். எதிலும் எச்சரிக்கை, எப்போதும் உஷார் நிலை என இருக்க வேண்டியிருக்கும். யாரையும் நம்ப முடியாத சூழ்நிலை உருவாகும். எனவே சற்று மனக் குழப்பத்துடனும், வருத்தத்துடனும் இருக்க வேண்டிய மாதமாகும். இது எல்லாத் துறையினருக்கும் பொருந்தும். நடிப்புத் துறையில் உள்ள கலைஞர்கள் தாங்கள் யாரை அதிகம் நம்பியிருக்கிறார்களோ அவர்களாலேயே கூட ஏமாற்றப்படலாம்.

கும்ப ராசி:

அவிட்டம் 3, 4 — ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 — ஆம் பாதங்கள்.


ஓரளவுக்கு நன்மையை அனுபவிக்க வேண்டிய மாதம் என்றாலும் விரயத்திற்கு அதிக இடம் உள்ளது. தொழிலில் மந்த நிலை உருவாகலாம். செய்து வந்த தொழிலில், குறிப்பாக கட்டிடம் சம்பந்தமான கட்டுமானப் பொருட்களைத் தயாரிப்பவர்கள் அவர்கள் செங்கல் தயாரிப்பாளர்களாக இருப்பினும், அல்லது மொஸைக், ஸெராமிக், ஸ்பார்ட்டெக் எனும் தரைக்குத் தளம் போடும் பொருட்களைத் தயாரிப்பவர்களானாலும் சற்று தேக்கத்தையும் நஷ்டத்தையும் எதிர்நோக்க வேண்டியிருக்கும். இந்த இராசிப் பெண்களில் சனியின் 2ம் பாரியாயத்தில் உள்ளவர்கள் சுபவிரயத்தைச் செய்ய வேண்டியிருக்கும். அது வீடு கட்டுவதாகவும் இருக்கலாம். அல்லது திருமணமாகவும் இருக்கலாம்.

மீன ராசி:

பூரட்டாதி 4 — ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.

நல்லதொரு மாதமாக இருக்கும். எதிர்பாராத தனலாபம் ஏற்படலாம். தேர்வில் வெற்றியுண்டு. தொழிலில் முன்னேற்றம் காணப்படும். அலுவலகத்தில் பதவி உயர்வு கிடைக்கும், அல்லது அதற்கான சிபாரிசுகளை மேலதிகாரிகள் செய்வார்கள். திருமணமாகாத கன்னியர்கள், தங்களுக்குரிய கணவனைக் கைப்பிடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகி விட்டது. எனவே பெற்றோர்கள் பொருளாதாரத்தைத் தயார் செய்து கொள்ள வேண்டிய நிலை வந்துள்ளது. திரைப்பட நடிகைகள் இதுவரை

> போளி செய்வதற்காகப் பிசைந்து வைத்துள்ள மைதா மாவில் மஞ்சள் பொடி போட்டு பிசைவதற்குப் பதில்... கேசரிப் பவுடர் போட்டுப் பிசைந்தால் பார்ப்பதற்கும், சுவைப்பதற்கும் நன்றாய் இருக்கும்.
>
> — உமா சந்திரசேகர்.





கதக தங்கப் பட்டுடன்
ழுவது தங்கப் பட்டுடல்

இப்போது, தூய தேங்காயெண்ணெய் வளம் செறிந்து வரும் புதிய ரெக்ஸோனா: உங்கள் தங்கப் பட்டுமென்மை, பட்டொளி மெருகு, மோகனப் புதுமணம், புது வடிவம், உமதாசை தும் அனைத்து குண சோப் புது ரெக்ஸோனா. இப்போது,150 கிராம், பெரிய ஸைசிலும் கூட.

புதிய ரெக்ஸோனா

பொன்னான மென்பட்டு மேனி மெருகுக்கே



தூய தேங்காயெண்ணெய் செறிந்தது.


காணாத வெற்றியைக் காண்பார்கள். அதனால் புதுப்படங்கள் ஒப்பந்தமாகலாம். வெளிநாட்டுப் பயணம் கைகூடி வரும். அதனால் ஆதாயமும் உண்டு.


அருளையும் பொருளையும் அள்ளித் தருபவர் யார்?

ஜாதகங்களில் உள்ள கிரக அமைப்பினைக் கொண்டு அந்த ஜாதகர்களுக்குக் கிடைக்கக்கூடிய யோகங்கள் யாவை என ஜோதிடர்கள் கூறுவது மரபு. இத்தகைய யோகங்களை உள்ளங்கையில் உள்ள மேடுகள், ரேகைகள் இவைகளில் அமைப்பைக் கொண்டு கூறலாம். உதாரணமாக பஞ்ச மகாபுருஷ யோகங்கள் எனும் ஐந்து வகை யோகங்களில் பத்ர யோகம் என்பது ஒரு முக்கியமான யோகமாகும். பஞ்ச யோகங்களில் முதன்மையான இந்த யோகத்திற்கு புதனே மூலக் கிரகமாக அமைகிறார். புதன் ஆட்சியோ, அல்லது உச்சமோ பெற்று சந்திர, சூரிய லக்னாதிகளுக்குக் கேந்திரத்தில் நிற்க வேண்டும். அவ்வாறு இருந்தால் அந்த ஜாதகருக்குத் தனதான்யாதி லாபங்கள், வித்தை, கீர்த்தி, தீர்க்காயுள் ஆரோக்கியம் ஆகியவை புதன் அருள் பெற்ற பத்ர யோகத்தால் கிடைக்கும். உள்ளங்கையில் சிறந்த புதன் மேடும் (ஏ—பி) அதன் மேல் செங்குத்தாக மூன்று ரேகைகளும் அமைந்து, சந்திரமேட்டில் குறுக்குக் கோடுகள் இல்லாமல் நேராக அமைந்த ரேகைகளும் (எஸ்—டி) இருந்தால் அப்படிப்பட்டவர்களுக்கு பத்ர யோகம் ஏற்படும்.


பத்ரயோகமுடையவர்களுக்கு ஆயுள் ரேகை நன்கு வளைந்தும் (எம்—என்) புத்தி ரேகையுடன் (பி—சி) இணைந்தும் காணப்படும். அத்துடன் சூரிய மேட்டில் நேரான ரேகை (எக்ஸ்—ஒய்) ஒன்று இருதய ரேகையைத் தொட்டுக் கொண்டும் நிற்கும். இப்படிப்பட்ட அமைப்பைக் கொண்டுள்ள பெண்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் நடக்கும். அவர்களது கணவன்மார்கள், அரசுப் பணியில் உயர்ந்த இடத்திலும், தனியார்த் துறையாக இருப்பின் அந் நிர்வாகத்தின் இயக்குநர்களாகவும் பணி செய்து பெரும் புகழும் சம்பாதித்திருப்பார்கள். பெண்களில் பலர் ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். போன்ற தேர்வுகளில் வெற்றி பெற்று மாவட்ட ஆட்சியாளர்களாகவும் அயல்நாட்டுத் தூதராலயங்களில் உயர்ந்த பதவியும் பெற்று நாடு புகழும் வண்ணம் வாழ்வாங்கு வாழ்வதையும் நாம் இன்றும் காணலாம். பிரபல பத்திரிகைகளில் அவர்களது பேட்டிகளும், வாழ்க்கை வரலாறும் பிரசுரிக்கப்படுவதை நாம் பார்க்கிறோம். இதற்கெல்லாம் காரணம் அவர்கள் பஞ்ச மகாபுருஷ யோகங்களில் ஏதேனும் ஒன்றைப் பெற்றவர்களாக இருப்பார்கள். பத்ரயோகம், ருசக யோகம், கசயோகம், ஹம்ச யோகம், மாலவ்ய யோகம் ஆகிய இந்த ஐந்து யோகங்களும், ஜோதிட நூலறிஞர்களால் கணிக்கப்பட்டுள்ள 132 யோகங்களில் தலையாய இடத்தைப் பெற்றுள்ள யோகங்களானதால் இவற்றை பஞ்ச மகாபுருஷ யோகங்கள் எனக் கூறியுள்ளனர். கை ரேகைகளின் அமைப்பில் இந்த யோகங்களை எவ்வாறு கண்டறிவது என்பதற்கு முன்னோடியாக பத்ரயோகத்தின் அமைப்பு படத்தில் காட்டப்பட்டுள்ளது. மற்ற நான்கு யோகங்களுக்கும் மூலகாரணங்களாக முறையே அங்காரகன், சனி, குரு, சுக்கிரன் ஆகிய கிரகங்கள் எவ்வாறு காரணமாகிறார்கள் என்பதைப் படிப்படியாக அறியலாம். குலத்திற்கேற்ற குணவதியாக ஒரு பெண் அமைய இத்தகைய யோகங்களைச் சேர்த்தோ, தனித்தனியாகவோ பெற்றிருக்க வேண்டியதாகும். குறிப்பாக இம்மை வாழ்வில் இன்னலின்றி இருக்கத் தேவையான அருளையும் பொருளையும் அள்ளித் தருகின்ற தன்மையைப் பெற்றவர் புதன் பகவானே ஆவார். எனவே அப் புதனின் அதி தேவதையான மகாவிஷ்ணுவை, விஷ்ணு சகஸ்ர நாமத்தைப் பாராயணம் செய்வதன் மூலம் ஆராதித்தால் முழுப் பயனும் பெறலாம்.

— ஜெயலட்சுமி கிருஷ்ணன்.




அடுத்த முறைக் குளியலில் கொத்துமல்லியை
கண்டிப்பா சேர்த்திடுங்க !
கொத்துமல்லி . உங்கள் உடலுக்குக் குளுமையும் புத்துணர்ச்சியும் தரும் பாரம்பரிய மூலிகை. நன்னாரி, வெற்றிவேர் போன்று கோடையின் சூட்டைத் தணித்து, உடலைக் குளுமையுடன் வைக்க, இயற்கை வழங்கும் வரப்பிரசாதம்.
இந்த சிறப்புகள் அனைத்துமே தாங்கி வருகிறது, மெடிமிக்ஸ் ஆயுர்வேத சோப்.
அது வியர்வை மற்றும் துர்நாற்றத்தை விரட்டுகிறது; வேர்க்குருவைத் தடுக்கிறது.
இந்தியா முழுவதிலுமிருந்து சேகரிக்கப்பட்ட 18 வெவ்வேறு மூலிகைகளைத் தூய்மையான தேங்காய் எண்ணெயில் கலந்து தயாரிக்கப்படுவதால், மெடிமிக்ஸ் ஆயுர்வேத சோப், உங்கள் சருமத்தை சுத்திகரித்து, பாதுகாத்து பராமரிக்கிறது.
இதுவரை கண்டிராத அளவுக்கு உங்கள் சருமத்திற்குக் கோடைகால சுகத்தை அளியுங்கள்.
மெடிமிக்ஸ் ஆயுர்வேத சோப்
MEDIMIX
AYURVEDIC TOILET SOAP
கோடையில் குளுமை தரும் சோப்.
TAKE WING-90

"என் மகளுக்கு நான் கேர்ஃப்ரீ தேர்ந்தெடுத்தது ஏன்."



நினைவுக்கு வருகிறது— அந்த நாளில் நான் என் மகளின் வயசில் இருந்தபோது வீட்டுத் தயாரிப்புக் கச்சைகள்தான் எங்கள் காலத்து "சுகாதாரம்". சமயங்களில் சங்கடமாகத்தான் இருக்கும்.

ஆனால், காலம் மாறிப்போச்சே

இன்றோ என் மகள் ஓடியாடித் துடியான வாழ்க்கை நடத்துகிறாள். அதனால்தான் நான் அவளுக்கு கேர்ஃப்ரீ ஸேனிட்டரி நேப்கின்களைத் தேர்ந்தெடுத்தேன்.



அணியத் தயார்நிலையில் உள்ள அவை சௌகரியமானவை, சுகாதாரப் பாங்கானவை.

கேர்ஃப்ரீ முழுமொத்தப் பாதுகாப்புத் தருகிறது என் மகளுக்கு.

கேர்ஃப்ரீ— சிற்றடக்கமானது. ஒப்பற்ற 'ஒண்டர்ராப்' வெளிப்புற உறையும், 3-வழி பிளாஸ்டிக்-ஷீல்டு நீலக் கவசமும் உடையது.

ஆகவே, கசிவு உறிஞ்சிக்கொள்வதில் மேம்பட்டது. பாதுகாப்பதில் மேம்பட்டது. கறைபடியும் சங்கடத்திற்கு வழியே இல்லை. கேர்ஃப்ரீ என் மகளுக்கு சுகவசதியோடு காப்புறுதியையும் அளிக்கிறது. உபயோகித்துப் பார்த்து நம்பிக்கை பெற்ற கேர்ஃப்ரீ பாதுகாப்பை என் செல்விக்குக் கொடுக்க முடிகிறதே என மகிழ்கிறேன்.

மாறிவரும் இக்காலத்திற்கான கேர்ஃப்ரீ வகைகள்



ரெகுலர்	டியோடரன்ட்	எக்ஸ்ட்ரா லார்ஜ்
சகஜமான பாதுகாப்புக்கு. பத்திர உணர்வுக்கு	சகஜமான பாதுகாப்புடனே மணம் கமழும் புத்துணர்ச்சிக்கு	பலத்த கசிவுகளின் போது கூடுதல் பாதுகாப்புக்கு. இரவோடிரவான உபயோகத்திற்கு

உங்களுடைய மகளிடம் எப்படி கூறுவது? என்ற மாதவிடாய் பற்றிய இலவசத் துண்டுப் புத்தகம் ... எழுதுக: Personal Products Division, Johnson & Johnson Ltd., 30, Forjett Street, Bombay-400 036.

கேர்ஃப்ரீ*

சுகம் மற்றும் பாதுகாப்பு உங்களுக்கு மிகவும் தேவைப்படும் அந்த நாட்களுக்கு.

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்

* கேர்ஃப்ரீ — ஜான்ஸன் & ஜான்ஸன் யு.எஸ்.ஏ. டிரேடு மார்க் ஆகும்

O&M/5780/TAM

எலும்புத் தேய்வு நோய்!

நீங்கள் வயது நாற்பதை நெருங்கிக் கொண்டிருப்பவரா,எனில் அவசியம் நீங்கள் இந்தக் கட்டுரையைப் படிக்க வேண்டும் ஏனெனில் இது உங்களுக்காகவே. இந்த வயதில் என்னென்ன மாற்றம் உடலில் ஏற்படுகிறது, ஏன் ஏற்படுகிறது? அதன் விளைவுகள் என்ன என்பதைத் தெரிவிக்கின்றது. ஓரிரண்டு வருடங்களுக்கு முன் ஒரு பத்திரிகையில் நடுவயது மாது படிப்படியாக, அவரின் எலும்புகள் குறுகிக் கொண்டே போய், எழுந்திருக்கவும் முடியாமல் கையைக் கூட அசைக்கமுடியாமல் படுக்கையிலேயே இருப்பதை வெளியிட்டிருந்தனர்.

இதன் காரணம், வெகு வேகமாக எலும்பு இழப்பு ஏற்படுத்தும் **Osteoporosis** எனும் நோயாக இருக்கலாம். இந்த நோய் பெரும்பாலும் பெண்களை, அதுவும் மாத விடாய் நிற்கும் நிலையில் உள்ளவர்களையே தாக்குகின்றது. இது எந்த வித முன்னறிவிப்பும் தராமல் மௌனமாகத் தாக்கும் வியாதியாகும். இந்த வியாதி மனித உடம்பின் எலும்புகளைப் படிப்படியாக அதன் அளவினையும், வலிமையும் இழக்கச் செய்கிறது. இது வந்தவர்களின் உயரம் நாமறியாவண்ணம், 15 வருடங்களில் ஏறக்குறைய 5 செ. மீ. அளவில் குறையக் கூடும். இந்த எலும்புக் குறைவு மிகவும், சீரான முறையில் மிகக் குறைந்த அளவில் ஏற்படுவதால் எக்ஸ்ரேயின் கண்களிலிருந்து தப்பிவிடும்.



இந்த நோய் வந்தவர்களுக்கு முதலில் ஏற்படுவது, பெரும்பாலும் முதுகெலும்பு, இடுப்பு அல்லது மணிக்கட்டு. இதில் எதிலாவது எலும்பு முறிவு ஏற்படும். இதன் மூலம் எலும்புகள் மிகவும் மெலிதாகி, நாம் படுக்கையிலிருந்து எழ முயற்சிக்கும் போது, முதுகெலும்பே கூட முறிந்து போகக் கூடும். ஆண்களைக்காட்டிலும், பெண்களே 1:6 or 1:7 என்ற விகிதத்தில் தாக்கப்படுவதால் இது பெரும்பாலும் பெண்களின் வியாதி என்றே கருதப்படுகிறது. 35 வயதைக் கடந்த பெண்கள் எல்லோரும் ஒரு அளவிற்கு எலும்பு இழக்கின்றனர். சிலரின் விஷயத்தில், மாத விடாய் நிற்கும் சமயத்தில் இந்த இழப்பு பன் மடங்காகின்றது.

இந்த வியாதி, ஒரு வருடத்தில் 45 அல்லது 45 வயதைக் கடந்த 10 லட்சம் பேருக்கு, எலும்பு முறிவை ஏற்படுத்துகின்றது என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த முறிவு முதுகெலும்பில் ஏற்படும் போது உயரம் குறைவதோடு மாத்திரம் இல்லாமல், முதுகெலும்பு வளைந்து கூன் ட விழுந்து விடுகின்றது. சிலசமயம் முறிவு இடுப்பு எலும்பில் ஏற்படுமாயின், திடீரென்று அந்த ஆள் நிற்கமுடியாமல் விழுந்து விடவும் கூடும்.

இந்த வியாதியை நாம் அறிந்து கொள்ள வேண்டுமென்றால், நாம் நம் உடம்பில் எலும்புகள் எப்படி வளர்கின்றன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். நாம் எலும்பு என்பது உறுதியான, கல் போன்ற பொருள் என்று நினைக்கக் கூடும். ஆனால் அது உண்மையில், மாறிக் கொண்டே இருக்கின்ற, கால்ஷியம், பாஸ்பேட் போன்ற தாதுப் பொருள்களை உள்ளடக்கிய, எளிதில் ஜெலடீன் ஆக மாறக்கூடிய நார்களாலாகிய திசுக்களைக் கொண்ட புரோட்டின் அடங்கிய வார்ப்புக்கலம் (மோல்ட்) என்று கூறலாம்.

மைக்ரோஸ்கோப்பினால் மாத்திரம் காணக் கூடிய அளவில் நிலையாக, நாம் எலும்பு உடைந்து, இழந்து கொண்டே இருக்கின்றோம். ஆனால் அது உடனுடனேயே, நாம் சாப்பிடும் சத்துள்ள உணவுகளினால் ஈடு செய்யப்படுகின்றது. நாம் 35 வயதை நெருங்கும் போது நம் எலும்புகள் அடையக் கூடிய அதிக அளவு எடையைப் பெறுகின்றன. இதற்குப் பிறகு குறைய ஆரம்பிக்கின்றது.

பெண்களுக்கு மாத விடாய் நிற்கும் சமயத்திற்குப் பிறகு ஒவ்வொரு வருஷமும் 4% அளவில் எலும்பு எடையை இழக்கின்றனர். 70 வயது ஆகும் போது ஆண் இழக்கும் அளவும், பெண் இழக்கும் அளவும் ஒரே விகிதமாகின்றது.

OSTEOPOROSIS :

எலும்பு தன்னைப் புதுப்பித்துக் கொள்ள எலும்பின் நடுவில் சேமித்து வைக்கப்பட்டுள்ள கால்ஷியமும், மற்ற சத்துக்களும் அவசியமாகின்றது. நம் உடம்பிற்கு கால்ஷியம் மற்ற சில வேலைக்களுக்குக் கூட அவசியமாகின்றது. உதாரணமாக, நம் இருதயத்துடிப்பையும், மற்ற தசைகள் சுருங்கி விரிவதையும் கட்டுப்பாடுடன் வைப்பது நம் நரம்பு ஓட்டம். இதைச் சரியான அளவில் வைத்திருப்பதில், நம் உடம்பில் ஓடும் இரத்தத்தில் உள்ள கால்ஷியம் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. இந்த அளவு எப்போதும் ஒரு குறிப்பிட்ட அளவில் இருக்க வேண்டும். இந்தக் கால்ஷியம் அளவு குறையும் போது நம் உடம்பிலுள்ள மற்ற எலும்புகளிலிருந்து கால்ஷியம் இரத்தத்தினால் எடுத்துக் கொள்ளப் படுகின்றது. இதனால் நாளா வட்டத்தில், நம் எலும்புகள் மண்கலம் போல் ஓட்டைகள் உள்ளதாக ஸ்பான்ஞ் போலவும், வலிவிழந்து போகின்றது. இதுவே **Osteoporosis** என்பது. இந்த வியாதி உயரமாகவும், வெளுப்பாக இருப்பவர்களையும் அதிகம் தாக்குகின்றது என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். எனவே, குட்டையாகவும், கறுப்பாகவும் இருப்பவர்கள் திருப்திப்பட்டுக் கொள்ளலாம்.

ஒரு பெண் கர்ப்பம் தரிக்கும் போது அவளுடைய எலும்பின் எடை கூடுகின்றது. எனவே கருத்தரிக்காதவர்களுக்கு இந்த வியாதி வருவது, கர்ப்பம் தரித்தவர்களைக் காட்டிலும் அதிகமாகும் இந்த நோய்க்குக் காரணமாகும் மற்ற சிலக் காரணங்கள்:

1. வயதுக்கு வருவது தாமதித்தல் 2. மாதவிடாய் நிற்பது அல்லது ஆப்பரேஷன் மூலம், கருவகம் எடுக்கப்படுதல், 3. நீண்ட நாள் படுக்கையில் இருப்பது, 4. தைராய்டு சுரப்பி அதிகம் சுரத்தல், 5. பாரா தைராய்டு, மற்றும் அட்ரினல் சுர ப்பிகள், 6. கிட்னி (சிறு நீரக) வியாதிகள், 7. சில வகை மூட்டு வியாதிகள், சிலவகை கான்சர் வியாதிகள், ஆகியவை இந்த வியாதியை உண்டாக்கக் கூடும். சில சமயம் கார்டிசான் போன்ற மருந்துகள் கூட எலும்பு இழப்பிற்கு ஏதுவாகும். அடிக்கடி பேதி மருந்து உபயோகிப்பது, வாயுத் தொந்தரவிற்கு உபயோகிக்கும் அலுமினியம் **Antacid tablests,** அதிகம் மது சிகரெட் குடிப்பது ஆகியவையும் எலும்பு இழப்பிற்கு அடிகோலும்.

இந்த வியாதியைக் கண்டு பிடிப்பதற்கு வழிமுறைகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நோயை ஆரம்பத்திலேயே கண்டு பிடித்தால் எலும்பு முறிவு ஏற்படுவதைத் தடுக்கமுடியும் என்றாலும், இந்த வியாதியை முழுவதும் தடுத்து நிறுத்தவோ அல்லது அதன் தீவிரத் தன்மையைக் குறைப்பதோ முடியாது என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். நம் உடம்பில் வேறு புதிய எலும்பினைப் பொருத்தி, இந்த வியாதியை முறியடிக்கக்கூடிய சாத்தியக் கூறு ஏதும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றதா என்பது இன்னும் தெளிவாகவில்லை. ஆதலால்தான் இந்த வியாதி வருவதற்குமுன் எச்சரிக்கையுடன் இருந்தால் வியாதி வராமல் தடுக்கப்படலாம்.

ஆராய்ச்சியாளர்கள் கீழ்க்காணும் 3 வழிமுறைகளை **Osteoporosis** வராமல் தடுக்கக் கூடிய வகைகளாகக் கண்டுள்ளனர்.

1. உணவு, 2. தேகப்பயிற்சி, 3. **Ostrogen** சிகிச்சை.

1. உணவு: எல்லா சத்துப் பொருள்களும் அடங்கிய நல்லதொரு உணவு, நல்ல எலும்பு அமைய முக்கியமானதாகும். **Osteoporosis** வராமலிருக்க வேண்டுமானால், தேவையான கால்ஷியம் நம் உணவிலிருந்து நமக்குக் கிடைக்க வேண்டியது மிக அவசியம். ஆராய்ச்சியாளர்கள் தீர்மானமாக நினைப்பது என்னவென்றால், 35 வயதுக்குத் தேவையான அளவு கால்ஷியம் உள்ள உணவைச் சாப்பிட்டு வரும் பெண்கள், தங்களுடைய பிற்காலத்தில் **Osteoporosis** வியாதியால் தாக்கப்படுவது குறைவாக இருக்கும் என்பதாகும். நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹெல்த் (யு. எஸ்.) பரிந்துரைப்பது மாதவிலக்கு இருக்கும் பெண்களுக்கு ஒரு நாளுக்கு 1000 மி. கிராம் கால்ஷியம் அவசியம் என்பதாகும். இது கொழுப்புச் சத்துக் குறைவாக உள்ள 3 டம்ளர் பாலிலிருந்து கிடைக்கும் கால்ஷியத்தின் அளவாகும்.

மருந்துகள் மூலம் கால்ஷியம் எடுத்துக் கொள்வதைக் காட்டிலும் நாம் சாப்பிடும் உணவின் மூலம் நமக்குக் கால்ஷியம் கிடைப்பதே நல்லது என்று ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. நாம் நம் உணவில் மிக எளி



வருடம் முழுவதும் காய வைத்து சமையலுக்கு பயன்படுத்தும் வேப்பம் பூவை சித்திரையில் தான் அதிகம் பார்க்கலாம். சுத்தமாக பொறுக்கப்பட்ட பூக்களை நன்கு காய வைத்து உப்பு சேர்க்கப்பட்ட மோரில் நனைத்து மறுபடி காய வைத்து ஜாடியில் அள்ளி வைக்கும் போது ஓரிரு வற்றல் மிளகாயினை போட்டு மூடிவைத்தால் செக்கான் பூச்சி வராமல் பாதுகாக்கலாம்.

— ராஜம்.



அடுத்தமுறைக் குளியலில் சீரகத்தை
மறக்காம சேர்த்திடுங்க!
சீரகம். இயற்கை அன்னை வழங்கியுள்ள ஒரு நுண்கிருமி நிவாரணி.
இது வேப்பம்பட்டை மற்றும் மலை இஞ்சி போன்ற பாரம்பரிய மூலிகைகளுடன் சேர்ந்து உங்கள் சருமத்திற்கு மென்மையாகப் பாதுகாப்பு அளிக்கிறது.
இந்த சிறப்புகள் அனைத்துமே தாங்கி வருகிறது மெடிமிக்ஸ் ஆயுர்வேத சோப். இது உங்கள் சருமத்திலுள்ள பிசுபிசுப்புத் தன்மையையும் அழுக்குகளையும் அறவே கழுவிக் களைந்து, கோடைக்கால வேர்க்குருக்களை மிதப்படுத்தி, சருமத்திற்கு இதமளிக்கிறது.
18 வெவ்வேறு மூலிகைகளைத் தூய்மையான தேங்காய் எண்ணெயில் கலந்து தயாரிக்கப்படுவதால், மெடிமிக்ஸ் ஆயுர்வேத சோப், உங்கள் சருமத்தை சுத்திகரித்து, பாதுகாத்து பராமரிக்கிறது. இதுவரை கண்டிராத அளவுக்கு உங்கள் சருமத்திற்குக் கோடைகால சுகத்தை அளியுங்கள்.
மெடிமிக்ஸ் ஆயுர்வேத சோப்
MEDIMIX
AYURVEDIC TOILET SOAP
கோடையில் குளுமை தரும் சோப்.
TAKE WING-90

தாகவும், குறைந்த விலையிலும் நமக்குத் தேவையான கால்ஷியத்தைப் பெற முடியும்.

நம்முடைய உணவில் எதில் எதில், பால் பவுடரைத் தூவ முடியுமோ (உதாரணமாக சூப், சாலட் ஆகியவற்றில்) தூவலாம். ப்ரெட் சாண்ட்விச், சப்பாத்தி' ஆகியவற்றை சீஸ் உடன் சாப்பிடலாம். சோயா, உலர்ந்த தேங்காய், பாதாம், மீன், கறுத்த பச்சை நிறமுடைய கீரைகள், தயிர் ஆகியவை கால்ஷியம் அதிகம் நிறைந்தனவாகும். சிறுநீரகத்தில் கல் உள்ளவர்களோ அல்லது பரம்பரையாக அந்த வியாதி இருந்து வருபவர்களோ டாக்டரின் ஆலோசனையின் பேரில் மாத்திரமே கால்ஷியம் மாத்திரைகள் சாப்பிட வேண்டும். இல்லையேல் அது கூடுதல் ஆபத்தை விளைவிக்கும்.

வைட்டமின் டி: நம் உடம்பில் ரத்தம் கால்ஷியத்தைக் கிரஹித்துக் கொள்ள வைட்டமின் டி மிக அவசியமாகிறது. இதனை நல்ல சாப்பாடு, சூரிய ஒளி மூலம் நாம் எளிதில் பெற முடியும். நம் வயது ஏற, ஏற நம் உடம்பால் எளிதில் டி வைட்டமினை கிரஹித்துக் கொள்ள முடிவதில்லை. 70 வயது நெருங்கும் போது சாதாரண அளவைக்காட்டிலும் 3 மடங்கு அதிகமாக வைட்டமின் டி தேவைப்படுகிறது என்று டாக்டர்கள் கூறுகின்றனர். என்றாலும் எந்த மாத்திரையும் டாக்டர் ஆலோசனைக்குப் பிறகே எடுத்துக் கொள்ள வேண்டும். நம் இரத்த ஓட்டத்தில் கால்ஷியம் மிகவும் கூடி வருவதற்கு, அதிகமாக விட்டமின் டி சாப்பிடுவது காரணமாகிவிடக் கூடும்.

மதுபானம்: மதுபானம் அருந்துவது குடலை மாத்திரம் கெடுப்பதில்லை. அது எலும்புக்குக் கூட ஆபத்தினை விளைவிக்கின்றது. மது, வைட்டமின் டி கிரஹிப்பதைப் பாதிப்பது மாத்திரம் அல்லாது எலும்பு இழுப்பையும் அதிகரிக்கச் செய்கின்றது.



பொங்கல், தீபாவளி, நோன்பு போன்ற விழா நாட்களில் நம் போன்ற பெண்களுக்கு, சகோதரர்களோ, தாய், தந்தையரோ மஞ்சள், குங்குமம், வெற்றிலை, பூ, பழம் என்று வைத்துக் கொடுத்து ஆசீர்வதிப்பார்கள். அப்பொழுது நம் மனம் பூரித்து மகிழ்ச்சியில் மிதப்போம். அப்படிப்பட்ட உறவினர் இல்லாத பெண்களுக்குக் கணவன்மார்களே ஒரு தட்டில் இவற்றை வைத்துக் கொடுத்து மகிழ்விக்கலாம்.

— உமா புஷ்பராஜ்.


காபின் + நிக்கோடின்: காப்பியில் உள்ள காபினும் சிகரெட்டில் உள்ள நிகோடினும் அதிக அளவு குடிக்கும் போது கால்ஷியம் மற்றும் தாதுப் பொருள்கள் நம் உடம்பிலிருந்து வெளியேறுவது அதிகரிக்கின்றது. இந்தப் பழக்கம் அதிகம் உள்ளவருக்கு மாத விலக்கு நிற்பது சீக்கிரமாகி விடுகின்றது.

2. தேகப்பயிற்சி: அளவான உடற்பயிற்சி நம் எலும்புகளுக்கு வளமூட்டி, எலும்பு எடை இழப்பதைக் குறைக்கின்றது. எளிதில் குனிந்து,' நிமிர்ந்து செய்யக் கூடிய பயிற்சிகள், தினமும் நடப்பது, கைகால்களை வளைத்து,' நிமிர்த்துவது போன்றவை நல்ல பயன்தரக் கூடியது. முடிந்த அளவில் டென்னிஸ், கால்ஃப், ஷட்டில் காக் ஆகிய விளையாட்டுக்களில் ஈடு படலாம், வசதியிருக்குமானால்.

3. Oestrogen சிகிச்சை: மாத விலக்கு நிற்கும் போது Ostrogen எனும் ஹார்மோன் குறைய ஆரம்பிக்கின்றது. அதனால் பெண்கள் உடம்பு கால்ஷியத்தைக் கிரஹிக்கும் சக்தியும் குறைகின்றது. இதன் மூலம் எலும்பு இழப்பதும் சட்டென்று அதிகரிக்கின்றது. இதைத் தடுப்பதற்கு மிகச் சிறந்த முறை Ostrogen ஐ ஈடுபடுத்தும் சிகிச்சை. ஓவரீஸ் ஆப்பரேஷன் மூலம் நீக்கப்பட்டவர்களுக்கும் இதே சிகிச்சைதான் தரப்படுகின்றது. ஓவரீஸ் எடுக்கப் படாதவர்களுக்கு இந்த சிகிச்சையின் மூலம் கர்ப்பப்பையில் கான்சர் வர ஏதுவாகும் என்று சிலர் அபிப்ராயப் பட்டாலும், ப்ரோஜஸ்ட்டிரான் எனும் ஹார்மோன் சிகிச்சை அளிப்பதால் அந்த அபாயம் நீக்கப்படுவதோடு, எலும்பு இழப்பது மிகவும் குறைக்கப்படுகின்றது என்று சொல்லப்படுகின்றது.

அமெரிக்க டாக்டராகிய கானர் கூறுகின்றார், கர்ப்பப்பையில் கான்சர் ஏற்படக் கூடிய சாத்திய கூறு 1% ம் குறைவே. (ஹார்மோன் சிகிச்சையினால் வரக்கூடிய அபாயம்) ஆனால் இந்த சிகிச்சை கொடுக்காததினால் 9% ஆகும். மேலும் இத்தகைய எலும்பு முறிவுகளின் மூலம் இறப்பவர்களின் எண்ணிக்கை, கான்சரின் மூலம் இறப்பவர்களைக் காட்டிலும் மிகக் குறைவே என்று. Osteoporosis பற்றித் தெரிந்து கொள்ள இன்னும் எத்தனையோ இருக்கிறது என்று ஆய்வாளர்கள் அறிவித்தாலும், முன்பு கொடுத்துள்ள அறிவுரைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம், லட்சக் கணக்கானோர், இடுப்பு, கை, கால் எலும்பு முறிவதிலிருந்து தப்பிக்க முடியும் என்பது உறுதி. ஆகையால் பெண்கள் தன் பெண் குழந்தைகளுக்குச் சிறு வயது முதலே நல்ல, கால்ஷியம் நிறைந்த சத்துணவைக் கொடுத்து வளர்க்கவேண்டும்.

— கே. பாமா.



வெயிலுக்குக் கீரை சாப்பிடுங்க!

பசுவை 'காமதேனு' என்கிறோம். பசுவின் உடலிலிருந்து வெளிப்படும் எல்லாமே நம்மால் உபயோகப்படுத்தப்படு கின்றன. பசும் சாணி வீட்டின் வாசலில் தெளிக்கப்படுவதின் காரணம் அது வீட்டைக் காக்கும் கிருமிநாசினி. பசுவின் கோமியத்தை வீட்டைச் சுற்றித் தெளிப்பார்கள். அதைப் புனிதம் என்று சொல்வார்கள். எது நம்மைக் கிருமிகளிலிருந்து காப்பாற்றி உடல் ஆரோக்கியத்தைக் காக்கிறதோ அதுவே புனிதத்துவம் நிறைந்ததாகக் கருதப்பட்டது.

இந்தப் பசுவிற்கு அடிக்கடி அகத்திக்கீரை கொடுத்து வருகிறார்கள். ஏகாதசி விரதம் இருப்பவர்கள் கூட மறுநாள் அகத்திக் கீரையை உணவில் சேர்க்கிறார்கள். இந்த அகத்திக் கீரையின் பலன் என்ன? அகம் உடல். தீ – வெப்பத்தைச் சீராக வைக்கும் என்றும், அகம் – உடல், தீ – கெட்டவைகளை நீக்கி விடும் என்றும் பொருள் கொள்ளலாம். மனத்தைச் சாந்தப்படுத்தவும், மூளையைப் பலப்படுத்தவும் இது உதவுகிறது. மனநோயாளிகளுக்கு இதை அதிகம் பயன்படுத்தலாம்.

வல்லாரைக்கீரை:

இக் கீரையைப் பற்றி நீங்கள் அதிகம் கேள்விப்பட்டிருப்பீர்களா என்று தெரியவில்லை. இதைப் பற்றிய ஒரு கதையை நான் உங்களுக்குச் சொன்னால் அதைத் தேடி ஓடிப் பிடித்து வந்து விடுவீர்கள்.

முன்னொரு காலத்தில் ஒரு முனிவரிடம் உடல் முழுவதும் கொப்பளங்களுடன் கூடிய ஒரு கர்ப்பிணி பெண் அடைக்கலம் தேடி வந்தாள். அந்த முனிவர் வல்லாரை இலையின் சாற்றினை உடலில் தடவியும், உள்ளுக்கு மருந்தாகவும் கொடுத்து வந்தார். விரைவில் புண்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்ததுடன் பிறந்த குழந்தை மிகச் சிறந்த அறிவாளியாக விளங்கினான் என்று சொல்வார்கள்.

மூளைக்குச் சிறந்த டானிக்கான இந்தக் கீரையைத் தாய்மார்கள் சிறிதளவாவது அடிக்கடி உணவில் சேர்த்துக் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும். சிறு துண்டான இந்தச் செடியை உங்கள் வீட்டில் நட்டால் தானே நன்கு பரவி வளரும். வாரம் ஒரு முறையோ, இரு முறையோ ஒரு கைப்பிடி அளவு சாம்பாரிலோ, பொரியலிலோ சேர்த்து வாருங்கள்.

பொன்னாங்கண்ணி:

பொன் + அகம் + காணீர். இதன் பொருள் இதைப் பயன்படுத்தினால் பொன் போன்ற தேகத்தைப் பெற்று விடுவோம் என்பதுதான். இட வசதி அற்றவர்கள் சிறு தொட்டிகளிலாவது பயிரிடலாம். கூட்டாகவோ, பொரியலாகவோ உண்டு வரலாமே.



மணத்தக்காளி :

இதை 'பி காம்ளெக்ஸ்' என்று சொல்ல லாம். வாய்ப்புண், வயிற்றுப்புண் இவை பறந்து போய் விடும்.

வெந்தயக் கீரை :

இதை ஒரு சகலகலா வல்ல கீரை என்று அழைக்கலாம். சோர்வை நீக்குவதற்கும், எலும்புகளை வலுப்படுத்துவதற்கும் இது ஒரு நல்ல டானிக். இதைச் சமையல் செய்ய சுலபமான வழி — சாம்பாரில் கொத்தமல்லி யைப் போல் வெட்டிச் சேர்த்து விடலாம். இரண்டு ஸ்பூன் சாறு வெறும் வயிற்றில் காலை அருந்த மூன்று மாதங்களில் நீரிழிவு நோய் நன்கு கட்டுப்படும்.

முருங்கைக் கீரை :


இதைப் பற்றி அறியாதவர்கள் இல்லை. ஆனால் ஏனோ சமைப்பதற்குச் சோம்பல் படுகிறார்கள். கண் கோளாறுகள் நீங்க, உடல் பலப்பட, வைட்டமின் 'ஏ' சத்து பெற என்று எத்தனை குணங்கள். தளிர் இலை ஜீரணத்திற்கு உகந்தது. தோசை, அடை இவற்றில் கலந்து விடலாமே.

முளைக் கீரை :

முளைக் கீரையையும், அரைக் கீரை, சிறு கீரை இவற்றையும் பழக்கத்தின் காரணமாக நாம் சமையலில் நன்கு பயன்படுத்துகிறோம். நரை நீங்க, பசியைத் தூண்ட என்று இக் கீரையின் பயன்களைக் கூறலாம். கீரைக் கூட்டு, பொரியல் என்றே செய்து பிள்ளை களுக்குப் 'போர்' அடிக்காமல் இருப்பதற் காக, மாறுதலாக இக் கீரைகளைக் கொண்டு கீரை வடை செய்யலாம். பஜ்ஜி செய்யும் மாவில் காய்களுக்குப் பதிலாக இக் கீரை களை நன்கு அரிந்து கலந்து சிறிது சிறிதாகக் கிள்ளி எண்ணெயில் பொரித்து எடுத்து மாலைச் சிற்றுண்டியாக 'சாஸ்' வைத்துக் கொடுக்கலாம். விருந்தினரையும் புது ஸ்டை லில் உபசரிக்கலாம்.

பசலைக் கீரை :

புரோட்டீன், வைட்டமின் சத்து நிறைந்த கீரை. பயத்தம் பருப்புடன் இக் கீரையைச் சமைத்து அல்லது நன்கு மசித்து 'சீஸ்' துண்டங்களையும், பச்சை வெங்காயத் துண்டுகளையும் கலந்து சப்பாத்தி, பூரி இவற்றுக்குச் 'சப்ஜி'யாகக் கொடுக்கலாம்.





கொத்துமல்லி இலை :

இதைச் சமையலில் சேர்ப்பது இப்பொழு தைய பாஷன். எந்த உணவின் மீதும் இதைத் தூவி அழகுபடுத்துகிறார்கள். அஜீரணத்தை நீக்குவதற்கு இது மிகவும் பயன்படுகிறது.

பொதினா :

மூட்டுவலி உள்ளவர்களும், அடிக்கடி அஜீரணத் தொல்லை உள்ளவர்களும் இதை சேர்த்துக் கொள்வது மிகவும் நல்லது. வாய் நாற்றம் நீங்கவும் உதவுகிறது. இதனால்தான் குருமா, மசாலா இவை தயாரிக்கும் போது பொதினா கண்டிப்பாக சேர்க்கப்படுகிறது.


பொதினா சாற்றின் சில துளிகள் முகத் தில் தடவி வர முகம் பளபளக்கும்.

கறிவேப்பிலை :

இதை ஏன் உணவில் சேர்க்கிறார்கள் தெரியுமா? வாசனைக்காக என்றுதானே நினைப்பீர்கள். கிருமிகளால் வயிற்றுப் போக்கு ஏற்படாமல் தடுக்கும் சக்தி இதற்கு உண்டு.

இதையெல்லாம் நன்கு உணர்ந்தவர்கள் நம் முன்னோர். முறைப்படி இவை நம் உணவில் சேரும் வகை வகுத்திருந்தனர். உபவாசங்கள் உடல் ஆரோக்கியம், மனக் கட்டுப்பாடு கருதியே ஏற்படுத்தப்பட்டன. உணவு விதிதாச்சார முறை அவர்கள் செயல்களில், பழக்க வழக்கங்களில் சரிவர பராமரிக்கப்பட்டது. இரவில் தயிர் சாப் பிட்டால், 'லஷ்மி' தன்னை விட்டுவிடுவாள் என்று கருதப்படுகிறது. இதன் காரணம் என்ன? தயிர் இரவில் உட்கொண்டால் செரிமானம் சரிவர இருக்காததால் உடல் நோய்வாய்ப்படுகிறது. இதனால் கையில் இருக்கும் செல்வம் கரையும் என்று பொருள். ஆகவே இவற்றின் பொருட்களை நாம் நன்கு உணர்ந்து கடைபிடிப்போம்.

— டாக்டர் கமலி.


கவிஞரின்
நெஞ்சக் கற்பனை
காகித மீது;
டிசைன் கலைஞரின்
நெசவுக கற்பனை
நிகரிலா நேர்த்திப்
பருத்தித்
துணிமீது.
பருத்தி
பேண்ட்டீஸ்
மாதர் ஜட்டி
படைப்பு:விஐபி
VIP
Feelings
Avenues HH 867 89

நிகரற்ற நிறைவு

பாம்பே டையிங்
பள்ளிச்சீருடைகள்

'90-ன் சிறப்பு



- நீடித்து உழைப்பவை
- அணிய மென்மையானவை
- துவைத்து அணிய ஏற்றவை
- வியக்கவைக்கும் எளிய விலைகள்
- எல்லாப் பள்ளிகளுக்கும்,
  நிறுவனங்களுக்கும்
  ஏற்ற சீருடை நிறங்கள்
- தரத்திற்கு உத்திரவாதம்

கேரளா, தமிழ்நாடு, பாண்டிச்சேரி
மற்றும் வளைகுடா நாடுகளில் உள்ள
(துபாய், அபுதாபி) எமது 120 க்கும்
மேற்பட்ட ஷோரூம்களிலும் 600 க்கும்
மேற்பட்ட அங்கீகாரம் பெற்ற
டீலர்களிடமும் கிடைக்கும்.

Marketed by :
சிவ்ராம்ஸ் அசோசியேட்ஸ்/சிவ் சேல்ஸ்
கோயமுத்தூர்-11 & சென்னை-17.

Bankers : The Federal Bank Ltd.

பாம்பே டையிங்

இனிய நறுமணம் இயைந்தே உடன் வர

கவனித்திருக்கிறீர்களா? சிலர் நம்மைக் கடந்து செல்லும் போது மெல்லிய ஒரு நறுமணம் மெதுவே தவழ்ந்து செல்லும். நம் கவனத்தை ஈர்க்கும். சிலர் மீதோ ஒரு வியர்வை வாடை அடித்து நம்மை முகஞ் சுளிக்கச் செய்யும்.

ஆடை அலங்காரம், அணிகலன்கள், மேக்—அப் இவற்றுடன் நல்லதொரு 'சென்ட்'டைத் தேர்ந்தெடுத்து அணிவதும் இன்றியமையாததே. இப்படி வாசனைத் திரவியங்களை உபயோகிப்பது இன்றல்ல — பல ஆயிரம் ஆண்டுகளாகப் பழக்கத்திலிருந்து வருகிறது. ரோமாபுரி ராணிகள் 'லாவண்டர்' பூக்கள் தெளிக்கப்பட்ட தொட்டி நீரிலே அமிழ்ந்து குளித்ததாகச் சரித்திரம் சொல்கிறது. இந்தப் பூக்களுக்கு வாசனை உண்டு என்பது மட்டுமல்ல காரணம். உடல் அயர்வை நீக்கி நரம்புகளுக்கு உற்சாகத்தையும் கொடுக்கும் சக்தி அந்த வாசனைக் குளியலுக்கு இருந்தது.

ரோமானியர்களுக்கு நேர் எதிரானவர்கள் பிரெஞ்சு நாட்டவர். குளிப்பது என்றாலே இவர்களுக்கு எட்டிக்காய். எனவே உடல் வாடையை மறைத்துக் கொள்ள 'பெர்ஃப்யூம்' தயாரிப்பில் முழு மூச்சுடன் இறங்கினார்கள். இன்று 'ஜிவோ வாஞ்சி', 'சானல்', 'சார்லி' என்ற பெயர்களில் உலகச் சந்தையில் அரசோச்சும் 'சென்ட்'டுகளுக்கு வித்திடப்பட்டது இங்குதான்.

''ஒருவரது உடல் வாசனை அவர் உணவுப் பழக்க வழக்கத்தைப் பொறுத்தது'' என்கிறார் 'ஷைல்ஸ்' அழகு நிலைய உரிமையாளர் ஷைலா ஷங்கர். அசைவ உணவு வகைகள் — குறிப்பாக மாட்டுக் கறி அடிக்கடி சேர்த்துக் கொள்வது இந்த வாசனையில் கண்டிப்பாகப் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே அவரவருக்கு இயைந்த நறுமணத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

''நம் ஊர்த் தட்பவெப்பத்துக்கு ஏற்றவை பொதுவாக மிதமான நறுமணங்களே. காற்றிலே ஈரப்பதம் கலந்திருப்பதால் அணியும் 'பெர்ஃப்யூமி'ன் வாசனை நெடுநேரம் நிற்கும். ஆனால் உலர்ந்த சீதோஷ்ணம் என்றால் வாசனை சீக்கிரம் ஆவியாகிவிடும். அப்போது சற்று 'ஸ்டிராங்'கான நறுமணங்களை — குறிப்பாக மலர் வாசனைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்'' என்பது ஷைலாவின் கருத்து.



பெர்ஃப்யூம்களைத் தேர்ந்தெடுப்பதே சற்றுச் சிரமமான காரியம்தான். ''ஒரு முறை 2 அல்லது 3 வாசனைகளுக்கு மேல் முகர்ந்து, முகர்ந்து பார்க்க வேண்டாம்'' என்று அறிவுரை கூறுகிறார் ஷைலா.

பலப்பல பாட்டில்களைத் திறந்து திறந்து முகர்ந்து கொண்டிருந்தால் குழப்பம்தான் மிஞ்சும். சிறு துளி எடுத்து மணிக்கட்டில் தேய்த்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். பாட்டிலுக்குள் இருக்கும் போது உள்ள வாசனையும், நம் உடல் மீது பட்ட பின் வரும் வாசனையும் வேறாகவும் இருக்கலாம். நாடித் துடிப்பு உள்ள இடங்களான மணிக்கட்டுகள், கால் முட்டிகளின் பின்புறம், முழங்கைகள், நெற்றிப் பொட்டுகள் இவை சாதாரணமாக 'சென்ட்' பூசிக் கொள்ளும் இடங்கள்.

தலைமுடியின் அருகில் தடவிக் கொள்வதென்றால் ஜாக்கிரதையாகப் பயன்படுத்த வேண்டும். அநேகமாக எல்லா 'சென்ட்'டுகளிலுமே 'பேஸா'கப் பயன்படுத்தப்படும் ஆல்கஹால் தலைமுடியின் நிறமிகளை (பிக்மென்ட்ஸ்) பாதிக்கலாம். சற்று 'ஸென்ஸிடிவ்'வான சருமம் உடையவர்கள் பஞ்சில் தோய்த்துப் பயன்படுத்தலாம்.

''நேரத்துக்கேற்ற, செய்யும் வேலைக்கேற்ற வாசனைகளையும் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.'' வேலைக்கான 'இன்டர்வியூ'க்களுக்கோ, பொறுப்பான 'செமினார்'களில் பங்கேற்பதற்கோ 'பார்ட்டி'களுக்குப் பயன்படுத்த வேண்டிய அட்டகாசமான ஆளை அடிக்கும் நறுமணங்கள் பொருத்தமாக இருக்குமா?


நம் நாட்டைப் பொறுத்தவரையில் 'பெர்ஃப்யூம்' என்ற பெயரில் உலவி வருபவை யாவும் அயல்நாட்டுத் தயாரிப்புக்

களை. இப்படித் திரை கடலோடி வாசனைத் திரவியம் வாங்கி வருபவர்களுக்கு இடைச் செருகலாய்ச் சில வார்த்தைகள். 'அமெரிக்காவிலிருந்து என் அக்கா அனுப்பியது' என்று 'செண்ட்' பாட்டிலைப் பீரோவில் வைத்துப் பூட்டாதீர்கள். குறிப்பிட்ட காலக் கெடுவுக்குப் பின்னால் மருந்துகள் போலத் தான் இவைகளும். பயனின்றிப் போய் விடும்.

பயன்படுத்திய பின் தயவு செய்து 'பாட்டில்'களை நொறுக்கி எறிந்து விடுங்கள். சின்னப் பூக்களுடன் வித்தியாசமான ஃபிளவர் வாஸாக வைத்தால் தப்பில்லை. ஆனால் பத்து ரூபாய், இருபது ரூபாய்க்கு ஆசைப்பட்டு வாசலில் வந்து ஆசை காட்டும் 'புட்டிக்காரனி'டம் போட்டு விடாதீர்கள். மட்டமான போலித் தயாரிப்புகளுக்கு இந்தக் காலிப் புட்டிகள் வரப்பிரசாதம்.

சரி, இந்தத் துறையில் ஏன் நம் நாடு இன்னும் பின் தங்கியே இருக்கிறது? ரோஜா, மல்லிகை, சந்தனம், ஜவ்வாது போன்ற மூலப் பொருட்களுக்கு இங்கு குறைவில்லையே? ''தயாரிப்புச் செலவுதான் காரணம்'' என்பது ஷைலாவின் கணிப்பு. சுமார் பத்து டன் எடையுள்ள ரோஜா இதழ்களைச் சேர்த்தால்தான் ஒரு கிலோ எடையுள்ள ரோஜா எண்ணெய் கிடைக்கும். இதழ்கள் சற்று வாடினால் கூட எண்ணெய் வாசனை மாறி விடுகிறது. மல்லிகை இதற்கு நேர் மாறு. நாளாக ஆக நறுமணம் அதிகமாகும்.

கஸ்தூரி மானோ இன்று பாதுகாக்கப்பட வேண்டிய விலங்கினத்தைச் சேர்ந்ததாகி விட்டது. ஜவ்வாதுப் பூனையின் உயிரணுக்கள் அடங்கிய ஸீரம் ஒரு கிலோவின் விலை ரூ. 40,000 விருந்து ரூ. 50,000 வரை. செயற்கை முறையில் அவற்றின் பாலுணர்வு தூண்டப்பட்டு இது எடுக்கப்படும் முறையே கொடூரம். ஆனால் சந்தனம், மல்லிகை,



போன்ற நம் நாட்டு நறுமணங்களுக்கு அயல் நாட்டில் பெரும் வரவேற்பு இருப்பதென்னவோ உண்மை. மூலப்பொருள் முடிவுத் தயாரிப்பாக மாறும் முறை எளிதானால் அந்நியச் செலாவணி அதிகம் பெற்றுத் தரும் தொழிலாக இது மலரலாம்.

சரி, அயல்நாட்டுத் தயாரிப்புக்களை அனாவசியச் செலவு என்று ஒதுக்கும் நடுத்தர வர்க்கத்தினர் நறுமணம் கமழ உலவி வர வழியே கிடையாதா? ''ஏன் இல்லை?'' என்கிறார் ஷைலா. குளிக்கும் நீரில் ஓரிரு சொட்டுகள் பன்னீர் தெளித்துக் கொள்ளுங்கள். வியர்வை நாற்றத்தைக் களைய முதலில் வழி தேடுங்கள்.


''பாய்ஸ், 'வீடு'' போன்ற பெயர்களில் 'டியோடெரண்டு'கள் விற்பனையாகின்றன. உங்கள் 'பர்ஸு'க்கு அவை ஒத்து வருமானால் பயன்படுத்தலாம். இல்லையென்றால் குளித்து முடித்தவுடன் நல்லதொரு டால்கம் பவுடரை உடல் முழுவதும் தூவிக் கொள்ளலாம். அரைத்த மஞ்சளின் இதமான மணம், சந்தனக் கலவையின் மங்கல மணம், சூடும் மல்லிகையின் மயக்கும் மணம் — இவையெல்லாம் தானே நம் முன்னோர் இனிய நறுமணம் இயைந்தே உடன்வர வகுத்து வைத்த விதிகள்.

— *நிர்மலா சக்கரவர்த்தி.*



கேசவர்த்தினி...

நீண்ட அடர்த்தியான கூந்தலுக்கான பரம்பரை இரகசியம்



ஊட்டமளிக்கும் கேசவர்த்தினி கூந்தல் தைலம்.

நீங்கள் நாள்தோறும் உபயோகிக்கும் தேங்காய் எண்ணெயில் சிறிதளவு கேசவர்த்தினியை கலந்து தேய்த்தால், உங்கள் கூந்தல் நீண்டு, ஒளி கொண்டு திகழுவதைக் காண்பீர்கள்.

மேலும் உங்கள் கூந்தல் அடர்த்தியாகவும், கருமையாகவும் காணப்படும்.

இன்றே ஒரு பாட்டில் கேசவர்த்தினியை வாங்குங்கள். ஆறே மாதங்களில் அழகு மிளிர்ந்த கூந்தலை பெறுங்கள்.




O&M 2293 TM

கேசவர்த்தினி

கூந்தல் தைலம்

கேசவர்த்தினி ப்ராடக்ட்ஸ்,
சென்னை - 600 087.



போர்வெல்

தண்ணீர் தட்டுப்பாடா போர்வெல் மற்றும் பம்புகள் சிறந்த முறையில் மற்றும் துரித வேலைக்கு 'அக்வாவை' அழையுங்கள்.

1. இடத்தை தேர்வு செய்தல்
2. எந்தவிதமான மண்ணிலும் போர்வெல் போடுதல்
3. போரில் எவ்வளவு தண்ணீர் வருகிறது என்பதை வரையறுத்தல்
4. ஆழம் மற்றும் தண்ணீர் அளவை வைத்து எந்த விதமான பம்பு நிறுவுவது என்பதை நிர்ணயம் செய்து, சப்ளை மற்றும் பொறுத்துதல்
5. போரில் விழுந்த பம்புகள், பைப்புகள் வெளியே கொண்டுவருதல்.

அணுகவும் : **அக்குவா எக்யூப்மெண்ட்ஸ்**

அடையார் பஸ் ஸ்டாண்ட் எதிரில்.

21, கிண்டி ரோடு, அடையார், சென்னை - 600 020. போன் : 415946

மாவு பிசைய • பொடிக்க • மசிக்க • கலக்க • நொறுக்க • முட்டையடிக்க • சீராக நறுக்க • கடைய • பி



மாவு பிசைய • பொடிக்க • மசிக்க • கலக்க • நொறுக்க • முட்டையடிக்க • சீராக நறுக்க • கடைய •

ஸுமீத் SP-16 க்கு கடுமையான வேலைகளைச் செய்யும் தண்டனை அளியுங்கள்–அன்றாடம் ½ கிலோ மாவைப் பிசைந்திடவும், கடினமான 16 இதர வேலைகளைச் செய்திடவும்.

ஸுமீத் SP-16 மட்டுமே அன்றாடம் 1/2 கிலோ மாவு பிசையும் சக்தி படைத்ததாகும். இரண்டே நிமிடங்களில் மாவை சீராக மென்மையாக்குகிறது—நாளுக்கு நாள்.

ஸுமீத் SP-16, நீங்கள் கொடுக்கும் எந்தக் கடுமையான வேலையையும் செய்யும் வண்ணம் கட்டுறுதியாக உருவாக்கப்பட்டது. இதிலே சக்திவாய்ந்த 17 அற்புத செயல்கள் உங்கள் அன்றாட சமையல் வேலைகளைச் செய்யும் வண்ணம் கட்டுறுதியோடு வடிவமைக்கப்பட்டது. இதைப்போல், வேறு எந்த பிராஸஸரும் செயல்பட முடியாது.

ஸுமீத் SP-16, கட்டுறுதியான ஸுமீத் மோட்டாரை கொண்டதாகும். பளுமிகுந்த வேலையிலும் அரை மணி நேரத்திற்குமேல் தொடர்ந்து ஓடக்கூடியது— தடையின்றி ஒரே மாதிரி சிறப்பான பலனை தொடர்ந்து அளிக்கிறது ஒவ்வொரு முறையும்.

அதுமட்டுமா! பளுவான வேலைகளுக்கேற்ப தானாகவே சரி செய்து கொள்கிறது, ஸுமீத் SP-16. தவ அதிக பளுவான வேலை கொடுக்கப்பட்டாலும், அது சீ வேகத்தை பராமரிக்கிறது. முற்றிலும் பாதுகாப்புடன். அ இயங்கும்போது, மூடி திறந்து கொண்டால், அதே நொ மோட்டார் தானாக நிறுத்திக் கொள்ளும்.



டீ. வி. யிலும், பொருட்காட்சிகளிலும் நாட்டுப்புறக் கலைகள் என அறிவித்து, கரகாட்டம் போன்றவற்றைப் போடுகிறார்கள். இவற்றையே தொழிலாகக் கொண்டு ஆடுபவர்களின் நிலை என்ன?

கரகாட்டம், மயில், காவடி ஆட்டம், பொய்க்கால் குதிரை போன்றவைகளை நயத்துடன், பாரம்பரியம் கெடாமல்

சென்னைப் பொருட்காட்சியில் ஆடிவரும் தஞ்சை பாபு — விஜயா தம்பதிகளைச் சந்தித்த போது: —

திரு பாபு சொன்னார்:

"இந்தக் கரகாட்டம் குடக்கூத்து எனப் படும். தஞ்சை மாவட்டத்தில் பால் குடத்துடன்" ஆடும் இவ்வாட்டம் பெண்களுக்காகவே உண்டானது. இதை ஆண்கள் ஆடினாலும் பட்டுப் புடைவை கட்டி (பின் கொசுவத்துடன்)தான் ஆட வேண்டும். சுங்குடி, கைத்தறிப் புடைவைகளையும் கட்டலாம். தற்காலத்தில் குட்டைப் பாவாடைகளைக் கட்டிக் கொண்டு ஆடும் சிலரால் கலையின் பாரம்பரியம் மட்டுமல்லாமல், தரமும்குறையக்காரணமாகிறது. பார்ப்பவர்களின் ரசனையையும் வேறு பாதையில் திருப்பி விடக்கூடும்.

கர்காட்டம், பொய்க்கால் குதிரை, மயில் காவடி, கம்பு மீது நின்று ஆடுவது போன்ற எல்லா ஆட்டங்களையும் பெண்கள் ஆட முடியும். பத்து வயதில் ஆடக் கற்றுக் கொண்டால் சுலபமாகக் கற்க முடியும். ஆனால் இருபது வயதிற்குள்தான் கற்க முடியும். இருபது வயது தாண்டினால் கற்பது சாத்தியமல்ல, சைக்கிள் ஓட்டு



தெரிந்திருந்தால் மட்டுமே பொய்க்கால் குதிரை, கம்பு மேல் நடப்பது போன்றவை கற்க முடியும். உடம்பில் பலமிருந்தால் ஐம்பது வயது வரை ஆட முடியும். முறையோடு கூடிய கடுமையான பயிற்சி, தொழில் ஈடுபாடு இருந்தால் மூன்றே மாதங்களிலும் அரங்கேற்றம் செய்ய முடியும்.''

திருமதி விஜயா தன் அனுபவங்களைக் கூறினார்:

''கர்ப்ப காலத்தில் ஐந்து மாதம் வரை கரகம் ஆடலாம். வயிறு தெரிய ஆரம்பித்த பின்பு ஆடுவது மிகவும் சிரமம். ஆனால் பொய்க்கால் குதிரையை பிரசவம் வரை தொடர்ந்து ஆடலாம். இதே தீவுத் திடலில் ஒரு விஜயதசமி அன்று ஆடி முடித்தவுடனே எனக்குப் பிள்ளை பிறந்தான்.''

''பிரசவம் ஆன ஒன்பதாவது நாளே ஆடினேன். ஆட்டம் ஆடும் அன்று காலை பன்னிரெண்டு மணிக்குள்ளே சாப்பிட வேண்டும். வயிறு முட்ட சாப்பிட்டால் ஆடுவது கடினம். உழைக்கும் அளவுக்கு இதில் வருமானம் போதாது. அதனால் கலையே நசித்துப் போகும் அளவு ஆகிவிட்டது. நம்ம தமிழக அரசு மனசு வைத்தால் நிச்சயம் இக் கலையை வளர்க்க முடியும். இது எங்களுக்குப் பரம்பரை தொழிலாகி விட்டதால் எங்களால் வேறு தொழிலும் செய்ய முடியாது. இத் தொழிலை நாங்கள் தெய்வீகமாக — தெய்வமாகவே மதிக்கிறோம்.

சில சமயம் நாங்கள் (பெண்கள்) ஆடும் போது கிண்டல் கேலியுடன், மட்டமாகப் பேசுவோர்களும் உண்டு. தப்பான வழிக்கு வருவாளா என்ற கண்ணோட்டத்தில் பார்ப்பதுடன், வாய் விட்டுக் கேட்போரும் உண்டு.

''ஐயா! வயத்துப் பிழைப்புக்குத்தான் நாங்க ஆடறோம். மானத்தை விற்க இல்லே. அப்படி மானத்தை வித்துத்தான் பிழைக்கணும்னு ஒரு நிலைமை வந்தா நாங்க இப்படி ஆட வேண்டிய அவசியமில்லே.''

அப்படின்னு பொட்டிலே அறைஞ்ச மாதிரி கேட்டுடுவேன். எங்களுக்கு உழைப்புக்குத் தகுந்த ஊதியம் கிடைச்சா போதும். எங்க வீட்டுப் பிள்ளைகளுக்குத் தனியாக நாங்கள் கற்றுத் தருவது இல்லை. நாங்கள் ஆடுவதைப் பார்த்து, தானே ஆடுகிறார்கள். எங்கள் முன்னோர்கள் ராஜராஜ சோழன் காலத்தில் குதிரை போல வேஷம் போட்டு ஆட ஆரம்பித்தது இப்போது இந்த ஆட்டமாகி விட்டது.''


இவர்களின் மகள் ராஜேஸ்வரி — ''தொழிலையும், அதில் எனக்குப் பயிற்சி கொடுத்து, ஈடுபாட்டையும் உண்டாக்கிய என் தந்தையையும் மறக்காமல் இருக்க வேண்டும் என்பதுதான் என்னோட ஆசை. எட்டு வயதிலே ஆட ஆரம்பித்த நான் எட்டு வருஷமா ஆடிக்கிட்டு இருக்கேன். பொய்க்கால் குதிரை, கரகம், காவடி, பரதம் எல்லாமே ஆடுவேன். பரதம் மட்டும் குடும்ப ஆசிரியர் நடராஜ் — சகுந்தலாகிட்டே கத்துக்கிட்டேன். மீதியெல்லாம் என் தாய், தந்தை ஆடும் போது பார்த்துக் கற்றுக் கொண்டது தான். தனியாக எதுவும் கற்கவில்லை.''




பாபுவின் மகன் முருகன், ''நான் கம்பு மேல் நின்று ஆடுவதை என் தாத்தாவிடம் கற்றேன். பதினைந்து வயதில்தான் கற்க ஆரம்பித்தேன். உள்ளபடியே மிகவும் கடினமான கலை இது. ரத்தம் சிந்திதான் இதைக் கற்றுக் கொண்டேன். கை, கால் விரல்கள் கொப்பளித்து விடும். பேலன்ஸ் சிறிது தவறினாலும் உயிருக்கே ஆபத்தான கலை. கற்க ஆரம்பித்த போது கம்பில் ஆணி வைத்து அதனிடை கால் விரல்களை வைத்துப் பழகியது. இந்த கடினமான, ஆபத்தான கலைக்குத் தகுந்த ஊதியம் கிடைப்பதில்லை என்பது வருந்தத்தக்கது. நான் சொந்தமாகக் கைத் தொழில் செய்கிறேன். முக்கியமான நிகழ்ச்சிகளிலே மட்டும்தான் நான் ஆடுவேன்'' என்றார்.

— **வைதேகி தேசிகன்.**

படங்கள்: யோகா.


செம்பருத்தி
மருதோன்றி
கீழா நெல்லி
பொடு தலை
அடர்த்தியா
அழகிய
கூந்தலுக்கு:
உங்கள் கூந்தல் வளர்ச்சிக்கும், பொடுகு வராமல் தடுக்கவும், இளநரையை போக்கவும், முடி உதிர்வதை நிறுத்தவும், இதோ உங்கள் மூலிகை தைலம் டாம்ப்கால்.
இந்த டாம்ப்கால் தைலம் இயற்கை தந்த 32 மூலிகைகளையும் தரமான ஆலிவ் எண்ணையும் தேங்காய் எண்ணையும் கொண்டு தயாரிக்கப் படுகிறது.
டாம்ப்கால்
மூலிகைக்கூந்தல்தைலம்
தமிழக அரசு நிறுவனத் தயாரிப்பு
கூந்தல் நலத்திற்கும்
வளத்திற்கும் டாம்ப்கால்.

சேமிப்பும் குழந்தைகளும்



நாம் சிறுவர், சிறுமியாக இருந்த காலத்தில் சேமிப்புக்கு இருந்த முக்கியத்துவம் தற்போது இல்லையோ என்று நினைக்கத் தோன்றுகிறது. தற்போது சேமிப்பை விட கடன் வாங்கியாவது, விளம்பரங்களைப் பார்த்து ஆசைப்படும் பொருட்களை, வாங்க வேண்டுமென்று மக்களிடையே குறிப்பாகப் பெண்களிடையே ஒரு தணியாத மோகம் ஏற்பட்டுள்ளதை மறுக்க முடியாது.

வேலைக்குப் பெண்கள் போகாத அந்தக் காலத்திலேயே தெரிந்து சேமிப்பதை விட, கணவனது வருவாயிலிருந்து தெரியாமல் சேர்த்து 'சிறுவாணி'ப் பணம் வைத்திருந்து பல இக்கட்டான சமயங்களில் ஆண்களுக்கு உதவியிருக்கிறார்கள்.



அப்போதெல்லாம் பள்ளியிலே சேமிப்பின் பயன்களை பலவாறு வலியுறுத்தி வந்தனர் ஆசிரியர்கள். அதற்காக போஸ்ட் கார்டுகள் மூலம் பணம் சேர்க்கும் பழக்கத்தை உண்டாக்கினர். குறைந்தபட்சம் நாலணா முதல் ஒரு ரூபாய் வரை 'ஸ்டாம்ப்' ஒட்டி அதை போஸ்ட் ஆபீஸில் கொடுத்து புத்தகத்தில் அன்றைய தேதி வரை வரவு வைத்துக் கொடுப்பர். இப்படிப் பல வகையிலும் சேமிப்பு, அதன் முக்கியத்துவம் பள்ளிகள் மூலம் செயல்படுத்தப்பட்டன.

தற்போது பள்ளி நிர்வாகத்தினர் சேமிப்பா? மூச்! செலவுக்குத்தான் வழி வகுக்கின்றனர். பெற்றோர் சம்பாதிக்கும் பணத்தில் ஒரு பகுதியை ஏதாவது ஒரு காரணம் சொல்லிப் பிள்ளைகள் மூலம் கறக்கின்றனர். இந்த செலவுகளும் கட்டாயப்படுத்தப்படுவதால், பிள்ளைகள் பயந்து செலவழிக்க முடியாத பெற்றோரிடமும் தொந்தரவு செய்து வாங்கிக் கொண்டு போய் கொடுக்கும் வழக்கம் சமீப காலமாக மிகப் பிரசித்தம்.

பெற்றோர் இருவரும் வேலைக்குப் போவதாலும், ஓரிரண்டு குழந்தைகளோடு நிறுத்திக்கொள்வதாலும் குழந்தைகள் எதற்காகப் பணம் கேட்டாலும் கொடுத்து விடும் பெற்றோரும் உள்ளனர்.

உதாரணமாக, குழந்தைகளுக்குப் பள்ளியில் நடக்கும் மாறுவேடப் போட்டி, நாடகம், நடனம் முதலிய நிகழ்ச்சிகளுக்கு நம் காலங்களில் வீட்டிலிருக்கும் ஆடையணிகலன்களை வைத்தே வேஷம் கட்டி ஆடிப் பரிசும் பெற்றவர்கள் உண்டு. இப்போதோ, சினிமா கம்பெனிகளுக்கு வாடகைக்கு ஆடையலங்காரம் பொருட்களைக் கொடுக்கும் கடைகளுக்குச் சென்று என்ன விலையானாலும் ஒரு நாள் வாடகைக்கு வாங்கி குழந்தைகளை மகிழ்விக்கின்றனர் பெற்றோர். பணம் இருப்பவர்களைப் பற்றி பரவாயில்லை. இதைப் பார்த்து வசதியில்லாதவர்களும் கௌரவத்திற்காக செலவிடுவது தேவை தானா?

குழந்தைகளைச் சேமிக்க வைப்பதற்கு முன் வேலைக்குச் செல்லும் பெண்களை

எடுத்துக் கொள்வோம். மாதம் தவறாமல் அலுவலகத்துக்கு வந்து தவணை முறையில் புடைவைகள் (அதிலும் வெளிநாட்டுப்) கொண்டு வந்து கொடுக்கும் வியாபாரியிடம் புடைவைகள் வாங்காத பெண்களே இல்லை. தவணை முறையில் சுலபத்தில் அடைக்கலாமே என்று தேவைக்கு அதிகமாக வாங்குவதில் கவனம் செலுத்துகின்றனர். பொருட்களைத் தவணை முறையில் விற்கும் ஏதாவது ஒரு பெரிய நிறுவனத்தின் மூலம் வாங்குவது பழக்கமாகி விட்டது இவர்களுக்கு. இதை ஒரு கௌரவப் பிரச்னையாக நினைக்கின்றனர். எல்லாப் பெண்களும் அப்படிச் செய்வதில்லை என வாதிட்டாலும் பெரும்பாலான பெண்கள் இப்படித்தான் என அனுபவம் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.

பெரியவர்களாகிய நாம் ஒரு பொருளை வாங்கு முன் இது அவசியம் தேவைதானா? என்று நம்மை நாமே பலமுறை கேட்டபின் அத்தியாவசியமான பொருட்களை மட்டும் வாங்கிப் பணத்தை சேமிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும். வீட்டு மனைகளும், தங்க நகைகளும் விலை ஏறுவதைப் பார்த்தால், அவை "ஒன் வே டிராபிக்" போலத்தான் இறங்கும் வழியே தெரியவில்லை. நம் சேமிப்பை அலுவலகக் கடன்களோடு சேர்த்து வீடு கட்டவோ, திருமணங்களுக்காகவோ செலவு செய்ய வைத்துக் கொள்ளலாம். எந்தப் பொருள் ஓரளவு விலை அதிகமானாலும், நம் வேலைப் பளுவையும் சிரமத்தையும் குறைக்க உதவுமானால் வாங்குவதில் தவறில்லை.

எனக்குத் தெரிந்த ஒருவர் பக்கத்து 'குவாட்டர்ஸில்' தனக்குக் கீழே வேலை பார்க்கும் ஒருவர் 'பிரிஜ்' வாங்கி வைத்திருக்கிறாரே என்று கௌரவத்திற்காக இரண்டே பேர் கொண்ட அவர்கள் குடும்பத்திற்குத் தேவையில்லாத 'பிரிஜ்' ஒன்றை வாங்கி வைத்து 'மின்சார பில்'லும் செலுத்தி வருகிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்?

நமக்கு இருப்பது இரண்டு குழந்தைகள் தானே என்று அவர்கள் எது கேட்டாலும் வாங்கிக் கொடுக்கும் பழக்கம் நமக்கு மட்டுமல்ல. அவர்களின் எதிர்காலத்துக்கும் நல்லதல்ல. கேட்கும் பொருள் அவர்களுக்கு எந்த வகையில் உபயோகமாக இருக்கும் அல்லது இருக்காது என்று புரியும்படி பொறுமையாக விளக்க வேண்டும். நாளடைவில் குழந்தைகளுக்கும் எந்தப் பொருள் தேவையானது? எதைக் கேட்டால் தடங்கலின்றி கிடைக்கும் என்று பாகுபடுத்திக் கொள்ளும் பழக்கம் ஏற்படும். சேமிப்பு பற்றிய அரிய உண்மையை உணரவும் வழிகோலாக இருக்கும்.

— **பானுமதி இராமச்சந்திரன்.**

இம்மாத இல்லத்தரசி போட்டி

கடைசித் தேதி: 10.6.90.

பொருள்: காய்

சமையல் கூப்பன்

.... என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இத்துடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும், எந்தப் புத்தகத்திலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

மூன்று மாதங்களில் ஐநூறு கவிதைகள்

'குடத்து விளக்கு' என்ற சொல் வழக்கிற்கு ஏற்ப பல பெண்மணிகள் தங்களிடம் உள்ள அரிய திறமையைப் பற்றிப் பெரிதாக நினைப்பதே இல்லை. அப்படிப்பட்ட ஒருவர்தான் திருமதி நாகலக்ஷ்மி சத்தியவாகீஸ்வரன். அறுபது வயதை எட்டிய இவர் கடந்த சில மாதங்களாக மடை திறந்த வெள்ளமாகக் கவிதைகளைப் பொழிவது எப்படி? அவரே கூறுவதைக் கேளுங்கள்.



''என் பிறந்த விடு புகுந்த விடு இரண்டுமே சங்கீதக் குடும்பம். பதினான்கு வயதில் திருமணமாகிக் கொழும்புவிற்கு வந்தேன். இன்றுவரை என் வாழ்க்கை அந்நியமண்ணில் தான். பல கீர்த்தனைகளைக் கச்சேரியில் பாடியுள்ளேன். என் பெண் 7 வயது முதலே தமிழில் பாடல்கள் எழுதுவாள். அவற்றிற்கு மெட்டமைத்துப் பாடுவேன். ஆனால் இது வரை ஒரு வரி கூட கவிதை என்று நான் எழுதியதில்லை. ஆனால் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் என் கணவரின் உடல் நிலை மிகவும் மோசமாகியது. உதவிக்கு வீட்டில் யாருமில்லை. ஊரடங்கு உத்தரவு வேறு. வாகனங்கள் ஓடவில்லை. டெலிபோன் இயங்கவில்லை. அத்தியாவசியப் பொருட்களைக் கூட வெளியே சென்று வாங்க இயலவில்லை. மருந்தோ, மருத்துவரோ இன்றி தனித்து விடப்பட்ட நிலையில் மனம் மிகவும் வருந்தி இறைவனை வேண்டினேன். அப்போது சர்வாலங்காரத்துடன் ஒரு பெண்மணி என் கையைப் பற்றி ''நான் துணை இருக்கிறேன். கவலைப்படாதே'' என்றாள். நீ யார் என்று நான் கேட்டதற்கு ''என் பெயர் கோமதி'' என்று கூறி மறைந்து விட்டாள். அங்கு வந்தது என் குல தெய்வமான கோமதி அம்மன் தான் என்றே நம்புகிறேன். அந்தக் கணமே ''குலதெய்வமே எங்கள் கோமதித் தாயே நலவாழ்வு தந்தெமை ஆதரிப்பாயே'' என்று பாடத் தொடங்கினேன். அதன் பிறகு தினமும் ஏழெட்டு கவிதைகள், மட மட வென்று உருவாகும். தெய்வங்கள் மீது, தென்றல், குழந்தை, நிலவு, விடிவெள்ளி, காலைப்பொழுது இவற்றைப்பற்றி நிறைய பாடல்கள் பாடியுள்ளேன். இதில் வேடிக்கை என்ன வென்றால் கவிதை வரிகள் மடமட வென்று வரத்துவங்கும். பேப்பர் பேனா தேடுவதற்குள் முதலில் தோன்றிய வரிகள் மறந்துவிடும். இப்படிக் கவிதை பெருக்கெடுப்பது பல வேளைகளில் தொல்லையாகக் கூட மாறிவிடுவதுண்டு. இரயிலில் போகையில் தோன்றிய கவிதையை வாழ்த்து அட்டையிலும், பஸ்ஸில் பிரயாணம் செய்கையில் தோன்றிய கவிதையை மடியில் வைத்திருந்த கண்ணாடிப் பொருளைக் கட்டி வைத்த பார்ஸலின் மீதும் எழுதியிருக்கிறேன். உடன் பயணம் செய்தவர்கள் என்னைப் பற்றி என்ன நினைத்தார்களோ? இத்தனைக்கும் நான் படித்தது ஏழாம் வகுப்பு வரைதான்'' சிரித்தபடியே தன் அனுபவத்தைக் கூறினார் இவர்.

கவிதை இலக்கணம் எதையும் அறியாத இவர் வெறும் ஓசை நயம், பொருள் நயம், இவற்றைக் கொண்டே பாடல்கள் எழுதியுள்ளார். மாதிரிக்கு இதோ சில:—

பாரதி

பலகோடித் தவம் செய்தே பாரதியே உனைப்
பெற்றோம்
சில காலம் வாழ்ந்தாலும் சீர் ஓங்கி நிலை
பெற்றாய்
மலைபோல் துயர் உற்றும் மனம்தளரா
வீரனையா

கலைமகள் தன் அருளால் காவியங்கள்
படைத்திட்டாய்

பெண் படும் பாடு

சுமந்து பெற்றால்தான் சுகம் தெரியும்
உனக்கு
அமர்ந்திருந்தே பார்த்தால் என் அருமை
புரியுமோ?
நயந்தே சொன்னாலும் புரியாத இவ்
வுலகில்
வியந்தே போற்றிட யாரேனும் வருவாரோ?
காப்பி கலந்தாலும் கறுப்பு வெளுப்
பென்றும்
கசப்பு இனிப்பென்னும் கத்தல்கள் ஆரம்பம்
ஆப்பமே சுட்டாலும் அதிருப்திதான் அரைத்
திட்ட
தோசைக்கும் இட்லிக்கும் இதே கதிதானே
பலகாரமே இப்படியென்றால் சமையலைக்
கேட்காதே
உலைவைத்த நேரம் முதல் உறைகுத்தும்
நேரம்வரை
அலை அலையாய் பிரச்னைகள் அடுக்
கடுக்காய் ஏச்சுக்கள்
இல்லம் இதுவென்று ஏன் பெயரிட்டாரோ?

கீர்த்தனை வடிவில் அமைந்த மற்றொரு பாடல்.

ராகம்: ஜோன்புரி தாளம்: ஆதி

பல்லவி

சொப்பனத்தில் வந்தாய் கற்பனைகள்
தந்தாய்
சுந்தர நாயகியே சிவகாமி வல்லி உமையே
(சொப்பன)

அனுபல்லவி

எப்பிறப்பிலும் என்னை மறவேன்
என்றுரைத்தாய்
முப்பிறப்பினில் செய்த நற்றவத்தின் பயனோ
(சொப்பன)

சரணம்

நாதஸ்வரமேளம் நாட்டியம் ஆடிவர
வேத கோஷங்கள் இரு மறைகள் ஓதிவர
சாதனைகள் புரியும் சங்கரி கோமதியே
ஆதங்கம் எனக்கெதற்கு அஞ்சலி அபிராமி
(சொப்பன)

இப்படி வகை வகையாய் நூற்றுக்கணக்கான பாடல்களை எழுதிக் குவிக்கும் இப் பெண்மணி வியப்பிற்கும் பாராட்டிற்கும் உரியவர் தானே?

— லக்ஷ்மி சங்கர்.

இதேபோல் பல ஆற்றல்கள் உள்ள வயதான பெண்மணிகளைப்பற்றி, அவர்கள் திறமைகளைப் பற்றி வாசகர்கள் எழுதி அனுப்பலாமே?



மைசூர் பாகு (ஸ்வீட்) சாப்பிட ஆசை. செய்யவும் தெரியும். ஆனால் நம்மில் பலர், இதை செய்யும் பொழுது பதம் தவறிவிடும் வீணாகிவிடும். இதுபோல் பயமில்லாமல் செய்ய ஓர் எளிய வழி முறை சொல்கிறேன்.

ஒரு கப் கடலை மாவு, 2 கப் சர்க்கரை, 2 கப் நெய் எடுத்துக் கொள்ளவும். ஒரு வாய கன்ற இண்டோலிய வாணலியில் ஒரு கப் கடலை மாவு, 2 கப் சர்க்கரை, கால் கப் தண்ணீர் விட்டு கையினால் (அ) கரண்டியால் கட்டியில்லாமல் தோசை மாவு கரைப்பது போல் சர்க்கரை கரையும் அளவுக்கு நன்றாகக் கரைக்கவும். பிறகு 2 கப் நெய்யை வெது வெதுப்பாக சூடாக்கி தயாராக வைத்துக் கொள்ளவும். இப்பொழுது கரைத்து வைத்துள்ள கடலை மாவு கரைசலை அடுப்பில் வைத்து கை விடாமல் கிளரவும். விரைவில் பாத்திரத்தில் ஒட்டாமல் சுருண்டுக் கொண்டும், நுரைத்தும் வந்து விடும். அப்படி வந்தவுடன் நெய் தடவிய தட்டில் கொட்டி, தட்டை லேசாக தட்டினால் பரவலாக ஆகிவிடும். ஒரு சில நிமிடம் கழித்து நறுக்கிக் கொள்ளவும்.

இது போன்ற முறையில் செய்வதால் பதம் தவறிவிடும் என்ற பயமும் இல்லை. நெய்யும் அதிகம் இழுக்காது. வழக்கமாக செய்யும் முறைக்கு ஒரு கப் மாவு 3 கப் நெய் தேவை. ஆனால் இந்த முறைக்கு 2 கப் நெய்யே போதுமானது. 3 கப் நெய் போட்ட சுவையோடும், மணமும் இருக்கும்.

— பாலா.



எப்போதும் உலர்ந்த உணர்வு+
மும்மடங்கு ஈர்ப்பு
கண்டேன் பிரிமாவை
கொண்டேன் மகிழ்ச்சி!
அதிநவீன ரோஸ் நிற பிரிமா
இரண்டு தனிச்சிறப்பு அம்சங்
கொண்ட - இந்தியாவின்
சானிடரி நாப்கின்
பிரிமாவின் மூன்று
உள்மடிப்புகள்
மிக அதிகமான
உறிஞ்சும் தன்மையை
அளிக்கிறது.
PRIMA
Sanitary Napkins
Sanitary Napkins
ரெகுலர் • பெல்ட் • பெல்ட்லெஸ் எக்ஸ்ட்ரா லார்ஜ் • பெல்ட் • பெல்ட்லெஸ்
10 நாப்கின்கள் கொண்ட பாக்கெட்களும், 8 நாப்கின்கள் கொண்ட
கைக்கு அடக்கமாக பாக்கெட்களும்
இதம் தரும் வளைந்த ஓரங்கள்;
பாதுகாப்பு அளித்திடும்
நிற பிளாஸ்டிக் கவசம்.
வாங்குவீர் பிரிமா,
அந்த உண்மையான — தூய மற்றும் உலர்ந்த தன்மையை உணர்ந்திட
LINTAS M PMA P1 2416 TM

ஆரோக்கியத்தின் அடிப்படைகள்

மனையியல் என்ற பெயரால் இன்று உணவு விஞ்ஞானம் விளக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. உண்மையில் இது மனையியல் அல்ல, விடுதியியலே. ஓட்டல் உணவுகள் வியாபாரத்திற்காகத் தயாரிக்கப்படுபவை. ருசியைப் பிரதானமாகக் கொண்டு, சீக்கிரம் கெடாமல் அதிக நாள் வைத்திருக்க வேண்டும் என்பதற்காக உணவுப் பொருட்களைப் பொரிக்கிறார்கள், வறுக்கிறார்கள்.


வீட்டிற்குள் ஓட்டலா?

ஓட்டல் சமையல் முறைகளைக் காப்பியடித்து வீட்டிலும் பின்பற்றுவது கொடுமையிலும் கொடுமையாகும். இது என்ன நாகரீகம்? வீட்டிற்குள் இந்தப் பிசாசு எப்படி நுழைந்தது? வறுத்தல், தாளித்தல், பொரித்தல், வதக்குதல் போன்ற சமையல் முறைகள் வீட்டிற்குள்ளும் புகுந்து நமது ஆரோக்கியத்தைக் கெடுத்து வருவதைப் பார்க்கிறோம்.

நமது முன்னோர்களிடம் இப் பழக்கம் இருந்ததே இல்லை. எள்ளுருண்டை, சத்துருண்டை, மாஉருண்டைகள் போன்ற தின்பண்டங்களே உண்டு. இவை எந்த விதத்திலும் உடம்பைக் கெடுப்பதே இல்லை. ஆனால், இன்றோ தினமும் பொரிப்பதும், வறுப்பதும், எண்ணெயில் வேக வைப்பதும் மிகுந்து விட்டன.

